


இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 33 c°
குறைந்த வெப்பநிலை 27 c°
வெப்பமான காலநிலை



அரசியல் தலைவர்களைக் கடத்த இந்தியன் முஜாகிதீன்கள் திட்டம்

06



மலேசிய விமானத்தின் சமிக்ஞை தாய்லாந்தில்

07



வென்றது பங்களாதேஷ்

23


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 114 வள்ளுவர் ஆண்டு: 2045 பங்குனி 06, வியாழன் 20.03.2014


## தொடர்கிறது இராணுவ சோதனை

யாழ்ப்பாணம்.மார்ச் 20
கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் நேற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனை நடத்தப்பட்டது. இதனால் மக்கள் பெரும் பதற்றமடைந்துள்ளனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு வீதிகளில் நேற்று அதிகாலை பரந்தன், சிவபுரம், பூநகரி, முட்கொம்பன், ஜெயந்தி நகர் , இந்துபுரம் பகுதிகளை சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கு சோதனைகளை நடத்தினர். அத்துடன் பொலிஸாருடன் இணைந்து வீடுகளுக்கு சென்று விசாரணைகளையும் மேற்கொண்ட னர்.
இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, திருமுறிகண்டி உள்ளிட்ட பகுதிகளிலும் அதிகாலை சோதனை நடத்தப்பட்டது.
இந்த திடீர் நடவடிக்கை காரணமாக மக்கள் பயப்பீதி அடைந்த துடன் வெளி நடமாட்டத்தையும் குறைத்துள்ளனர்.
கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினர் வீதிச்சோதனை நடவடிக்

21 ஆம் பக்கம் பார்க்க

# அஞ்சமாட்டோம் அமெரிக்காவுக்கு

## இலங்கை அரசு இறுமாப்புடன் பதில்

கொழும்பு, மார்ச் 20
இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணை நிறைவேறினாலும், நாம் அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம். இலங்கை அரசின் பொறுப்புகளை வெளிநாட்டுக்குக் கையளிக்க முடியாது. அது எமது அரசமைப்புக்கு முரணானது. பிரேரணை நிறைவேறினாலும் - சர்வதேசத்தின் அழுத்தம் தொடர்ந்தாலும் எவருக்கும் இலங்கை அஞ்சாது- என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கின்ற போதிலும், அவை அமெரிக்காவின் செல்வாக்குக்கு உட்பட்டுள்ளன. அதனால் பிரேரணையை நிராகரிக்க முடியாத நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



ஜி.எல். பீரிஸ்

கொழும்பிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "ஐ.நாவில் இடம்பெற்ற சர்வதேச நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகளுக் கிடையிலான கலந்துரையாடலில் பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் நான் முக்கிய பேச்சில் ஈடுபட்டேன். அப்போது அவர்கள் 'இலங்கையுடன் நாம் சுமுகமான நட்புறவைப் பேணுகின்றோம்.

21 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண கல்வி மாநாட்டில் வெளிநாட்டவருக்கு தடை

யாழ்ப்பாணம், மார்ச் 20
வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் அடுத்த மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள கல்வி மாநாட்டுக்கு வெளிநாட்டு கல்விப் புலமையாளர்கள் யாரையும் அழைக்கக் கூடாதென்று வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உத்தரவிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால், அடுத்த மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கல்வி மாநாடு மிகப் பெரிய அளவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கின் கல்வி நிலைமைகள் தொடர்பில் ஆராய்வது தொடர்பிலும், பொருத்தமான முடிவுகள் எடுப்பதற்காகவுமே இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்

21 ஆம் பக்கம் பார்க்க

## முதலமைச்சரை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு

*வலி.கிழக்கு பிரதேச சபை விவகாரத்தில்*

கொழும்பு, மார்ச் 20
வலி.கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரால், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப் பட்டபோது பிரதிவாதிகளை எதிர்வரும் 4 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரினால் கடந்த 4 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதை அடுத்தே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த அறிவித்தலை விடுத்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் ரி.ஐ.டியினரால் 11 பேர் திடீரெனக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 20
பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தேடப்பட்டு வந்த கஜீபனுடன் (கோபி) தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பெண்கள் உள்பட 11 பேர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அதேவேளைமுல்லைத்தீவு மூங்கிலாறில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி ஒருவர் அவரது இரு பிள்ளைகளுடன் குடும்பமாக கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த மாதம் 6 ஆம் திகதி பளையில், தமிழீழத்தின் காவலர்கள் என்ற துண்டுப் பிரசுரம் வைத்திருந்ததன் பேரில் இருவர் பயங்கரவாத தடுப்புப் பொலி

21 ஆம் பக்கம் பார்க்க

## திருத்தப்பட்ட தீர்மானத்தை முற்றாக நிராகரிக்கின்றோம்

### இலங்கை தெரிவிப்பு

ஜெனிவா, மார்ச் 20
அமெரிக்காவால் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட திருத்தப்பட்ட இரண்டாவது தீர்மான வரைவையும் நிராகரிப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே இலங்கை இவ்

21 ஆம் பக்கம் பார்க்க

## அமைதியையும் சட்டத்தையும் நிலைநாட்ட ஐ.நா. படை இலங்கைக்கு வரவேண்டும்

*நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, மார்ச் 20
இலங்கையில் நிரந்தர அமைதியையும் நீடித்த சட்ட ஆட்சியையும் நிலைநிறுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அமைதிப் படை இங்கு வரவழைக்கப்பட வேண்டும்.
இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கக் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
கிளிநொச்சியில் ஜெயகுமாரி, அவரது மகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் கைதுகள் தொடர்பில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் குறித்து அவர் தனது உரையில் விரிவாக எடுத்துரைத்தார்.
வடக்கு, கிழக்கில் எதற்கெடுத்

21 ஆம் பக்கம் பார்க்க

## விக்னேஸ்வரனுக்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்கு

*வட மாகாண பிரதம செயலாளர் தாக்கல்*

*யாழ்ப்பாணம், மார்ச் 20*
*தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் 5 உயர் அரச அதிகாரிகளுக்கு எதிராக வடக்கு மாகாண பிரதம செயலாளரால் கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

21 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்துக்கு முல்லையில் 29 யுவதிகள் மட்டுமே இணைவு

யாழ்ப்பாணம், மார்ச் 20
இராணுவத்தினரால் பெரும் எடுப்பில் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் முல்லைத்தீவில் 29 தமிழ்ப் பெண்களே இராணுவத்தில் இணைந்துள்ளனர். அவர்களுக்கான பயிற்சிகள் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பித்துள்ளன என்றும்

21 ஆம் பக்கம் பார்க்க



பயிற்சியில் இணைந்து கொண்ட தமிழ் யுவதிகள்

## துன்னாலை யுவதி வன்புணர்வுச் சம்பவம் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார்

*ஏனைய இருவரும் கைதாகவில்லை*

யாழ்ப்பாணம், மார்ச் 20
துன்னாலையில் யுவதியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ளவர், வன்புணர்வுக் குற்றஞ்சாட்டப்பட்ட மூவரில் ஒருவரே என்பதனை பாதிக்கப்பட்ட யுவதியும் அவரது காதலனும் பருத்தித்துறை நீதிமன்றில் வைத்து நேற்று அடையாளம் காட்டினர்.
வன்புணர்வு தொடர்பான வழக்கு கடந்த தவணை எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரபாகரன் என்ற சந்தேக நபரை அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அதன்படி நேற்று நடந்த அடையாள அணிவகுப்பிலேயே பிரபாகரன் அடையாளங்காட்டப்பட்டார். அவரை எதிர்வரும்

21 ஆம் பக்கம் பார்க்க

# சுதந்திரமான விசாரணைக் குழு அமைவது பெரும்பாலும் உறுதி

## சுமந்திரன் எம்.பி. கூறுகின்றார்

ஜெனிவா, மார்ச் 20

இலங்கைக்கு எதிராக சுதந்திரமான விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வலியுறுத்தும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேறுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் அமெரிக்கா நடத்திய முறைசாரா இணைக் கலந்தாய்வின் பின்னர் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் முன்வைத்த தீர்மான வரைவு தற்போது திருத்தப்பட்டுள்ளது. அந்த வரைவு தொடர்பாக நாம் முன்வைத்த அனேக யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வரைவில் திருத்தமாக உட்செலுத்தப்பட்டுள்ளன. இதை நாம் வரவேற்கின்றோம்.

இந்த வரைவின் திருத்தப்பட்ட வடிவம் குறித்து பகிரங்கக் கலந்தாய்வு இடம்பெற்றது. நானும் இலங்கையில் இருந்து வந்திருந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோவும் அங்கு கருத்துக்களை வெளியிட்டோம். இந்தக் கலந்தாய்வு எமக்கு மிகுந்த திருப்தியளிக்கிறது.

கலந்தாய்வின்போது இலங்கை அரசுக்கு ஆதரவாக ஒரு சில நாடுகள் திரும்பத் திரும்ப குரல் எழுப்பின. இருந்தபோதும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் பெரும்பாலான நாடுகள் இந்த திருத்த வடிவம் குறித்து முழு அளவில் திருப்தியடைந்திருக்கின்றன.

இனிமேலும் இந்த வரைவு பலம் பெறுமா, முன்னேற்றம் இருக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எனினும் தற்போதைய நிலையில் இந்த தீர்மான வரைவு வாக்கெடுப்புக்குச் சென்றாலும் கூட எதிர்பார்த்த பெரும்பான்மையோடு அது நிறைவேறும் என்று முழுமையாக நம்புகிறோம்.

அனேகமான நாடுகள் பிரேரணையை ஆதரிக்கத் தீர்மானித்து விட்டன. இதனால் இலங்கைக்கு எதிராக ஒரு அனைத்துலக சுதந்திர விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படும். அதற்கான தீர்மானம் உரிய பெரும்பான்மையுடன் ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் நிறைவேற்றப்படும்"- என்று தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்தாய்வில் 45 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். (ற)

# 24 அம்புலன்ஸ் வாகனங்கள் வடக்கு வைத்தியசாலைகளுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 20

உயிர் காப்பு இயந்திரங்களுடன் கூடிய ஒவ்வொன்றும் 8 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன வசதிகளுடன் கூடிய 24 அம்புலன்ஸ் வண்டிகள் வடக்கிலுள்ள 5 மாவட்டங்களினதும் வைத்தியசாலைகளுக்கு நேற்று வழங்கப்பட்டன.



இந்த அம்புலன்ஸ் வண்டிகள் யாழ். பண்ணையில் உள்ள வடமாகாண சுகாதார அமைச்சில் வைத்து வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் மாவட்ட வைத்திய சாலைகளினது வைத்திய அத்தியட்சகர்களிடம் அவை கையளிக்கப்பட்டன என்று வட மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

யப்பான் ஜிக்கா நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இந்த அம்புலன்ஸ் வண்டிகள் ஒவ்வொன்றிலும் 2 மில்லியன் ரூபா பெறுமதியான உயிர் காக்கும் அவசர சிகிச்சை உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த வசதிகள் இங்குள்ள எந்தவொரு அம்புலன்ஸ் வண்டியிலும் இதுவரை இருந்திருக்கவில்லை.

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களினதும் வைத்தியசாலைகளுக்கு இவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதன்படி கிளிநொச்சிக்கு 7 வண்டிகளும் முல்லைத்தீவுக்கு 6 வண்டிகளும் வவுனியாவுக்கு 3 வண்டிகளும் மன்னாருக்கு 3 வண்டிகளும் யாழ்ப்பாணத்துக்கு 5 வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடமாகாண அவைத்தலைவர், வடமாகாண அமைச்சர்கள், செயலாளர், பணிப்பாளர், வடமாகாண சபை உறுப்பினர்கள் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-4)

# புகையிலை திருட்டு தொடர்கிறது

வலி. வடக்கு, மார்ச் 20

அறுவடை செய்து உலரவிடப்பட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புகையிலையை திருடர்கள் இரவோடு இரவாகத் திருடிச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்றிரவு இணுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி வெளிச்சுவர் உட்பட அதனைச் சுற்றியுள்ள மதில் சுவர்களில் புகையிலைச் செய்கையாளர்கள் மூவர் தமது தோட்டத்தில் வெட்டப்பட்ட புகையிலையை நேற்று மதியம் உலரவிட்டுள்ளனர்.

இதனை அவதானித்த திருடர்கள் புகையிலையைத் தாம் கொண்டு வந்த வாகனத்தில் எற்றிச் சென்றுள்ளனர்.

சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-86)

# 13 வருடங்களுக்கு முன்னரான கொலை; சந்தேக நபர்கள் நிரபராதியென விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 20

13 வருடங்களுக்கு முன்னர் துன்னாலையில் ஒருவரை வாளால் வெட்டிக் கொலை செய்தமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட 7 பேர் தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் நிரபராதிகள் என இனங்கண்டு யாழ். மேல் நீதிமன்றினால் ஆலோசனை கூறி விடுதலை செய்யப்பட்டனர்.

சாட்சிகளின் சாட்சியங்களிலுள்ள முரண்பாடுகள் மற்றும் எதிரிகளின் சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளமை இனங்காணப்பட்டுள்ளன. அதனடிப்படையில் அவர்களை விடுதலை செய்வதாக மேல்நீதிமன்று தீர்ப்பளித்தது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

துன்னாலை தெற்கு கரவெட்டியில் 2001 ஆம் ஆண்டு அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை ஆனந்தராசா (வயது-48) என்பவர் வாளால் வெட்டிக் கடும் காயம் விளைவித்துக் கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர். பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

செல்வராசா மதன், குலசிங்கம் ஜெயவரதன், கந்தையா புஸ்பராசா, செல்லத்துரை கேதீஸ்வரன், செல்வம் ஜெகன், புஸ்பராசா திவாகர், குலசிங்கம் சுதாகர் ஆகியோருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. எனினும் அவர்களில் ஒரு எதிரி ஏற்கனவே உயிரிழந்து விட்டார்.

அவர்கள் தொடர்பான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2005 ஆம் ஆண்டு யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டன. அவர்கள் மீது சட்டவிரோத கூட்டம் கூடியமை, சட்டவிரோத கூட்டத்தின் உறுப்பினர்களாக இருந்தமை மற்றும் ஆனந்தராசாவுக்கு மரணம் விளைவித்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

சாட்சிகளின் முன்னைய சாட்சியங்களில் இல்லாத விடயங்களை இட்டுக் கட்டியுள்ளனர் என்றும் மன்று இனங்கண்டு அவர்களை இந்தக் குற்றச் சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்தது. தவிர அவர்கள் சட்டதிட்டங்களைப் பின்பற்றி செயற்படல் வேண்டும் என்றும் சாட்சிகளுடன் எவ்வித பிரச்சினைகளிலும் ஈடுபடக் கூடாது என்றும் மேல் நீதிமன்று அறிவுரை வழங்கியுள்ளது. (ற-4)

# தமிழக மீனவர்கள் 75 பேர் நேற்று இலங்கை கடற்படையினரால் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த 75 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதுடன் அவர்களது 17 படகுகளையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**75 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை யினர் கைது செய்துள்ளதுடன் அவர்களது 17 படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.**

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள் 5 படகுகளில் நேற்று இரவு கச்சதீவுக்கு அண்மையாக இலங்கை கடற்பரப்புக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்தவேளை இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டு மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை புதுச்சேரியை சேர்ந்த 50 வரையான மீனவர்கள் 12 படகுகளில் நெடுந்தீவுக்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை நேற்றிரவு கைது செய்யப்பட்டனர். இவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

# தெற்கில் ஓடும் இனவாத வண்டிக்காக வடக்கில் புலியை உருவாக்குகிறார்கள்

## கடுமையாகச் சாடுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு, மார்ச் 20

தெற்கில் தனது இனவாத வண்டியை ஓட்டுவதற்காகவே வடக்கில் மீண்டும் புலிகள் உருவாகி விட்டார்கள் என்று கதை விடுகின்றது அரசு. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மறு அவதாரமாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைப் பார்க்க விரும்புகின்றது அரசு - என்று கடுமையாகச் சாடியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"பொது மக்களுக்கு நிறைய கவலைகள் இருக்கின்றன. ஆனால் இந்த அரசுக்கு தனது தவறுகளையும், குற்றங்களையும், கொள்ளைகளையும் மறைத்து அரசியல் செய்யும் வாய்ப்பு படிப்படியாக குறைந்து வருவதை எண்ணிக் கவலை. சிங்கள பௌத்த மக்களை, உசுப்பிவிட்டு இனவாத அரசியல் செய்ய நாள்தோறும் வழிதேடும் இந்த அரசு, இன்று இந்த நாட்டில் பிரிவினை வாதம் இல்லையே என்று கவலைப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்புக்கு வந்த விக்கினேஸ்வரன் நாட்டு பிரிவினை பற்றி பேசவில்லை. அதிகாரப் பிரிவைப் பற்றித்தான் பேசினார். 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறையாகாமல் இருக்கும் அவலத்தை பற்றித்தான் பேசினார். இது இந்த அரசுக்கு கவலை. அவரை பிரபாகரனின் மறு அவதாரமாக பார்க்கவே இந்த அரசு விரும்புகிறது. அப்போதுதான் தெற்கில் தம் இனவாத வண்டி ஓடும் என்பது இவர்களின் நினைப்பு.

### புலிகள் மீள் உருவாக்கம்

அதனால்தான் வடக்கிலே இன்று மீண்டும் புலிகள் உருவாகி விட்டார்கள் என்று அரசு கதை விடுகிறது. அதற்கு சாட்சியாக, உறவுகளை இழந்து தவிக்கும் பாலகி விபூசிகாவையும், தாய் ஜெயகுமாரியையும் கைது செய்து அவர்களைப் பிரித்து வைத்துள்ளது.

முதலில் தந்தையை இழந்த விபூசிகா பின்னர் தனது இரண்டு அண்ணன்மார்களையும் போரில் பறிகொடுத்தார். கடைசியில் தன் கடைசி அண்ணையும் காணாமற் போகக் கொடுத்துவிட்டு தேடி அலைந்தார். இப்போது அவருக்கு இருந்த ஒரே துணையான தாயாரையும் இந்த அரசு பிரித்து பூசா முகாமில் அடைத்துள்ளது.

இன்று விபூசிகா முழுமையான அனாதையாகி நிற்கிறார். இந்த பாலகிக்கு இந்த அநியாயத்தை செய்தவர்கள் தலையில் இடிதான் விழவேண்டும். இந்த அநியாயங்களை செய்து கொண்டிருக்கும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி, வரப் பிரசாதங்களை வாங்கி வைத்து கொண்டு உள்ளே இருந்தபடி வியாக்கியானம் பேசி கொண்டிருப்பவர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும்.

சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த அரசின் இனவாத பூச்சாண்டி இப்போது வெளுத்து வருகின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

இத்தாலி
இலகுவில் பறக்கலாம்
சட்ட ரீதியாக செல்ல
சறுக்கல் இல்லாத
சட்ட ஆலோசனை
(நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016,
021 499 3501.
(45850)(10.6.3)

ஆஸி குடும்பமாகச் செல்ல
பெரிதாக ஒன்றும் தேவையில்லை
ஒன்றன்பின் ஒன்றாக
எல்லோரும் பறக்கின்றனர்.
நீங்களும் வாருங்கள்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016,
021 499 3501.
(45859)(10.6.3)

20 MAR 2014

# செயற்கை முறையிலான 'கள்' விற்பதற்கு வடக்கில் கட்டுப்பாடு

அச்சுவேலி, மார்ச் 20

"வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் செயற்கை முறையில் தயாரிக்கப்படும் கள் விற்பனைக்கு கட்டுப்பாடு விதிப்பது மற்றும் அந்தக் கள் விற்பனையால் ஏற்படும் பாதிப்புக்கள், தீமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சங்கங்களின் செயற்பாட்டை மேல்நிலைப்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்வதற்கான உயர்மட்ட மாநாடுகடந்தவாரம் கிளிநொச்சியில் நடைபெற்றது. இதன் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் வடக்குமாகாண கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான மாகாண சபை உறுப்பினர்கள் எஸ்.சுகிர்தன், எஸ்.சயந்தன் மற்றும் அ.பரஞ்சோதி, எஸ்.சிவயோகன் ஆகியோரும் ஐந்து மாவட்டங்களினதும் உதவிக் கூட்டுறவு ஆணையாளர்கள், வடக்கு மாகாணத்தில் செயற்படும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், தலைவர்கள், மற்றும் பிரமுகர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளை விற்பனை செய்யமுடியாமல் இருக்கின்ற களநிலையில், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட கள் விற்பனை செய்யப்படுகின்றது. செயற்கைக் கள் விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டும்; அது உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கிறது என்று பொது மக்களும் பொது அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக விரிவான முறையில் ஆராயப்பட்டு செயற்கையாகத் தயாரிக்கப்படும் கள்ளின் விற்பனையை மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் கட்டுப்படுத்தி இயற்கையாக சேகரிக்கப்படும் பனங் கள், தென்னங் கள் வகைகளை போத்தலில் அடைத்துக் குறித்த பிரதேசங்களில் நியாய விலையில் விற்பனை செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

செயற்கையாகத் தயாரிக்கப்படும் கள்ளின் பாவனையால் உடல்நலத்துக்கு ஏற்படும் தீமைகள் தொடர்பாக விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளையும் மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டதோடு, பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் எதிர்கால வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவான முறையில் ஆராயப்பட்டன. (வ-11)

# நிவாரணம் கிடைக்காததால் மீள் குடியமர்ந்தோர் அவலம்

*தமிழகத்திலுள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து தென்மராட்சிக்குத் திரும்பியோர்*


தென்மராட்சி, மார்ச் 20

இந்தியாவிலுள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து தென்மராட்சியில் உள்ள தமது சொந்த இடங்களுக்கு திரும்பிய குடும்பங்களுக்கு நான்கு மாதங்களாக உலர் உணவுப் பொருள் நிவாரணம்வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டும் வழங்கப்படவில்லை**

சொந்த இடங்களுக்கு திரும்புவோருக்கு ஆறு மாதங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் இலவசமாக வழங்கப்படும் என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினரால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இந்தியாவிலிருந்து திரும்பி தென்மராட்சிப் பிரதேசத்தில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இதுவரை உலர் உணவுப் பொருள்கள்வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை இந்தியாவிலுள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து வந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு மீளக்குடியமர்ந்த காலம் தொடக்கம் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



ரயில் நிறுத்த மேடை அமைக்கும் பணிகள்

# இரவில் பயணிகளைத் தவிக்கவிட்ட பஸ்

பருத்தித்துறை- யாழ்ப்பாணத்துக்கான பயணிகள் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ்கள் நேற்று முன்தினம் டீசல் இன்றி இடைநடுவில் நிறுத்தப்பட்டன. இதனால் அதில் பயணம் செய்த பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கநேர்ந்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கும் 8 மணிக்கும் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு நெல்லியடி ஊடாக பருத்தித்துறை நோக்கிச் சென்ற இரண்டு பஸ்களே டீசல் முடிவடைந்ததால் இடை நடுவில் நிறுத்தப்பட்டன. அன்றையதினம் இரவு 7.30 மணிக்குப் பருத்தித்துறை நோக்கிப் பயணம் செய்த பஸ் நீர்வேலியிலும், 8 மணியளவில் புறப்பட்ட பஸ் கரணவாய் மூத்த விநாயகர் கோயிலுக்கு அண்மையிலும் டீசல் முடிவடைந்ததால் மேற்கொண்டு பயணிக்க இயலாது நிறுத்தப்பட்டன.

நீர்வேலியில் நிறுத்தப்பட்ட பஸ்ஸில்பயணித்த பயணிகள் 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பஸ்ஸில் ஏற்றி அனுப்பப்பட்டனர். ஆனால் குறித்த பஸ்ஸூம் கரணவாய் மூத்த விநாயகர் கோயிலுக்கு அண்மையில் பஸ்ஸில் டீசல் முடிவடைந்ததால் நிறுத்தப்பட நேர்ந்தது. இதில் பயணம் செய்தபயணிகள் பலர் ஓட்டோக்களிலும் நடந்தும் தமது பயணத்தைத் தொடர்ந்து தமது வீடுகளைச் சென்றடைந்தனர். ஏனையோர் பருத்தித்துறை டிப்போவில் இருந்து வரவழைக்கப்பட்ட மற்றொரு பஸ் மூலம் பருத்தித்துறையைச் சென்றடைந்தனர். (வ-400-173)

# யாழ்.மாவட்ட செயலக பகுதியில் ரயில் மேடை அமைக்கும் பணி

கொழும்புத்துறை, மார்ச் 20

யாழ்ப்பாணத்தை நோக்கி அமைக்கப்பட்டு வரும் ரயில் பாதையில் யாழ்.செயலகப் பகுதியில் ரயில் தரித்து நிற்பதற்கான மேடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்.செயலகத்தில் சேவையாற்றும் பணியாளர்களின் போக்குவரத்து வசதி கருதி குறித்த பகுதியில் ரயில் தரித்துச் செல்ல வசதியாக ரயில் நிறுத்த மேடை நிர்மாணிக்கப்படுவதாக ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை வரை ரயில் சேவை இடம்பெற்று வந்த முன்னைய காலங்களில் காங்கேசன்துறையில் இருந்து பளை வரை நடைபெற்று வந்த குறுந்தூர ரயில் சேவை குறித்த பகுதியில் தரித்து பயணிகளுக்கான சேவையை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

# சின்னம் சூட்டல் நிகழ்வு

தென்மராட்சி, மார்ச் 20

பாடசாலை மாணவர் படையணிகளுக்கு இடையே (கடேற்) நடத்தப்பட்ட போட்டிகளில் தேசிய மட்டத்தில் நான்காமிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர் படையணியினருக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிரிசிங்க, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அதிபர் கப்டன் அ.கயிலாயபிள்ளை ஆகியோரும், கௌரவ விருந்தினராக கடேற் பிரிவு பயிற்சி அலுவலர் லெப்.எஸ்.பவனிதரனும் கலந்துகொள்வர். (வ-9)

# கசிப்பு காய்ச்சியவர் செலுத்தினார் அபராதம்

கிளிநொச்சி, மார்ச் 19

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கிளிநொச்சி, புதுமுறிப்பைச் சேர்ந்த நபரொருவருக்குக் கிளிநொச்சி நீதிமன்றில் நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட மதுவரித்திணைக்களத்துக்குப் பொதுமக்கள் வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற மதுவரி நிலையப் பிரதம பரிசோதகர் றொகான் சஞ்சே ராஜ் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் கசிப்பு உற்பத்தி செய்வதற்காக வைத்திருந்த 15 லீற்றர் கோடாவையும் ஆறு லீற்றர் கசிப்பையும் கைப்பற்றினர்.

**கிளிநொச்சி நீதிமன்றில் நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.**

குறித்த நபருக்கு எதிராகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை, உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்தமை, கசிப்பு வைத்திருந்தமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களின்கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் கசிப்பு உற்பத்தி செய்தமை, உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக தலா ஒரு லட்சம் ரூபா வீதமும், கோடா வைத்திருந்தமை . கசிப்பு வைத்திருந்த குற்றங்களுக்காக தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதித்தார். (வ-9)

தெய்வத்தின் திருப்பாதத்தில்!
இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்
ஆசீர்வாத பெருவிழா!



இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச ஊழியத்தின்
வெற்றிகரமான 36ஆவது சுவிசேஷ மாநாடு!
மார்ச் மாதம் 28ஆம் 29ஆம் 30ஆம் திகதிகளில்
தினமும் மாலை 5.00 மணிக்கு
நகரசபை மைதானம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
(துரையப்பா மைதானம் அருகில்)

பிரியமானவர்களே !
அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம், தோஷங்களிலிருந்தும், விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் செய்வினை கட்டுகள், மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள், ஆசீர்வாதத்தின் நாள். உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தெய்வீக சுகத்தையும், . சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!
உங்களுக்காக பிரார்த்தனை செய்பவர்கள்,
கலாநிதி. M.R. இராஜேந்திரம் அவர்கள். C.V. இராஜேந்திரம் அவர்கள்.


36 ஆவது வருட வேதாகம கருத்தரங்கு!
2014 மார்ச் 23 முதல் 30 வரை தினமும் காலை 8.00 - 2.00 வரை
நடைபெறும் இடம்:- A.O.G சபை மண்டபம், (சி.12655)
68/2, ராசாவின் தோட்டம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். பிரவேசம் இலவசம்
For Information :- Jesus Lives Evangelical International Ministry
T.P. 2522608, Fax- 2525695, Web- Jesusliveslk.com

# களனி பல்கலை மாணவர் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

இலவச கல்வியை அழித்தல் மாணவர்களுக்கு உரிமைகள் இல்லாமல் செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு எதிர்த்து களனி பல்கலைக் கழக மாணவர்கள் வீதி மறியல் மற்றும் ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தினர்.

இதனால் களனி கொழும் புக்கு இடையிலான வீதிப் போக்கு வரத்து பல மணி நேரம் தடைப் பட்டது. நீதி மன்றம் பொலிஸாருக்கு வழங்கிய உத்தரவு அடிப்படையில் போராட்டக் காரர்களை கலைக்க பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இதன்போது தண்ணீர், கண்ணீர் புகைக்குண்டுகள்



போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்

என ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பிரயோகிக்கப்பட்டன. இதேவேளை வீசப்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டுகளை மாணவர்கள் மீளவும் பொலிஸார் மீது வீசியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. நீண்ட நேரத்தின் பின்னர் போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஜ-10)

# மன்னாரில் தீ விபத்து 2 கடைகள் எரிந்து சேதம்

மன்னார், மார்ச் 20

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதி பொது வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் உள்ள கடைத்தொகுதி ஒன்றில் நேற்று புதன் கிழமை அதிகாலை ஏற்பட்ட திடீர் தீவிபத்தின் காரணமாக இரண்டு கடைகள் முற்றாக எரிந்துள்ளன.


உணவகம் மற்றும் இரும்பு வாணிபம் ஆகியவையே தீக்கிரையாகியுள்ளன. அதிகாலை 1.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அதனை அணைக்க முற்பட்டபோது கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியதாக தெரிவிக்கப்படுகிறது.



எரிந்து அழிவடைந்த கடைகள்

தீ விபத்தில் இரு கடைகளிலும் பெறுமதியான பொருள்கள் எரிந்து பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தீ ஏற்பட்ட விதம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-56)

## தென்னங் கன்று விநியோகம்



தென்மராட்சி, மார்ச் 20

சாவகச்சேரி கல்வயல் தென்னைப் பயிர் செய்கைச் சங்கத்தின் அங்கத்தவர் களுக்கு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

கல்வயல் குகன் மில்லுக்கு முன்பாகவுள்ள வீட்டில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதால் அங்கத்துவப் பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் வருகை தருமாறு சங்கச் செயலாளர் அ. பற்குணநாதன் அறிவித்துள்ளார். (ஜ-400-9)

# ஜேர்மனியில் கவனவீர்ப்பு

## ஜெயகுமாரி, மகள் விபூசிகாவை விடுவிக்கக்கோரி

பேர்லின், மார்ச் 20

கிளிநொச்சி மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்ட பாலேந்திரா ஜெயகுமாரி, மகள் விபூசிகா மற்றும் ஏனைய உறவுகளை விடுவிக்கக்கோரி ஜேர்மனியின் பேர்லின் நகரில் அமைந்துள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு முன்பாக தமிழ்ப் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு நிகழ்வு நடைபெற்றது.

கடும் காற்று மற்றும் குளிரிலும் ஒன்றுகூடிய மக்கள் பாலேந்திரா ஜெயகுமாரி, மகள் விபூசிகாவை விடுவிக்கக் கோரி பதாகைகள் ஊடாகவும் துண்டுப்பிரசுரங்கள் ஊடாகவும் தகவலைப் பரப்பினர்.



ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர்

காணாமற் போனோருக்காகப் போராடியவர்களும் கடத்தப்பட்டனர். கடத்தப்பட்டவர்களைத் தேடிச் சென்றவர்களும் கைது செய்யப்பட்ட நிலையில் உலகம் முழுவதும் பரந்து வாழும் ஈழத்தமிழர்களாகிய நாம் தொடர்ந்து எமது உறவுகளின் விடுதலைக்காக குரல் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (வ)

# இரட்டை குடியுரிமை வழங்க கோரிக்கை

## இலங்கை அகதிகளுக்கு



கோப்புப்படம்

சென்னை, மார்ச்.20

இலங்கை அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என்று தமிழ்க் காவிரி இலக்கிய பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்க் காவிரி இலக்கிய பேரவை சார்பில் அகதிகள் நிலை குறித்த கருத்தரங்கம் திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சட்டத்தரணி தமிழகன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், இலங்கை அகதிகளை எப்போதும் சந்தேகக் கண்ணோடு கண் காணிப்பதையும் குறிப்பிட்ட நாள்களுக்கு ஒருமுறை கணக்கெடுப்பு நடத்துவதையும் கைவிட்டு, அவர்கள் சுதந்திரமாக நடமாட உரிமை வழங்கப்பட வேண்டும்.

உயர் கல்விக்கான முழு செலவையும் அரசு ஏற்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இதன்போது "ஈழ ஏதிலியர் ஓர் அறைக்கூவல்" என்ற நூல் வெளியீடும் இடம்பெற்றது. தமிழக சமூகப்பணி மைய இயக்குநர் அருள்தாஸ் நூலை வெளியிட புலவர் அரங்கநாடன் பெற்றுக் கொண்டார். (வ)

**விற்பனைக்கு**

* புத்தகக் கடைப் பாவனையில் உள்ள SHELVES மேசை உட்பட வீட்டுப் பாவனையில் உள்ள W/Machine, Fridge, மேசை என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு : 072 9105407

# வாள் வெட்டில் குடும்பஸ்தர் சாவு

## சந்தேக நபர் தலைமறைவு

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் துரத்தித் துரத்தி வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். எனினும் வாளால் வெட்டிய சந்தேகநபரான கொல்லப்பட்டவரின் மச்சான் முறையானவர். தலைமறைவாகியுள்ளதனால் இது வரை கைது செய்யப்படவில்லை என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் விமலநாதன் (வயது-41) என்ற குடும்பஸ்தரே கொல்லப்பட்டார். அவர் வெளியே சென்று இரவு வீடு திரும்பும் போதே துரத்தித்துரத்தி வாளால் வெட்டப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் அவரது தலை, கை கால் பகுதிகளில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 அளவில் இந்தச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுக் காலை பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட பின்னரே சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடற் கூற்றுப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

கொல்லப்பட்டவருக்கும் அவரது மச்சான் முறையான ஒருவருக்கும் இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடே முரண்பாடாக மாறி அது கொலையில் முடிந்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். விரைவில் கைது செய்யப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி கனகசபை

(புங்குடுதீவு வித்துவான் பொன். க. கனகசபை அவர்களின் மனைவி பராசக்தி)



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 182 சுச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கனகசபை நேற்று (19.03.2014) காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கதிரித்தம்பி - யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - கற்பகம் தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற வித்துவான் பொன். அ. கனகசபை (ஓய்வு பெற்ற அதிபர்) இன் அன்புமனைவியும் கமலாஜினி, கலைச்செல்வி (ஓய்வு பெற்ற லிகிதர் கச்சேரி கிளிநொச்சி) காலஞ்சென்ற காந்திஅழகன் (இலங்கை வங்கி) மற்றும் சத்தியதேவி (மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்), அருள்அரசி (விலை மதிப்பீட்டு திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவதாசப்பிள்ளை (ஓய்வுநிலை தபாலதிபர்), பாலசுப்பிரமணியம் (உருத்திரபுரம் சேவிசர்), ஜெயராணி (கொழும்பு), மகாதேவன் (பிரான்ஸ்), குலசேகரம் (புங்குடுதீவு மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தினேஸ்குமார் மற்றும் Dr. மதிவதனன் (யாழ். போதனா வைத்தியசாலை), மாலினி (பிரதேச செயலகம் பூநகரி) காலஞ்சென்ற சேயோன் மற்றும் ஜனகன் (பிரான்ஸ்), சங்கீதா, பிரசாத் (லண்டன்), ஸ்ரீசனாத் (லண்டன்), பங்கஜன் (கொழும்பு), அனுஜன் (கனடா), பிரணவன், பிரசோபன், பானுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வைஷாலி, அபிஷனா, வைஸ்ணவி, கௌதமி, விநுஸ், அஸ்வின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2014) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

182 சுச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 2229449

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா தம்பையா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா தம்பையா நேற்று (19.03.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - ஈஸ்வரி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும் தம்பையாவின் அன்புமனைவியும் காலஞ் சென்றவர் களான சுப்பிரமணியம் குணவதி, செல்வராசா மகாலட்சுமி ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.03.2014) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்: சிவசுப்பிரமணியம் (அப்பன் தடை)

20 MAR 2014
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் விசனம்

## சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில்

யாழ்ப்பாணம்.மார்ச் 20
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இத்தகைய தொரு வசதி மேற்கொள்ளப்படாதமை குறித்துப் பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 210 மாற்றுத்திறனாளிகளுக்குச் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்ற, மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கும் நடமாடும் சேவையின்போது இந்த மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவச் சான்றிதழ்களை கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களப் பரிசோதகர்கள், சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக மருத்துவ சான்றிதழ் வழங்கும் நுகேகொடையிலுள்ள மருத்துவ அதிகாரிகள் ஆகியோர் இணைந்து வழங்கியுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் இந்த மருத்துவச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் ஏற்கெனவே மாற்றுத் திறனாளிகள் தமது தொழில் வாய்ப்புக்காகச் சாரதி அனுமதிப்பத்திரம் கோரி யாழ். மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம்விண்ணப்பித்த நிலையில், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இந்த நிபந்தனைகள் விண்ணப்பதாரிகளுக்குப் பொருந்தாத நிலையில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பதுடன் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் திண்டாடுகின்றனர்.

இந்த நிலையில் வட மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

**வட மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ள இந்தத் திட்டத்தை ஏனைய மாவட்டங்களிலும் நடை முறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.**


## கால்வாய் நோய் தடுப்பூசி ஏற்றல் உடுவிலில் இன்று

வலி.வடக்கு, மார்ச் 20
உடுவில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் கால்நடைகளுக்கான கால்வாய் நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணி இடம்பெறவுள்ளது.

கால்வாய் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படாத கால்நடைகளுக்கு நடமாடும் சேவைமூலம்தடுப்பூசி ஏற்றும் பணியை அந்தப் பகுதி கால்நடை வைத்திய அதிகாரி எஸ். விமலகுமார் மேற்கொண்டுள்ளார்.

இணுவில் மஞ்சத்தடி வட்டுவினி பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி மற்றும் இணுவில் மேற்கிலும் கால் வாய் நோய் தடுப்பூசி ஏற்றும் பணி இன்று இடம்பெறவுள்ளது. எனவே இதுவரை கால்வாய் நோய்க்கான தடுப்பூசியைத் தமது கால்நடைகளுக்கு ஏற்றுவிக்கத் தவறிய கால்நடை வளர்ப்பாளர்களைத் தவறாது தடுப்பூசியை ஏற்றுவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## செயற்கைமுறை சினைப்படுத்தல் உடுவிலில் ஆரம்பம்



கோப்புப்படம்

வலி.வடக்கு, மார்ச் 20
உடுவில் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள கால்நடைகளில் சுமார் அறுபது வீதமான மாடுகளுக்குக் கால்வாய் நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், தற்போது செயற்கைமுறைச் சினைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கால் நடை வைத்திய அதிகாரி எஸ். விமலகுமார் தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேசத்தில் சுமார் 4 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட மாடுகள் உள்ளதாகவும் அவற்றில் இதுவரையில் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாடுகளுக்கு கால்வாய்நோய் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாகவும் ஏனைய மாடுகளுக்கு கால்வாய் நோய் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நடமாடும் சேவை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-86)

## கத்திக் குத்துச் சம்பவம்; சந்தேகநபர் கைதானார்


வலி.வடக்கு, மார்ச் 20
புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடைப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பத்து தினங்களின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைத்தோட்டத்தில் மாடு நுழைந்து வாழையை நாசம் செய்ததாகக் கூறி இருதரப்பினர்களுக்கு இடையே எழுந்த வாய்த் தர்க்கம் இறுதியில் கத்திக் குத்தில் முடிவடைந்தது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த இராசேந்திரன் செல்வரஞ்சன் (வயது-45) என்பவர் தனது ஒன்றரை வயதுப் பிள்ளையை கையில் வைத்திருந்த நிலையில் கத்திக் குத்துக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தக் கத்திக் குத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தலைமறைவாகியதைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட புலன் விசாரணைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் பிற்பகல் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரைப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தவுள்ளனர். (வ-86)

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு மெத்தைகள் அன்பளிப்பு



சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விடுதிகளின் பயன்பாட்டுக்கென ஒரு தொகுதி மெத்தைகளும் படுக்கை விரிப்புகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கந்தையா கிருஷ்ணர், திருமதி கந்தையா சிவபாக்கியம், கதிரன் நவசி, சந்திரபுரத்தைச் சேர்ந்த பொன்னையா ஆசைப்பிள்ளை ஆகியோரின் நினைவாக மருத்துவமனைக்கு மெத்தைகளும் படுக்கை விரிப்புகளும் நேற்று வழங்கப்பட்டன. மட்டுவில் கிராம அலுவலர் க.வாமதேவனின் ஏற்பாட்டில் குறித்த குடும்பங்களின் உறுப்பினர்களால் மருத்துவமனை அபிவிருத்திச் சங்கப் பிரதி நிதி க.கேதீஸ்வரனிடம் படுக்கை விரிப்புக்கள், மெத்தைகள் கையளிக்கப்பட்டன. (வ-9)




ஆலய வளாகத்தில் கூடிக்குலாவும் கைதடி இல்ல முதியோர்கள்

## பன்றித்தலைச்சி அம்மனை வழிபட்ட கைதடி இல்லத்தின் முதியோர்கள்

தென்மராட்சி, மார்ச் 20
கைதடி முதியோர் இல்ல வரலாற்றில் முதல் தடவையாக இல்லத்தில் உள்ள 40 முதியோர்கள் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலயத்துக்கு ஆலய தரிசனத்துக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆலய தரிசனத்தை முடித்த முதியோர்கள் ஆலயத்தில் பாத்திரம் வாங்கி ஆலய வளாகத்தில் விற்பனை செய்யப்பட்ட மரக்கறி, அரிசி ஆகியவற்றை கொள்வனவு செய்து சமைத்துக் குழைசாதம் தயாரித்தனர். குழை சாதத்தைத் தாங்களும் உண்டு அங்கு நின்ற அடியார்களுக்கும் வழங்கினர். முதியோர் இல்லத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்த அடியார்கள் தாங்கள் பொங்கிய பொங்கலை முதியோர்களுக்கு வழங்கினர். மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட முதியோர்கள் அவற்றையும் தாம் சமைத்த குழை சாதத்தையும் முதியோர் இல்லத்துக்கு எடுத்துச் சென்று பிரசாதமாக வழங்கினர். (வ-9)

## கலை ஆற்றல் உள்ளோரின் எண்ணக்கருவை வெளிப்படுத்திய கலைச் சிதறல் கண்காட்சி



மாணவர்களால் உருவாக்கப்பட்ட கலைப் பொருள்களின் கண்காட்சி

தென்மராட்சி, மார்ச் 20
கலை ஆர்வமும், கலை நுட்பமும், கலை ஆற்றலும் உள்ளவர்களின் எண்ணக் கருக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கலைச் சிதறல் பொருள்கள் விருந்தினர்கள், பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்து பங்குகொண்ட மாணவர்களை பாராட்ட வைத்தது.

உசன் இராமநாதன் மகா வித்தியாலய அழகியல் பாட ஆசிரியை திருமதி ஜானகி ஆனந்தகிருபனின் வழிநடத்தலில் வித்தியாலய மாணவர்களால் உருவாக்கப்பட்ட கலைப் பொருள்களின் கண்காட்சி அண்மையில் வித்தியாலயமண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் த.நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியின் கண்காட்சிக்கூடங்களை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், வலய அழகியல்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதன், திருக்கோவில் கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சிறிதரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு ஆக்கங்களும் கலை ரசனையை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தன. குறிப்பாக மரங்களின் வேர்களிலிருந்து உருவாக்கப்பட்ட கலை நுட்ப வடிவிலான ஆக்கங்கள் பார்ப்போரின் மனதை கவரும் வகையில் தத்ரூபமாகக் காட்சியளிப்பவை போல் காணப்பட்டன. (வ-9)

## 21 மில் செலவில் புனரமைக்கப்படவுள்ள எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தி.

தென்மராட்சி, மார்ச் 20
போர் வேளையில் சிதைவடைந்த எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயக் கட்டடங்களை 21 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கச் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் முன்வந்துள்ளனர்.

வித்தியாலயத்தின் எதிர்கால நலன்கருதி கட்டடங்கள் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று வியாழன் முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலோசனைக் கூட்டத்தில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனப் பிரதிநிதிகள், தென்மராட்சி கல்வி வலய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவிருப்பதால், பாடசாலை நலனில் அக்கறையுள்ளோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பனை ஓலைகள் விழுந்ததில் இளைஞன் காயம்


வலி.வடக்கு, மார்ச் 20
பனை ஓலை வெட்டி வீழ்த்தப்பட்ட வேளையில் பனை மரத்தின் கீழ் சென்றவர் மீது பனை ஓலைகள் விழுந்ததால் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நேற்று முன்தினம் பிற்பகல் சேர்க்கப்பட்டார்.

ஏழாலை வடக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மகாதேவன் விஜிதரன் (வயது-20) என்பவரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவராவார். (வ-86)

# அரசியல் தலைவர்களைக் கடத்த இந்தியன் முஜாகிதீன்கள் திட்டம்

## உளவுத்துறையினர் எச்சரிக்கை

புதுடில்லி,மார்ச் 20
டில்லியில் அரசியல் தலைவர்களைக் கடத்த இந்தியன் முஜாகிதீன் பயங்கரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.




இது குறித்து உளவுத்துறை தெரிவித்துள்ள தாவது:-
ஒரு பயங்கரவாதச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு மகாராஷ்டிரா சிறையில் இருக்கும் இந்தியன் முஜாகிதீன் அமைப் பின் தலைவர் யாசின் பட்கல் மற்றும் அவரது கூட்டாளி அசதுல்லா அக்தர் ஆகியோரை விடுதலை செய்ய வலியுறுத்தி டில்லியில் அரசியல் தலைவர்களைக் கடத்த அந்த அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர்.
மேலும், இந்திய முஜாகிதீன் மற்றும் சிமி அமைப்புக்கள் இணைந்து, மக்களவைத் தேர்தலின்போது டில்லியின் முக்கிய இடங்களைத் தாக்க முடிவு செய்துள்ளதாகவும் உளவுத்துறை கூறியுள்ளது.
கடந்த 2008ஆம் ஆண்டு டில்லியில் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி எனச் சந்தேகத்தின் பேரில் யாசின் பட்கல் மற்றும் அவரது கூட்டாளி அசதுல்லா அக்தர் கடந்த 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டனர்.
இந்நிலையில் அவர்களை விடுவிக்கக் கோரி டில்லியில் தேர்தல் சமயத்தில் அசம்பாவிதங்களை ஏற்படுத்தவும், முக்கிய அரசியல் தலைவர்களைக் கடத்தவும் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து டில்லியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது - என்று கூறப்பட்டுள்ளது. (து)

## ஒரே நாளில் 10 இடங்களில் ஸ்டாலின் பிரசாரம்

காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதிக்கு உள்பட்ட பகுதியில் திமுக வேட்பாளர் ஜி.செல்வத்தை ஆதரித்து 10 இடங்களில் தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரசாரம் செய்தார்.
காஞ்சிபுரம் மக்களவைத் தனித்தொகுதியில் தி.மு.க வேட்பாளராக ஜி.செல்வம் அறிவிக்கப்பட்டுள்ளார். இவரை ஆதரித்து, காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதிக்கு உள்பட்ட பகுதியில், நட்சத்திரப் பேச்சாளரும் கட்சியின் பொருளாளருமான மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை 10 இடங்களில் தலா 15 நிமிடங்கள் பிரசாரம் செய்யக் கட்சி சார்பில் திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணி அளவில், கேளம்பாக்கத்துக்கு வாகனத்தில் வந்த ஸ்டாலின், வாகனத்தில் இருந்தபடியே சுமார் 15 நிமிடங்கள் பேசிப் பிரசாரத்தை தொடங்கினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, திருப்போரூர், மாமல்லபுரம், புதுப்பட்டினம், திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு, பழையசீவரம், வாலாஜாபாத், அய்யம்பேட்டை, காஞ்சிபுரம் ஆகிய 10 இடங்களில் வாகனத்தில் இருந்தபடி பிரசாரத்தில் ஈடுபட்டார். வழி நெடுகிலும் தொண்டர்கள் வெடிகளை வெடித்து, ஸ்டாலினை வரவேற்றனர். (து)

## கேஜ்ரிவால் கூட்டத்துக்கு அனுமதி மறுப்பு

வாரணாசியில் போட்டியிடும் பா.ஜ.க வேட்பாளர் நரேந்திர மோடியை எதிர்த்து போட்டியிடும் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவால், எதிர்வரும் 23ஆம் திகதி நடத்த திட்டமிட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
வாரணாசியில் 23ஆம் திகதி ஆம் ஆத்மி நடத்த இருந்த பொதுக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியாிடம் அனுமதி கோரப்பட்டது.எனினும், அந்த நாளில், உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதால் பொதுக் கூட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து, ஆத் ஆத்மியின் பொதுக்கூட்டம் 25ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள் ளது. (து)

# அழகிரியுடன் தொடர்பு வேண்டாம்

## தி.மு.கவினருக்கு கருணாநிதி எச்சரிக்கை

சென்னை,மார்ச் 20
மு.க.அழகிரியுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளகூடாது என்று கட்சியினருக்குத் தி.மு.க கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இது தொடர்பாக தி.மு.க பொதுச் செயலர் க.அன்பழகன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக்கழகம் போற்றி வளர்த்து வரும் கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டைச் சீர்குலைக்கும் வகையில், யார் செயல்பட்டாலும் அதை என்றைக்கும் கழகத்தின் தலைமை பொறுத்துக் கொள்ளாது என்பதைக் கடந்தகாலக் கழக வரலாற்றைத் தெரிந்தவர்கள் உணர்வார்கள்.
இன்றையச் சூழ்நிலையில் கழகத்திலிருந்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, விலக்கி வைக்கப்பட்டுள்ள தென்மண்டல முன்னாள் அமைப்புச் செயலாளர் மு.க.அழகிரி, தனது ஆதரவாளர்களுடன் கலந்து பேசச் சந்திப்பு என்ற பெயரில் ஆங்காங்கு கூட்டங்கள் ஏற்பாடு செய்து, கழகத் தோழர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்ற செய்தி தலைமைக் கழகத்துக்குக் கிடைத்து வருகிறது.
தி.மு.கவில் இருந்து தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ள மு.க.அழகிரியுடன் எந்தவிதமான தொடர்பும் கழகத் தோழர்கள் யாரும், எந்தப் பொறுப்பில் உள்ளவர்களாயினும் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதை மிகவும் கண்டிப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
இவ்வறிக்கையை மீறிக் கழக உறுப்பினர் எவரும் செயல்படுவதாகத் தலைமைக்குத் தகவல் வருமேயானால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்-என்றுள்ளது. (து)

## திரைப்படமாகின்றது ஜெயலலிதா வரலாறு

சென்னை,மார்ச் 20
பரிவர்த்தன் அதாவது மாற்றம் தற்காலிகமாக அந்த திரைப் படத்துக்கு வைக்கப்பட்டுள்ள பெயர். தலைப்பில் மட்டுமல்ல தயாரிப்பிலும் கூட மாற்றம் வருவதற்கு வாய்ப்புண்டு. ஏனெனில், அது முதல்வர் ஜெயலலிதாவைப் பற்றிய வாழ்க்கை வரலாறு குறித்த திரைப்படத்துக்கான தலைப்பு.
பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்து, அ.தி.மு.க. வில் தன்னைச் சாதாரண தொண்டராக இணைத்துக் கொண்டவர், கோவையைச் சேர்ந்த ராமசுப்ரமணியன். அவர்தான் இந்த திரைப் படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கி உள்ளார். சந்திரா, முகபுதா உட்பட, பல படங்களை இயக்கி, நடித்துப் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள கர்நாடகாவைச் சேர்ந்த பிரபல பெண் இயக்குநர் ரூபா ஐயர் இந்தத் திரைப்படத்தை இயக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். (து)

# பாலுவுக்கு எதிராக வலைதள பிரசாரம்

சென்னை.மார்ச் 20
டி.ஆர். பாலுவின் சாதனைகளை விளக்கும் அவரது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்த மீத்தேன் திட்டத்துக்கான அவரது பங்களிப்பை உறுதி செய்யும் பக்கம் அகற்றப்பட்டுள்ளது. இதை வைத்தே மீத்தேன் திட்ட எதிர்ப்பாளர்கள் பாலுவுக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.
டெல்டா மாவட்டங்களில் 667 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மீத்தேன் எரிவாயுவை உறிஞ்சி எடுக்கும் உரிமம் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 2010 இல் மத்திய அரசால் வழங்கப்பட்டது.
2011இல் அப்போதைய துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டத்தை எதிர்த்து இப்போது டெல்டா மாவட்டங்களில் தொடர் போராட்டங்கள் நடந்து வருகின்றன.
முதல்வர் ஜெயலலிதா, இந்தத் திட்டத்துக்கு தாற்காலிகத் தடை விதித்து, இதைக் கொண்டு வந்த தி.மு.கவையும் கடுமையாகச் சாடி வருகிறார். தி.மு.கவும் மத்திய அரசு இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.
டி.ஆர். பாலு அண்மையில் தஞ்சைக்கு வந்தபோது, "நீங்கள் தான் மீத்தேன் திட்டத்தை கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறதே. இந்தத் திட்டத்தில் உங்களது நிலைப்பாடு என்ன? என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "இத்திட்டத்தால் அதிக அளவில் நிலத்தடி நீர் வெளியேற்றப்பட்டு, கடல் நீர் உள்ளே புகும் என்பதால் விவசாயம் பாதிக்கும். அதனால் திட்டத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டு அவசரமாகக் கிளம்பினார்.

> "17ஆம் திகதி இரவுவரை காணப்பட்ட டி.ஆர். பாலுவின் அந்தப் பக்கம் மட்டும் செவ்வாய்க்கிழமை நீக்கப் பட்டுள்ளது.

டி.ஆர்.பாலுவின் சாதனைகளை விளக்கும் அதிகாரபூர்வ இணையதளத்தில், 'நான் பெற்றோலியத்துறை அமைச்சராக இருந்தபோது, இந்தியாவில் நிலக்கரி படிமத்திலிருந்து மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்துக்கான கொள்கை வகுப்பதிலும் செயல் வடிவம் தருவதிலும் பங்கு வகித்தேன் என்று 17ஆம் திகதி இரவுவரை காணப்பட்ட டிஆர். பாலுவின் அந்தப் பக்கம் மட்டும் செவ்வாய்க்கிழமை நீக்கப்பட்டுள்ளது.
ஆனால், முன்னரே பதிவிறக்கம் செய்து வைத்திருந்த அந்தப் பக்கத்தை இப்போது சுற்றுக்கு விட்டுள்ளனர் மீத்தேன் திட்ட எதிர்ப்பாளர்கள். இதை வைத்து மீத்தேன் திட்ட எதிர்ப்பாளர்கள் பாலுவுக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகின்றனர். (கு)



ஆந்திரா மாநிலத்தில் பல பகுதிகளிலும் காங்கிரஸ் பிரதமர் வேட்பாளர் ராகுல் காந்தி சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகிறார். அவர் மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கருத்தை அறிகிறார். (து)

# ராஜ்நாத் சிங் இன்று தமிழகம் வருகிறார்

## பா.ஜ.க கூட்டணியில் இறுதி முடிவு

சென்னை,மார்ச் 20
பல நாள்களாக இழுபறி நிலை நீடித்து வரும் , தமிழக பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் உடன்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும், இன்று அகில இந்திய தலைவர் ராஜ்நாத்சிங் சென்னையில் முறைப்படி அறிவிப்பார் என்றும் இந்தக் கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.
தமிழகத்தில் பா.ஜ.கவுடன் ம.தி.மு.க., தே.மு.தி.க., பா.ம.க., கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சி , ஐ.ஜே.கே., ஆகியன இணைந்து கூட்டணியை உருவாக்கியுள்ளன. இந்த அணியில் யாருக்கு எத்தனை இடம் ? யாருக்கு எந்த தொகுதி என்ற முடிவு ஏற்படாமல் இருந்து வருகிறது. சில கட்சிகள் சேலம், திருப்பூர், தென்காசி, சென்னை உள்ளிட்ட தொகுதிகளைக் குறிப்பிட்டு கேட்டு வருகின்றன. இதனால் இழுபறி நிலையில் உள்ளது. மேலும் பா.ம.க இந்த விடயத்தில் அடம் பிடிப்பதாகத் தெரிகிறது. இருப்பினும் சில வேட்பாளர் அறிவிக்காத நிலையிலும் விஜயகாந்த் நேற்று முன் தினம் நீலகிரி



தொகுதில பா.ஜ.கவுக்கு ஆதரவு கேட்டுப் பிரசாரம் செய்தார். ஊழலற்ற ஆட்சியை மோடியால் மட்டுமே தர முடியும் என்பதால் தான் பா.ஜ.கவை ஆதரிப்பதாகப் பிரசாரம் செய்தார். இதனால் இவர் கூட்டணியில் இருந்து விலகிச் செல்லமாட்டார் என்பது உறுதியாகிறது.
இந்நிலையில் அனைத்து பேச்சுக்களும் முடிந்து விட்டதாக மாநில பா.ஜ.க தலைவர் பொன். ராதாகிருஷ்ணன், தமிழக பா.ஜ.க தேர்தல் பொறுப்பாளர் முரளீதரராவ் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இன்று கட்சியின் அகில இந்திய தலைவர்ராஜ்நாத்சிங்சென்னை வருவார். அவர் இதனை உறுதியாக, இறுதி முடிவை அறிவிப்பார் என்றும் கூறியுள்ளனர். (து)

## ரஷ்யா எச்சரிக்கை

கிரைமியாவுக்கு எதிராக மேற்குலகம் பொருளாதாரத் தடையினைக் கொண்டு வருவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதனால் பாரதூரமான விளைவுகளை அமெரிக்கா எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் ரஷ்யா எச்சரித்துள்ளது.

ரஷ்யா வெளிவிவகார அமைச்சர் இந்த எச்சரிக்கையைத் தொலைபேசியின் ஊடாக அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் ஹெரிக்கு தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுடன் கிரைமியா இணைவது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து மேற்குலக நாடுகள் பொருளாதாரத் தடையைக் கொண்டுவருவது குறித்து ஆலோசித்து வரும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த)



காணாமற்போன மலேசிய விமானத்தைத் தேடும் பணியில் அமெரிக்கக் கடற் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்காக அவர்கள் விமானம் தாங்கிக் கப்பல்களையும் பயன்படுத்தி வருகின்றனர். (த)

## உக்ரைன் கடற்படைத் தளத்தினுள் ரஷ்ய ஆதரவாளர்கள் நுழைந்தனர்

மொஸ்கோ,மார்ச் 20

கிரைமியாவை ரஷ்யா தன்னுடன் இணைக்க நடவடிக்கை எடுத்த மறுதினம், செவஸ்டோபோலில் உள்ள கிரைமிய துறைமுகத்தின் உக்ரைன் கடற்படைத்தளத்தினுள் பல நூற்றுக்கணக்கான ஆயுதம் தாங்கிய ரஷ்ய ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் அதிரடியாக நுழைந்துள்ளனர்.

உக்ரைன் கடற்படையினர் அந்தக் கடற்படைத் தளத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்பதற்காக அவர்கள் அங்கு சென்றதாக நம்பப்படுகின்றது.



ரஷ்யக் கொடிகள் அங்குள்ள கட்டடங்களில் பறக்கின்றன.

கிரைமியாவில் ஒரு ஆயுத மோதல் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அங்கு இரு அரச அமைச்சர்கள் செல்வதாக உக்ரைன் கூறுகின்றது.

ஆனால், அவர்களை அங்கு அனுமதிக்க மாட்டோம் என்று ரஷ்ய ஆதரவிலான அரச அதிகாரிகள் கூறியுள்ளனர். (த)

## தற்கொலைத் தாக்குதல் ஆப்கானில் 17 பேர் சாவு

காபூல்,மார்ச் 20

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானால் அடுத்த மாதம் 5ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானின் பர்யாப் மாகாணத்தின் தலைநகரான மைமானா பகுதியில் உள்ள ஆளுநர் மாளிகையின் அருகே நேற்று முன்தினம் மாலை இந்தத் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் மேலும் 26 பேர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த)

# மலேசிய விமானத்தின் சமிக்ஞை தாய்லாந்தில்

## இராணுவ ராடரில் பதிவாகியது

பாங்கொக், மார்ச் 20

பத்து நாள்களுக்கு முன்னர் காணாமற்போன மலேசியன் எயார்லைன்ஸ் விமானத்திலிருந்து வந்திருக்கக்கூடிய சமிக்ஞைகள் தனது இராணுவ ராடரில் பதிவாகியிருப்பதாக, இப்போது அண்டை நாடான தாய்லாந்து கூறுகிறது.

இந்தச் சமிக்ஞைகள் மலாக்கா நீரிணையை நோக்கி அந்த விமானம் மேற்குப்புறமாகப் பறந்து கொண்டிருந்தது என்பதைக் காட்டுவதாக அது கூறியது.

தாய்லாந்தின் இந்தத் தகவல், முன்னர் மலேசிய இராணுவம் தெரிவித்த உறுதிப்படுத்தப் படாத தகவலுக்கு வலுச் சேர்க்கிறது.

மலேசியா தகவல் கோரி முதலில் கொடுத்த வேண்டுகோள் குறிப்பானதாக இல்லாமல் இருந்ததால் இந்தத் தரவை இப்போதுவரை வெளியிடவில்லை என்று தாய்லாந்து விமானப்படையின் எயார் வைஸ் மார்ஷல் மோண்டோல் சுச்சோகோர்ன் கூறினார்.

இதனிடையே, காணாமற்போன இந்த விமானத்தைக் கண்டுபிடிப்பதற்காக, சீனா, மேலும் 9 கப்பல்களைப் புதிய பல பகுதிகளுக்கு அனுப்பியிருக்கிறது.

இந்தக் கப்பல்கள் வங்காள விரிகுடாவுக்குத் தென்கிழக்குப் பகுதிக்கும், இந்தோனேசியாவின் மேற்குப் பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த விமானத்தைத் தேடும் பணியில் இப்போது 26 நாடுகள் ஈடுபட்டிருக்கின்றன.




சீனக் கடற்படைக் கப்பல்கள்

சீனக் கப்பல்கள் சிங்கப்பூரிலிருந்து புதன்கிழமை அதிகாலை புறப்பட்டுச் சுமார் மூன்று லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள பகுதியில் தேடுதல் வேட்டையை நடத்திச் சென்றிருப்பதாகச் சீன அரச செய்தி நிறுவனமான ஷின்ஹூவா தெரிவித்தது.

மற்றுமொரு திருப்பமாக, மாலைதீவில் சிலர் இந்த விமானம் காணாமற்போன நாளில், குடாஹூவாதோ தீவில் வானில் மிகவும் குறைவான உயரத்தில் ஓர் விமானம் பறந்து கொண்டிருந்ததைப் பார்த்ததாகக் கூறியதை அடுத்து, மாலைதீவு அதிகாரிகள் இது குறித்து விசாரணை நடத்துகின்றனர் என்று ஏ.எப்.பி செய்தி நிறுவனம் கூறியது.

விமானத்தைத் தேடும் இந்த முயற்சி இப்போது உலகம் முழுவதும் சுமார் 2.24 மில்லியன் சதுர கடல் மைல்கள் பகுதியில் நடப்பதாக மலேசிய அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

(த)

# வேகமாகப் பரவும் மலேசிய விமான வதந்திகள்

## பின்னணியில் ஹக்கர்கள்

விபத்துக்கள், இயற்கை இடர்கள் இடம்பெறும்போது, அது தொடர்பிலான தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அனைவருக்கும் இருக்கும். இணையத்தின் வழியாக உலகம் விரல் நுனிக்கு வந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில், இந்த ஆர்வத்தையும் அக்கறையையும் தவறாகப் பயன்படுத்திக் கொள்வதற்கென்றே ஒரு கூட்டம் இருக்கிறது.

கடந்த 10 நாள்களுக்கும் மேலாகக் காணாமற் போயிருக்கும் மலேசிய விமானம் பற்றிய தகவல்கள் ஒவ்வொரு மணி நேரமும் வெவ்வேறு கோணங்களில் இணையச் செய்தி இதழ்களில் வெளிவருகின்றன. இதற்கு நடுவே, பீதி கிளப்பும் வதந்திகளும் பொய்த் தகவல்களும் பரப்பப்படுகின்றன. பெர்முடா முக்கோணப் பகுதியில் மலேசிய விமானம் விழுந்துகிடக்கிறது. எனினும் பயணிகள் பத்திரமாக உள்ளனர். இந்த வீடியோவைப் பாருங்கள் என்ற பதிவை பேஸ்புக்கில் பலரும் பகிர்ந்து வருகின்றனர். இதன் பின்னணியில், வழக்கம்போல, மல்வேர் எனப்படும் கணினிகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய மென்பொருள்களை உருவாக்கிப் பரப்பும் ஹக்கர்களின் கைவரிசை உள்ளது.

அதுவும் இந்த வீடியோவை பி.பி.சி., சி.என்.என். போன்ற செய்தி நிறுவனங்கள் வெளியிட்டுள்ளதாகக் கூறி அந்த வதந்தியின் நம்பகத் தன்மையைக் கூட்ட ஹக்கர்கள் முயல்கின்றனர். அந்த




வெளியிடப்பட்டுள்ள படம்

வீடியோவைப் பார்க்க வேண்டும் என்றால் முதலில் அதைப் பகிர வேண்டும் என்றொரு நிபந்தனைக் கட்டளையையும் ஹக்கர்கள் விதிக்கின்றனர்.

ஆனாலும், இதை நம்பியோ அல்லது என்னதான் சொல்கிறார்கள் என்று பார்க்க விரும்பியோ குறிப்பிட்ட வலைத் தளங்கள் அல்லது பேஸ்புக் பதிவுகளுக்குச் செல்பவர்கள் பலர்.

அவர்கள் ஒன்றும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புவதுடன் விடயம் முடிந்து விடவில்லை. இந்த விடயத்தின் மறுபக்கத்தில் ஹக்கர்கள் பெருமளவிலான பணத்தை அள்ளுகின்றனர்.


அதாவது குறிப்பிட்ட வீடியோவைப் பார்க்க வேண்டுமானால் உங்கள் சுயவிவரங்கள் வேண்டும். இது ஒரு கணக்கெடுப்பு. எனவே, உங்கள் சுயவிவரங்களைச் சரிபார்க்க அனுமதி தரவும் என்று விதிக்கப்படும் நிபந்தனைகளை நம்பி, வீடியோ பார்க்கும் ஆர்வத்தில் தகவல்களை அளித்தால் அவ்வளவுதான்.

ஹக்கர்கள் உங்கள் தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைக் கறந்து விடுவார்கள். இந்தத் தகவல்களை வைத்துப் பெரிய அளவில் பணம் சம்பாதித்து விடுவார்கள். இந்த விடயத்தில் இணையம் பயன்படுத்துபவர்கள் கவனமாக இருக்கவேண்டும் என்று மல்வேர் மென்பொருள் நிபுணர் கிறிஸ் பாய்ட் எச்சரித்துள்ளார்.

எனவே, இதுபோன்ற வீடியோ பதிவுகளில் லைக் செய்திருந்தாலோ, பகிர்ந்திருந்தாலோ அவற்றை அழித்து விடுவதுடன், கையோடு கடவுச்சொல்லை மாற்றிவிடுவது நலம் என்று இணைய நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். (த)

# ஜெனிவா பிரேரணைக்கு ஆதரவு திரட்டுவதில் பயனேதும் இல்லை

## ஜே.வி.பி. தெரிவிப்பு


விஜித ஹேரத்

இலங்கைக்கு எதிரான ஜெனிவா பிரேரணைக்கு ஆதரவு திரட்டுவதில் பயன்கள் ஏதுவும் கிடைக்கப்போவதில்லை. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கைப்பாவையாக செயற்படுவதால்தான் ஐ.நா.மனித உரிமைகள்ஆணைக்குழு,இலங்கை மனித உரிமை விவகாரத்தைக் கையிலெடுத்துள்ளது என்று ஜனநாயக தேசியக் கூட்டணியின் பிரசாரச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுச் சட்டத்தின் கீழான தீர்மானத்தின் பிரகாரம் ஆணைக் குழுவின் தலைவரது எரிபொருள் கொடுப்பனவு தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமைகள் ஆணைக் குழு மீது இன்று மக்களுக்கு நம்பிக்கையில்லை. அதில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கும் இன்னும் உரிய தீர்வு கிடைக்கவில்லை.

அது அரசின் கைப்பொம்மையாகவே செயற்படுகின்றது. எனவே, அதிகாரிகளுக்கு வசதிகளை ஏற்படுத்தும் அதே வேளை, செயற்பாடுகளில் சுயாதீனத்தன்மையையும் தோற்றுவிக்க வேண்டும்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 27 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு குழு வொன்றும் நியமிக்கப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக் குழுவும் விசாரணைகளை நடத்தியது. இதன் பரிந்துரை அறிக்கை எங்கே? கட்டுநாயக்க ஆர்ப்பாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்த குழுவின் அறிக்கை எங்கே? வெலிவேரிய தாக்குதல் சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட உண்மை என்ன?

இவ்வாறு உள்நாட்டில் எதையும் நீதியாக அரசு செய்யாததால் தான் சர்வதேச தலையீடுகள் ஏற்பட்டுள்ளன. வெலிக்கடைச் சிறைச்சாலை, வெலிவேரிய தாக்குதல் சம்பவம் குறித்தும் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

உள் நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இன்று ஜெனிவாவில் பிரேரணைமுன்வைக்கப்பட்டிருக்காது. மனித உரிமைகள் ஆணைக் குழு சுயாதீனமாக இயங்காததன் காரணமாகவே மனித உரிமை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள்சபை தனது கையி லெடுத்துள்ளது.

தற்போது பிரேரணையை தோற்கடிப்பதற்கு வாக்குத் திரட்டும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது. ஆதரவு திரட்டுவதில் எவ்வித பயனுமில்லை. மனித உரிமைகளைப் பாதுகாத்தால் மாத்திரமே அழுத்தங்களிலிருந்துவிடுபட முடியும். - என்றார். (ச-சி)

## சாதனைகள் ஏன் வெற்றி அளிப்பதில்லை

தன்னை அனுபவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பலவித சாதனைகள் எல்லாம் சிந்தையை அமைதியுற வைப்பதற்கு மட்டும் துணை புரிகின்றன. அமைதியுற்ற சிந்தையானது, மீண்டும் அமைதியின்மையை அடையலாம். அப்பொழுது எமது சாதனைகள் அனைத்தும் பயனற்றதாகி விடுகின்றன.

இப்பொழுது எமது சாதனை ஒரு பிரம்மையாகி விடும். இதனால் நாம் கட்டுண்ட நிலையையே அடைகிறோம். பிரமையினால் கட்டுண்ட ஒருவன் பிரம்மத்தை அடைய மாட்டான்.



நன்றி:தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# சொத்து விவரங்கள் இதுவரை இல்லை

## பிரதித் தேர்தல் ஆணையாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 20

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் சிறு சிறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் இதுவரை தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்தவில்லை.

இந்தத் தகவலை பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எச். மொஹமட் தெரிவித்துள்ளார்.

தத்தமது சொத்துக்கள் சம்பந்தமான விவரங்களைக் கையளிக்குமாறு தேர்தல்கள் செயலகம் கடிதங்கள் மூலமாக அவர்களுக்கு அறிவித்திருந்தது என்று அவர் கூறினார்.

சொத்துக்கள், வைப்புக்கள் விவரங்களை ஒப்படைக்காதுள்ள எந்தவொரு வேட்பாளருக்கும் வேட்பாளர் அடை யாள அட்டையோ அல்லது ஏனைய வரப் பிரசாதங்களோ வழங்கப்படமாட்டாது என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச-22)

# பாலைதீவு அந்தோனியார் திருவிழா இன்று ஆரம்பம்

பூநகரி, மார்ச் 20

வலைப்பாட்டுப் பங்கின் கீழ் நிர்வகிக்கப்படும் பாலைதீவு புனித அந்தோனியார் யாத்திரை ஸ்தலத் திருவிழா தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையான எதிர்வரும் 23 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. இதற்கான முன்னாயத்தமாக இன்றையதினம் மாலை 5 மணிக்கு கொடியேற்றமும், திருப்பலியும் இடம்பெறும். நாளைய தினம் வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்குசிலுவைப் பாதையும், திருப்பலியும் நடைபெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலியும், நற்கருணை விழாவும் நடைபெறும். எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும், காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும்ஒப்புக்கொடுக்கப்படும். திருவிழாத்திருப்பலி யாழ்.ஆயர் மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும்.

தவக்காலத்தில் மேற்கொள்ளும் யாத்திரை ஸ்தல நிகழ்விலே, மனித மாண்பைப் பேணும் குடும்பங்களாக இறைவனின் பரிவிரக்கத்தையும் தூய அந்தோனியாரின் பரிந்துரையையும் பெற்று ஆன்ம புதுப்பித்தல் பெற பங்குத் தந்தை அருட்தந்தை அ.வி.சில்வேஸ்ரர்தாஸ் (வலைப்பாடு) அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். (க)

# தப்பிச் சென்றுவிட்ட 113 குற்றவாளிகள்

கொழும்பு, மார்ச் 20

குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட 113 குற்றவாளிகள் நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதச் செயல்கள், கொலைகள் மற்றும் போதைப் பொருள் குற்றங்கள் சம்பந்தமாக பொலிஸாரால் தேடப்பட்டு வரும் நபர்களே இவர்கள் என்று கூறப்படுகிறது.

சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-22)

## மகேஸ்வரியின் இதய அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி தயாநிதி திருஞானசம்பந்தர்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி புவனேஸ்வரி திருஞானசம்பந்தர்
2014.03.16 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
(30400) (12.3.6)

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழியில் (உணவுக் களஞ்சியத்துக்கு முன்பாக) அமிர்தா வீதியில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 199 2180
(45857)(3.6.4)

## கடைகள் வாடகைக்கு

நீர்வேலியில், பருத்தித்துறை-யாழ் பிரதான வீதியில் கந்தசாமி கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள 10 விசாலமான கடைகள் வாடகைக்குள்ளன.
(சி/12768) (3.6.4)
தொடர்பு:077 434 8488/021 492 4570

## பொது அறிவித்தல்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
பொதுக்கூட்டம் - 2014

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 31.03.2014 திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் மடத்தில் பிரதான வீதியில் உள்ள மேற்படி சங்கத்தின் கிளை நிலையத்தின் மண்டபத்தில் (முன்பு கால்நடை வைத்திய நிலையமாக இருந்த இடம்) நா.மகேந்திரன் தலை மையில் நடைபெறும்.

தகைமையுள்ள சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது தயவுசெய்து இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

த.உமாப்பிரியா,
செயலாளர்.

நா.மகேந்திரன்
தலைவர்.

(33409)(5.6.3)

## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பாஸ்போர்ட் பெற்றுத்தரும் சேவையும் வழங்கப்படும்.
*Conditions apply

ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஏற்ற தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: (C/12479)
275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மணோ : 077 773 0818

## மரண அறிவித்தல்

### நடராஜா குலவீரசிங்கம்



இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை (முடமாவடி) பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா குலவீரசிங்கம் 17.03.2014 திங்கட்கிழமை பிரான்ஸில் இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா-பூமணி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராதாராணியின் பாசமிகு கணவரும், ஜீவிதா, தெய்விதா ஆகியோரின் அன்புத் தந்தையும், குணபாலசிங்கம், புஸ்பராணி, பூபாலசிங்கம், காராளசிங்கம், ஜெயராணி, தேவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2014) வியாழக்கிழமை பிரான்ஸ் நேரப்படி காலை 8.00 மணியளவில் 35, Avenue de vendun, 95310 saint-ouen-1 Aumone, France இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு : 0033 134 221 281
077 155 4465
(45855) (7.6.3)
தகவல் : குடும்பத்தினர்.

## வேலை ஆள்கள் தேவை

பதவிகள்
*வாகன சாரதி
*விற்பனை முகவர் (ஆண்/பெண்)
*விற்பனைப் பிரதிநிதி

கீழ்வரும் தகைமை உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
1) ஒரு வருடத்துக்கு மேல் குறித்த துறையில் அனுபவம் மற்றும் சிங்களம் தெரிந்தவர்கள்.
2) யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் வசிப்பவர்கள்.

கிளைக் காரியாலயம்,
ரவிர என்ரபிறைஸஸ்- புலோப் பளை, பளை.
021 720 1722, 077 442 2098
(29788)(3.6.4)

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
## பதவி வெற்றிடம்

### முகாமைத்துவ உதவியாளர்

விண்ணப்பதாரி க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவராகவும் நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். உங்கள் சுயவிவரக் கோவையை தொலைபேசி இலக்கம் குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள். பொன்னாலை சுற்றுவட்டாரம் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
S.ரங்கராஜன், செயலாளர்,
இல.7, முதலியார் லேன், சுண்டுக்குளி.
(சி12769) (12.3.6)

# பழைய நிர்வாகம் நீடிப்பதால் அடிக்கடி பிரச்சினைகள்

### மன்னார் ஓட்டோ சங்கத்தில்

மன்னார், மார்ச் 20

மன்னார் ஓட்டோ சங்கத்துக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாததால் ஓட்டோ சாரதிகளுக்கிடையில் அடிக்கடி பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் ஓட்டோ சங்கத்தின் நிர்வாகம் புதிதாக தெரிவு செய்யப்படாத நிலையில் கடந்த 8 வருடங்களுக்கும் மேலாகப் பழைய நிர்வாகமே இயங்கி வருகின்றது. இதனால் ஓட்டோ சாரதிகளுக்கு இடையில் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.



பிரச்சினையின் போது

மேலும் சங்கத் தலைவரின் தன்னிச்சையான செயற்பாடுகளின் காரணமாகவே தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகள் இடம் பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட ஓட்டோ சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் ஓட்டோ சங்கத்தில் பதிவுகள் இல்லாத சிலர் தமது ஓட்டோக்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2:45 மணியளவில் சங்கத்துக்கென ஒதுக்கப்பட்ட தரிப்பிடத்தில் சேவையில் ஈடுபடுத்த எத்தனித்துள்ளனர்.

இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டபோது சங்கத் தலைவரின் அனுமதியோடு தான் சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் ஓட்டோ தரிப்பிடத்தில் மோதல் ஏற்படும் நிலை ஏற்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில பாதிக்கப்பட்ட ஓட்டோ உரிமையாளர்கள் அனைவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சென்று இது குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸார் தன்னிச்சையாக செயற்படும் சங்கத்தின் தலைவர் உட்பட குழுவினருக்கு ஆதரவாகச் செயற்படுவதாக சங்கத்தில் பதிவில் உள்ள ஓட்டோ சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார்ப் பொலிஸார் பக்கச் சார்புடன் செயற்படுவதன் காரணமாகவே இவ்வாறான குற்றச்செயல்கள் இடம் பெறுவதாகவும், மன்னார்ப் பொலிஸாரின் பக்கச்சார்பான செயற்பாடுகள் குறித்து மன்னார், வவுனியா மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முறையிடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே கடந்த எட்டு வருடங்களுக்கும் மேலாகப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாத நிலையில் இயங்கிவரும் பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டு, புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும், வடமாகாண போக்குவரத்து அமைச்சர் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மன்னார் ஓட்டோ உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-56)

## பண்டாரிக்குளம் மயானத்தில் சிரமதானப் பணிகள்



மக்களின் பங்களிப்புடன் சிரமதானம்

வவுனியா, பண்டாரிக் குளத்தில் அமைந்துள்ள இந்து மயானம் கடந்த 16 ஆம் திகதி சிரமதானம் மூலமாகத் துப்புரவு செய்யப்பட்டது.

பற்றை மற்றும் முட்புதர்களால் மூடப்பட்டிருந்த இந்த இந்து மயானம், பண்டாரிக்குளம் பிரிவுக் கிராம அலுவலர் ப.கோணேஸ்வரன் தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்கம், பண்டாரிக்குளம் சிவில் பாதுகாப்பு குழு, கிராம மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சிரமதானம் மூலமாகத் துப்புரவு செய்யப்பட்டது.

இது தொடர்பில் பண்டாரிக்குளம் பிரிவுக் கிராம அலுவலர் தெரிவிக்கையில்;

ஒவ்வொரு மனிதனும் இறுதியில் வந்து சேருகின்ற இடம் மயானம் ஆகும். உடலை நல்லடக்கம் செய்யும் இந்த இடங்கள் தொடர்ச்சியாகப் பராமரிக்கப்பட வேண்டியவை ஆகும். மக்களின் கலாசாரத்துடனும் வாழ்வியலுடனும் தொடர்புபட்டுள்ள இந்த மயானத்தை கிராம மக்கள் தொடர்ச்சியாகப் பாதுகாக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (க-402,421)

## கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தில் படையினரின் தேடுதல் நடவடிக்கை

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி கனகபுரம் கிராமம் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணி தொடக்கம் காலை 8 மணி வரை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

கிராம அலுவலர் சகிதம் இந்த தேடுதல் நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. பெருமளவு இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று வீடுகளில் இருந்தோரின் அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றைப் பரிசோதனை செய்ததுடன் எவரும் புதிதாக அங்கு வந்துள்ளார்களா எனவும் விசாரித்து அறிந்து கொண்டனர்.

இதேவேளை கடந்த 17 ஆம் திகதியும், உருத்திரபுரம் வடக்கு, கிழக்கு, கிருஷ்ணபுரம், அம்பாள்குளம் ஆகிய பகுதிகளிலும் இராணுவத்தினர் இத்தகைய சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

காலை வேளையில் நடைபெறும் இத்தகைய சுற்றிவளைப்புக்களால் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்து காணப்படுவதுடன் அலுவலகங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்கள் உரிய நேரத்தில் அலுவலகங்களுக்குச் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டு வருகிறது. (க-18)

## பூட்டப்பட்டுள்ள நிலையில் விசேட தேவையுள்ளவர்களுக்கான மலசலகூடம்

### வவுனியா நகரசபையில் இந்த நிலை

வவுனியா, மார்ச் 20

வவுனியா நகரசபை அலுவலகத்தில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கென மலசலகூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அது பாவனைக்குத் திறந்து விடப்படாது பூட்டப்பட்டுள்ள நிலையில் காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் வசிக்கும் மக்கள் வவுனியா நகர சபை, பொது மண்டபம், மைதானம் ஆகிய இடங்களுக்கு வந்து செல்கின்றனர். இவர்களில் விசேட தேவையுடையவர்களும் அடங்குகின்றனர். அனைத்துப் பொது இடங்களிலும் முள்ளந்தண்டு (வடம்) பாதிக்கப்பட்டவர்களுக்கான மலசல கூட வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் வவுனியா நகரசபையிலும் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கென ஒரு மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது



பாவனைக்காக நீண்டகாலமாகத் திறந்து விடப்படாத நிலையில் பூட்டப்பட்டுள்ளது. அத்துடன் மலசல கூடத்துக்குச் செல்லும் பாதையும் சேதமடைந்து காணப்படுகின்றது.

அண்மையில் வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு வருகை தந்த முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட ஒருவர் நீண்ட நேரத்தின் பின்னர் மலசல கூடத்துக்குச் சென்றுள்ளார். ஆனால் அது பூட்டிய நிலையில் காணப்பட்டதால் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அவர் அசௌகரியங்களை எதிர்கொண்டதைக் காண முடிந்தது. (க-402)

## குடிதண்ணீர் நெருக்கடியை தீர்ப்பதில் இடர்கள்

### கூறுகிறார் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர்

கிளிநொச்சி, மார்ச் 20

பூநகரிப் பிரதேசத்தில் நிலவும் குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்ப்பதில் தாம் இடர்களை எதிர்கொண்டு வருவதாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ;

பாலைதீவு ஆலயத் திருவிழா இடம்பெறவுள்ள நிலையில் சபையின் பணியாளர்கள் அங்கு சென்றுள்ளதால் குடிதண்ணீரை வழங்குவதில் இடர்கள் தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பூநகரியில் உள்ள குடிதண்ணீர் நிலைகளில் நீர் வற்றியுள்ளதால் நீர் தட்டுப்பாடு மேலும் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார், படையினர், பொலிஸார் ஆகியோருடன் போட்டி போட்டிக்கொண்டு குடிதண்ணீரைச் சேகரித்து மக்களுக்கு வழங்கி வருகின்றோம் எனத் தெரிவித்தார். (க-18)

## கால்நடைகளுக்குத் தடுப்பூசி ஏற்றுமாறு கோரிக்கை

சகல கால்நடைகளுக்கும் நோய்த் தடுப்பூசி மருந்துகளை ஏற்றுமாறு ஒட்டுசுட்டான் கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவி வருகின்றது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நோய்த் தாக்கத்துக்கு உட்படாத கால்நடைகள் கிராமங்களில் காணப்படுகின்றன. அவைகளுக்கு நோய் பரவாது தடுப்பதற்குரிய தடுப்பூசியை ஏற்றுவதற்கு அப்பகுதிக்குரிய கால்நடை மருத்துவர் ஆவன செய்ய வேண்டுமென கால்நடைவளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## யானையால் தாக்கப்பட்டவர் மருத்துவமனையில்

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் உள்ள கருவேப்பங்குளம் கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் காயமடைந்த பொது மகனொருவர் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த வாரமும் இந்தக் கிராமத்தில் யானையொன்று உட்புகுந்து அட்டகாசம் செய்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ச.முத்துராஜா (வயது-42) என்பவர் யானை ஒன்றினால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிராமத்தினுள் உட்புகுந்து அட்டகாசம் புரியும் யானைகளை விரட்டுவதில் இந்தப் பகுதி மக்கள் ஈடுபட்ட போதிலும் அவர்களது முயற்சிகள் பயனளிக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (க-402)

## வறிய நிலையிலுள்ள மாணவியின் உயர் கல்விக்கு நிதியுதவி

### கோவில்குளம் இளைஞர் கழகத்தின் முன் மாதிரி

வவுனியா, மார்ச் 20

வறிய குடும்பப் பின்னணியில் வாரிக் குட்டியூரில் வசித்து வரும் மாணவி செல்வரத்தினம் சகானாவுக்கு அவர் தமது உயர் கல்வியைத் தொடரும் பொருட்டு ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டது.



மாணவிக்கு நிதி உதவி வழங்கப்படுகின்றது

சேமமடுவை நிரந்தர வதிவிடமாகவும் சங்கரபுரம், வாரிக்குட்டியூரில் வசித்து வருபவருமான சகானா கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டவராவார். இருந்த போதிலும் குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக இவர் மேற்படிப்பைத் தொடர முடியாததால் மட்டக்களப்பு ஒக்ஸ்போர்ட் கல்லூரியால் தொழில்நுட்பக் கல்விக்கான இலவச அனுமதிவழங்கப்பட்டது. எனினும்வாழ்க்கைச்செலவைக் கருத்தில் கொண்டு கோயில்குளம் இளைஞர் கழகத்தின் அமெரிக்க கிளையினரால் ஒரு தொகைப்பணம்வழங்கப்பட்டது.

கோவில்குளம் இளைஞர் கழகத்தின் அமெரிக்க கிளையின் ஊடாக அமெரிக்கா கலிபோர்னியாவை வதிவிடமாகக் கொண்ட அம்பாறை கண்ணகிபுரத்தைச் சேர்ந்த நல்லதம்பி சத்தியகுமாரின் சகோதரனின் நினைவு தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட ஒருதொகைப் பணம் கடந்த 16 ஆம் திகதி குறித்த மாணவியிடம் கையளிக்கப்பட்டது. இதனை முன்னாள் வவுனியா உப நகரபிதாவும், கோவில்குளம் இளைஞர் கழக ஸ்தாபகருமான க.சந்திரகுலசிங்கம் (மோகன்) வழங்கினர்.

இது தொடர்பாக மாணவி சகானா கருத்துத் தெரிவிக்கையில்;

தொடர்ந்தும் தனக்கு உதவி தேவைப்படுவதாகவும், தான் தொழில்நுட்ப கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அந்தத் துறையில் சாதிக்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், கோவில்குளம் இளைஞர் கழகத்தின் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த சதீஸ், நிகேதன், கோவில்குளம் இளைஞர் கழகத்தின் கல்வி அபிவிருத்திக் குழுவின் இயக்குநர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-402)

# போர் முடிந்து 5 வருடங்களாகியும் இன்றும் சம்பூரில் அகதி முகாம்கள்

## நியாயம் கேட்க ஜெனிவா சென்றால் தேசத்துரோகிகள் பட்டம்; கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரம் தெரிவிப்பு

களுவாங்சிக்குடி, மார்ச் 20
தமிழ்மக்கள் இன்னமும் வடக்கு, கிழக்கில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து 5 வருடங்கள் கழிந்த பின்னரும் இன்னமும் சம்பூரில் அகதி முகாம்கள் இருந்து வருகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, தேற்றாத்தீவு வட பத்திரகாளி அம்மன் ஆலய வரலாற்றுச் சிறப்பு நூல் வெளியீட்டுவிழா கடந்த திங்கட்கிழமை வடபத்திர காளி அம்மன் ஆலய முன்றிலில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சென்று நியாயம்கேட்கப் போனால் எங்களை தேசத்துரோகிகள், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று அரச தரப்பினர் கூறுகின்றார்கள். தமிழினத்தின் தேசியப் பிரச்சினையை அரசு சமஷ்டி முறையில் தீர்த்து வைத்திருந்தால் நாங்கள் ஏன் ஜெனிவாவுக்குப் போக வேண்டும்.

வடக்கு, கிழக்கிலுள்ள இந்துக்கள் மாத்திரமன்றித் தலைநகரிலுள்ள இந்துக்களும் மிகவும் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

80 வருடங்களுக்கு மேலாக அலரி மாளிகைக்குப் பின்னால் இருந்த இந்துக் கோயில் இன்று அகற்றப்பட்டுள்ளது. 116 சிங்களக் குடும்பங்கள் மட்டக்களப்பு கெவுளியாமடுவிலும், புழுக்குனாவையிலும் அத்துமீறி குடியேறி இருக்கின்றனர்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு இழைக்கபட்ட அநீதிகளுக்கு தீர்வு கிட்டவேண்டிய நேரத்தில் இறைவன் திருக்கேதீஸ்வரத்திலும், திருகோணமலை


கோவிந்தன் கருணாகரம்

அடிவாரத்திலும், எமது மக்களைக் கொன்றழித்த எச்சங்களை வெளி உலகுக்குக் காட்ட வேண்டிய நேரத்தில் காட்டியுள்ளார்.

நாங்கள் வழிபடும் தெய்வங்கள் எவ்வளவு சக்திமிக்கவை என்று இதிலிருந்து நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

இன்று ஜெனிவாவுக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சென்று நியாயம் கேட்கப்போனால் எங்களைத் தேசத்துரோகிகள், நாட்டைக்காட்டிக் கொடுப்பவர்கள் என்று அரச தரப்பினர் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் இன்னமும் வடக்கு, கிழக்கில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்து 5 வருடங்கள் கழிந்த பின்னரும் இன்றும் சம்பூரில் அகதி முகாம்கள் இருந்து வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலமுனை, முறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் தமிழ் மக்களின் காணிகள், வீடுகள் அரச படைகளின் முகாம்களுக்குள் இருக்கின்றன. தமிழ் மக்களது காணிகளை இராணுவத்தினர் அவர்களது சொந்தக்காணி போன்று பயன்படுத்தும் அதேவேளை அந்தத் தமிழ் மக்கள் தமது உறவினர்களின் வீடுகளில் வசித்து வருகின் றனர்.


எமது இனப் பரம்பலை திட்டமிட்டு நசுக்க வேண்டும் என்று அரசு நினைக்கின்றது.

100 வீதம் தமிழ் மக்கள் வாழ்ந்த பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தற்போது ஓரிரு சிங்கள கிராமங்கள் கொண்ட தொகுதியாக மாறியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இன்று தமிழ் மக்கள் 40 வீதமாகவும் ஏனைய மக்கள் 60 வீதமாகவும் ஆகியுள்ளனர்.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 5 வருடங்களாகியும் எந்தவித தீர்வுகளும் இது வரையில் எட்டப்படாத காரணத்தினால்தான் நாங்கள் ஜெனிவா சென்றுள்ளோம்.

வடக்கு, கிழக்கில் ஆயுதப் போராட்டத்துக்கு முன்பிருந்த இராணுவ ஆட்சி இன்று வரை தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. ஏனெனில் வடக்கில் முன்னாள் இராணுவ அதிகாரி ஆளுநராகவும், கிழக்கில் முன்னாள் கடற்படை அதிகாரி ஆளுநராக இருக்கின்றார்கள்- என்றார். (ச-32)


சரிந்து விழும் நிலையில் மின்கம்பம்

## சரிந்து விழும் நிலையில் திருமலையில் மின் கம்பம்

மூதூர், மார்ச் 20
திருகோணமலை, வட கரை வீதியில் அமைந்துள்ள விவேகானந்தர் வீதியில் பல வருட காலமாக எந்தவித மின் இணைப்பும் இல்லாத மின் கம்பம் ஒன்று உடைந்து சரிந்து விழும் அபாய நிலையில் காணப்படுகிறது.

இந்த விடயம் குறித்து மின்சார சபைக்கு அறிவித்தும் அது தொடர்பாக எந்தவித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்த வியடம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-40)

## பாலமுனை கிராமத்தில் யானைகள் அட்டகாசம்


மட்டக்களப்பு, மார்ச் 20
அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலமுனைக் கிராமத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளன என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.


மதிலை சேதப்படுத்திய காட்டு யானைகள்

இந்தக் கிராமத்தின் குடியிருப்பு பகுதிகளில் உட்புகுந்த யானைகள், வீட்டு மதில்களையும் தோட்டங்களிலுள்ள வாழை, தென்னை உட்பட பல மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன என்று மக்கள் கூறினர்.

பாலமுனை வயல்வெளி எல்லைக் கிராமக் குடியிருப்பாளர்கள் கடந்த சில நாள்களாக தாம் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

காட்டு யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)


வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் இறுதி நிகழ்வான பூங்காவனத் திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அம்பாள் சயன நிலையில் பத்தர்களுக்கு அருள் பாலித்தார். (ச-40)

## அமைச்சரின் வாகனம் விபத்தில் சிக்கியது

கந்தளாய், மார்ச் 20
கிழக்கு மாகாண விவசாயக் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஹாபீஸ் நஸீர் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியது.

எனினும் அமைச்சருக்கு காயங்கள் ஏதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் திருகோணமலை அநுராதபுரம் சந்தி யில் இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அமைச்சரின் வாகனத்தின் மீது வேறொரு வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தால் உடனடியாகப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன. எனினும் பொலிஸாரின் துரித நடவடிக்கையால் சிறிது நேரத்தில் போக்குவரத்துக்கள் வழமைக்குத் திரும்பின.

இந்த விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வெட்டப்படுகின்றன கிரவல் மலைகள்

### குளங்களின் நீர் மட்டங்கள் குறையும் அபாயம்


வெட்டப்படும் கிரவல் மலைகள்.

திருகோணமலை, மார்ச் 20
திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிரவல் மலைகள், வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக வெட்டப்பட்டு வருகின்றன.

குளங்களுக்கு அண்மித்த பகுதிகளில் உள்ள கிரவல் மலைகள் வெட்டப்பட்டு வருவதால் குளங்களின் நீர் மட்டங்கள் குறைவடையும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று விவசாயிகள் அச்சம் வெளியிடுகின்றனர்.

எனவே திருகோணமலையில் உள்ள கிரவல் மலைகளை வெட்டுவதைத் தடுக்க அரசஉயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## காணாமற் போனோர் குறித்த விசாரணை கிழக்கில் ஆரம்பம்

### மட்டக்களப்பில் இன்று முதல்

கொழும்பு, மார்ச் 20
காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணத்துக்கென நடைபெறும் விசாரணைகளின் முதலாவது அமர்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மட்டக்களப்பில் ஆணைக்குழுவுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் செயற்பட்டதன் அடிப்படையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இன்று முதல் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த அமர்வில், இன்று வியாழக் கிழமை ஏறாவூர் பற்று - செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசாரணைகள் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை கோரளைப்பற்று வடக்கு- வாகரை, கோரளைப்பற்று தெற்கு - கிரான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசாரணைகள் கிரானிலுள்ள றெஜி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் சனிக்கிழமை மண்முனை வடக்கு - மட்டக்களப்பு பிரதேச செயலகப்பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசாரணைகள் மண்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 1100 வரையான முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு குறிப்பிட்டளவானவையே விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஆளும்கட்சி வேட்பாளர்களுக்கு இடையில் வலுக்கிறது மோதல்

## ஐ.தே.க. ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல்

கொழும்பு,மார்ச் 20
இலங்கையில் ஆளும் கட்சி வேட்பாளர்கள் மத்தியில் மோதல்கள் அதிகரித்துள்ளன. இந்த வகையில் மோதல் சம்பவமொன்று ஜனாதிபதியின் சொந்த இடமான பெலியத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.
ஆளும் கட்சியின் தென் மாகாண சபை வேட்பாளரான டி. வி. உப்புல், ஆளும்கட்சிவேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள் மீது பெலியத்தைப் பகுதியில் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இதேவேளை தென் மாகாண சபையின் முன்னாள் அமைச்சரான டி.வி. உப்புல் கைது செய்யப்பட்ட அதே தினத்தில் தங்காலை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஆளும்கட்சியின் தென்மாகாண சபை வேட்பாளரான டி.வி. உப்புல், ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களை நேற்றுமுன்தினம் தாக்கியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.
தொம்பே - கிம்புல்விலவத்த பிரதேசத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருக்கும், ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் ஏற்பட்ட மோதலில் ஐ.தே.கவின் ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய வேட்பாளருமாகிய ஹர்சன ராஜகருணாவின் ஆதரவாளரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த மோதலில் காயமடைந்த நபர்கள் தொம்பே வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அதேவேளை தென் மாகாண சபையின் மீன்பிடித் துறைக்கு முன்னர் பொறுப்பான அமைச்சராக இருந்த உப்புல் ஏற்கனெவே பஸ் சாரதி ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பிலும் கைதுசெய்யப்பட்டிருந்தார்.
எனினும் பஸ் சாரதி தமது முறைப்பாட்டை விலக்கிக் கொண்டமையால் முன்னாள் மாகாண அமைச்சர் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-10)

> ❝ ஆளும் கட்சியின் தென் மாகாண சபை வேட்பாளரான டி. வி. உப்புல் ஆளும் கட்சி வேட் பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## 5,000 ரூபா போலி நாணயத்தாளுடன் ஒருவர் கைது


கோப்புப்படம்

கொழும்பு,மார்ச் 20
புறக்கோட்டை தனியார் பஸ் நிலையத்தில் 5,000 ரூபா போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்த நபரிடமிருந்து 5,000 ரூபா பெறுமதியான 10 போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தெய்யன்தர பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் புதியகடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.
இதேவேளை 5,000 ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் ஐந்து வைத்திருந்த மற்றொரு சந்தேகநபர் வரக்காபொல - துல்கிரிய பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வெற்றிபெற்றோருக்கு இம்முறை சந்தர்ப்பம்

## விருப்பு வாக்கெண்ணும் நிலையம் செல்ல

கொழும்பு,மார்ச் 20
தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தலில் விருப்பு வாக்கு எண்ணும் மற்றும் முடிவுகள் வெளியிடப்படும் நிலையங்களுக்குச் செல்ல தேர்தலில் வெற்றி பெற்றஅனைத்துக் கட்சிகளினதும் வேட்பாளர்களுக்கும் அனுமதி அளிக்க தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.
கடந்த இரண்டு நாள்களாக மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டது என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. முதலில் கட்சிகள் ரீதியான வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் விருப்பு வாக்குகள் எண்ணும் பணிகள் இடம்பெறும்.

> ❝ வெற்றி பெற்ற கட்சியின் அனைத்து வேட்பாளர்களுக்கும் விருப்பு வாக்கு எண்ணும் நிலையத்துக்குள் செல்ல அனுமதி

விருப்பு வாக்குகள் எண்ணும் இடத்துக்கு வெற்றிபெற்ற கட்சியின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே இதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்டனர்.
ஆனால் இந்த முறை வெற்றி பெற்றகட்சியின் அனைத்துவேட்பாளர்களுக்கும் விருப்பு வாக்கு எண்ணும் நிலையத்துக்குள் செல்ல அனுமதி அளிக்க தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது. (ச)


சீதுவையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கேற்வே ஹோட்டல் விமான நிலையப் பூங்காவைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்துள்ளார். (ப)

## அதிவேக வீதியில் விபத்து; ஒருவர் சாவு; 9 பேர் காயம்

கொழும்பு,மார்ச் 20
தெற்கு அதிவேக வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 9 பேர் காயமடைந்துள்ளனர்.
இந்த விபத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.
35 ஆவது மைல் கல் பகுதியில் லொறியொன்றும், வானொன்றும் மோதுண்டே விபத்து இடம்பெற்றுள்ளது என்று அவர் கூறினார்.
இந்த விபத்தில் காயமடைந்த குழந்தையொன்றின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
காலியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வான், முன்னால் பயணித்த லொறியுடன் மோதுண்டது என்று அவர் கூறினார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# அதிகாரம் இல்லாத பதவிதான் எனக்கு

## தேர்தல் ஆணையாளர் கவலை

கொழும்பு,மார்ச் 20
நான் எவ்வித அதிகாரமும் இல்லாத பதவியையே வகித்து வருகிறேன் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
இந்தியாவின் தேர்தல் ஆணையாளருடன் ஒப்பிடுகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மிகவும் சொற்பளவிலானவை என்று அவர் குறிப்பிட்டார்.



மஹிந்த தேசப்பிரிய

மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் தேர்தல் சட்டங்களை மீறிய வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரம் எனக்கு இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.
தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுவோர் தொடர்பிலான பல்வேறு தகவல்கள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் கூறினார்.
சட்டங்களை மீறிச் செயற்படுவோர் குறித்து புகைப்படங்கள், வீடியோக்கள் என பல்வேறு ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றை சரியான நேரத்தில் சரியான முறையில் பயன்படுத்தி வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளேன் என்று அவர் தெரிவித்தார்.
தேர்தல் விதி மீறல்களைத் தடுத்து நிறுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் கூறினார். (ச)

# ஐ.தே.கட்சி ஆட்சி அமைக்க கூட்டணி தேவையில்லை

## ஹரீன் பெர்னாண்டோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 20
இலங்கையில் ஆட்சி அமைப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏனைய கட்சிகளின் ஆதரவு தேவை இல்லை என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் முஸ்லிம் காங்கிரஸும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் தான் முஸ்லிம் மற்றும் மலையக தமிழர்களின் பிரச்சினைகளை கையாள வேண்டும் என்று இல்லை.


ஹரீன் பெர்னாண்டோ

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கக்கூடியவர்கள்.
தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கக்கூடிய உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலும் இருக்கிறார்கள்.
எனவே ஐக்கியக் தேசிய கட்சி அரசை அமைப்பதற்கு, கூட்டணி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை-என்றார். (ச)

# தூக்குத்தண்டனை குறித்த அறிக்கை சமர்ப்பிப்பு

## ஜனாதிபதியிடம் கையளிப்பார் சந்திரஸ்ரீ கஜதீர

கொழும்பு,மார்ச் 20
தூக்குத் தண்டணை தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
இந்த அறிக்கையை சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரஸ்ரீ கஜதீர சமர்ப்பிக்கவுள்ளார்.
இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த தூக்குத் தண்டனை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று பல தரப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.
அண்மையில் போகம்பரை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட பார்வையாளர் கருத்துச் சேகரிப்பின் போதும், பெரும்பாலானோர் வன்முறையைக் கட்டுப்படுத்த தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதாக அமைச்சர் கஜதீர குறிப்பிட்டார்.


சந்திரஸ்ரீ கஜதீர

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்போது குற்றங்கள் குறைய வாய்ப்புள்ளது என்று அதிகளவான மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேர்தல்கள் : பதினேழாவது திருத்தத்தை அரச தரப்பு ஏறெடுத்துப் பார்க்குமா..?

மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் களத்தில் , நேற்றுமுன்தினம் முதலாவது "கொலை" விழுந்துள்ளது. மேல் மாகாண சபைத் தேர்தல் பிராந்தியத்தில் -

தொம்பே தேர்தல் தொகுதியில் அடங்கும் கிம்புஸ்வத்த என்ற பிரதேசத்திலே, ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளரான, ஐம்பது வயதான ஒருவர் தாக்குதலுக்கு ஆளாகி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

மாகாண சபைகளுக்கான தெற்கின் தேர்தல் களத்தில், கடந்த திங்கட்கிழமை வரை, 815 தேர்தல் சட்ட மீறல்கள் பதிவாகி உள்ளதாக நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

அவற்றில், ஏனைய மாவட்டங்களை விடவும் கொழும்பு மாவட்டத்திலேயே மிக அதிக எண்ணிக்கையான (314) தேர்தல் சட்ட மீறல்கள் நடத்தப்பட்டதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் 28 முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன.

அவற்றில், அரச அலுவலர்கள் மற்றும் வாக்குரிமை உள்ள பொதுமக்களைத், தேர்தல் பணிகளுக்கு அரசு சார்புக் கட்சி பயன்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இத்தகைய ஒரு சூழமைவில், தேர்தல் சட்டவிதிகள் மீறப்பட்டமை குறித்து பொலிஸார் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளில் ஒன்றான நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் கண்காணிப்பு மக்கள் அமைப்பு (பவ்ரல் அமைப்பு) சுட்டிக்காட்டி உள்ளது.

அதேவேளை, தேர்தல் சட்டவிதிகளை மீறுவோர், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் மீது பொலிஸ் தரப்பு உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்காது - என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண அறிவித்துள்ளார்.

அவர் மட்டுமன்றி, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும் -

தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இவற்றுக்கு மத்தியிலும், மருதானையில் உள்ள கல்லூரியின் அதிபர் ஒருவர், தமது பாடசாலைக்குச் சொந்தமான பஸ் வண்டியை , ஐக்கிய சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தினார் என்றும் -

அதிபரின் செயற்பாட்டைக் கண்டித்து, கல்லூரி ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை நிறுத்தியதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

மொத்தத்தில் -

கடந்த (பெப்ரவரி) மாதம் , ஆறாம் நாளன்று மேற்கு மற்றும் தெற்கு மாகாண சபைகளின் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில் இருந்தே, தேர்தல் வன்செயல்களும் தொடங்கப்பட்டுவிட்டன என்பது கண்கூடு.

அரச வளங்கள், அரச பணியாளர்கள் தேர்தல் பரப்புரைகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஆளும் தரப்பினரால் பயன்படுத்தப்படுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பு களினால் சுட்டிக்காட்டப்படுகிறது.

வட மாகாண சபைக்கான தேர்தல் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற்ற வேளை, தேர்தல் நாளன்று (21.09.2013) போலி "உதயன்" நாளிதழ் பிரதிகள் , சட்டத்தின் பிரகாரம் அச்சிடப்பட வேண்டிய பதிவை (Imprint ஐ) முத்திரை இடாமல், வாக்காளர்களுக்கு - வாசகர்களுக்கு- விநியோகிக்கப்பட்டன.

அது குறித்து தேர்தல் திணைக்களத்துக்கும் பொலிஸாருக்கும் முறையிடப்பட்டும் - இதுவரை ஆறு மாதங்கள் கடந்தும் - அரச இயந்திரம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மொத்தத்தில், கிணற்றில் போட்ட கல்லின் நிலைக்குள்ளாகி விட்டது அது.

மேலும், அரசமைப்புக்கான பதினேழாவது திருத் தத்தின் கீழ் தேர்தல் நடத்துவதே பொருத்தமானது என்று வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டது; பரிந்துரை செய்யப்பட்டது. தேர்தல் கண்காணிப்பாளர்களாக செயற்பட்ட நிறுவனங்கள் இது சம்பந்தமாக அரசுக்கு இடித் துரைத்து இருந்தன.

ஆனால், அவர்களின் பரிந்துரை, ஏழையின் சொல் சபை ஏறாது என்ற நிலைக்கு ஆகிவிட்டது. அதனை, அரசு கருத்தில் கொள்ளும் என்று கிஞ்சிற்றும் எண்ணத் தோன்றவில்லையே!

கட்டுரை

# இந்தியாவின் முத்துமாலை

## இந்திய மாக்கடலின் பாதுகாப்பு வலைப்பின்னலா?

இவ்வாண்டு இடம்பெற்றுள்ள மிலான் பயிற்சி நடவடிக்கை கிழக்காபிரிக்கா தொடக்கம் மேற்கு பசுபிக் வரை விரிவுபடுத்தப்பட்டமையானது இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் இந்தியா தனது செல்வாக்கை விரிவுபடுத்துகின்றது என்பதைச் சுட்டி நிற்கிறது.

இவ்வாறு ஆஸ்திரேலியாவின் சிட்னியைத் தளமாகக் கொண்ட இணையத்தளத்தில் டேவிட் புறூஸ்ரெர் (Dr. David Brewster) என்பவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து இந்திய மாக்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தொடர்பில் மேற்கொண்ட முக்கூட்டு நடவடிக்கையில் இந்திய மாக்கடலிலுள்ள தீவுகளான செச்செல்ஸ் மற்றும் மொறிசியஸ் போன்றவை இணைந்துள்ளதாக மார்ச் 7 ஆம் திகதியன்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் அறிவித்திருந்தார்.

இந்தியாவின் தலைமையில் இந்திய மாக்கடல் பிராந்திய நாடுகள் மத்தியில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு கணிசமான அளவு ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது என்பதற்கான புதிய சமிக்ஞையாக மொறிசியஸ் மற்றும் செச்செல்ஸ் தீவுகள் இணைந்து கொண்டமை கருதப்படுகிறது.

இந்திய மாக்கடல் பிராந்தியத் தீவுகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் வலைப்பின்னலாக இந்தியா இருக்க வேண்டும் எனக் கடந்த ஆண்டு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்திருந்தார். இந்தியப் பிராந்தியத்தின் எல்லைகள் எவை என்பது தொடர்பாக இந்தியப் பிரதமர் குறிப்பிடாவிட்டாலும் கூட, இந்திய மாக்கடல் பிராந்திய நாடுகளையே அவர் குறிப்பிட்டுள்ளார் என்பது மிகத் தெளிவானதாகும்.

சில ஆண்டுகளாக இந்தியாவுடன் இலங்கை பல்வேறு கூட்டுக் கடற்பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. 2012ல் இந்த ஒப்பந்தமானது மாலைதீவையும் உள்ளடக்கி முக்கூட்டு ஒப்பந்தமாக விரிவுபடுத்தப்பட்டது. தற்போது இந்த முத்தரப்பு ஒப்பந்தத்துடன் செச்செல்ஸ் மற்றும் மொறிசியஸ் தீவுகள் இணைந்துள்ளன. இதன்மூலம் புதிய கடற்பாதுகாப்பு கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். இப்புதிய நடவடிக்கையில் இந்து மாக்கடலின் மத்திய மற்றும் மேற்கு எல்லைகளும் உள்ளடக்கப்படும். எதிர்காலத்தில் இக்கூட்டு நடவடிக்கை, வங்காள விரிகுடா வரை விரிவுபடுத்தப்படலாம் அல்லது வங்காள விரிகுடா நாடுகளுடன் இதையொத்த கூட்டு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என மேனன் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய மாக்கடல் பிராந்தியத் தீவுகளின் பாதுகாப்பு உத்தரவாத சக்தியாக நீண்ட பத்தாண்டுகளாக இந்தியா



சிவ் சங்கர் மேனன்



மன்மோகன் சிங்



மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன்

**சில ஆண்டுகளாக இந்தியாவுடன் இலங்கை பல்வேறு கூட்டுக் கடற்பாது காப்பு ஒப்பந் தங்களை மேற்கொண் டுள்ளது. 2012இல் இந்த ஒப்பந்தமானது மாலைதீவ்வயும் உள்ளடக்கி முக் கூட்டு ஒப்பந்தமாக விரிவுபடுத்தப்பட்டது.**

விளங்கிவருகிறது. 1980களில், இந்தியா இத்தீவுகளின் பாதுகாப்பில் தலையீடு செய்தது. மொறிசியஸின் பாதுகாப்பில் 1983இல் இந்தியா தலையீடு செய்தது. இதேபோன்று உள்நாட்டுக் கிளர்ச்சிகளைத் தடுப்பதற்காக 1986 இல் செச்செல்சிலும், 1988இல் மாலைதீவிலும் பின்னர் 1987-1990வரை இலங்கையிலும் இந்தியா தனது பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நீடித்த காலப்பகுதியில் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா தனது கணிசமானளவு பங்களிப்பை வழங்கியது.

1980களிலிருந்து, இந்த நாடுகளுக்கு கடல்சார் பாதுகாப்புக்களை வழங்குகின்ற நடவடிக்கைகளை இந்தியா மெதுவாக மேற்கொள்ளத் தொடங்கியது. இலங்கை, மாலைதீவு, மொறிசியஸ், செச்செல்ஸ் நாடுகளின் கடற்படையினருக்கும் எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கும் கடற்பாதுகாப்புப் படகுகள், பயிற்சிகள், மூத்த இராணுவ ஆலோசனைகள், உலங்குவானூர்திகள் போன்றவற்றை இந்தியா வழங்கியது. கடந்த சில ஆண்டுகளாக, மாலைதீவு, செச்செல்ஸ் மற்றும் மொறிசியஸ் தீவுகளில் இந்தியா கரையோரக் கண்காணிப்பு வலைப்பின்னல்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது. மாலைதீவு மற்றும் மொறிசியஸ் தீவுகளில் இந்தியா பிறிதொரு விதத்தில் தனது பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

கடற் பயங்கரவாதம், கடற்கொள்ளை மற்றும் சட்டரீதியற்ற மீன்பிடி போன்றவற்றை முறியடிக்கும் வகையில் தகவல்களைப் பரிமாறுதல் உபகரணங்களைப் பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள், தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்திய பாதுகாப்பு கூட்டு நடவடிக்கையில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மாக்கடல் பிராந்தியத்தின் ஊடாக இந்திய பாதுகாப்பிற்கான பங்களிப்பை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலம் தேவைப்படும். இந்தப் பிராந்தியத்தில் தற்போது சீனாவின் பிரசன்னம் அதிகரித்துவரும் நிலையில், இந்தியாவின் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனவரியில் இந்திய மாக்கடலின் கிழக்கில் சீனாவின் மூன்று கடற்கலங்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டன. சீனாவின் இவ்வாறான நடவடிக்கைகளை முறியடிக்கும் விதத்தில் இந்தியா தனது பாதுகாப்பு நடவடிக்கையை விரிவுபடுத்த வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

மிகப் பெரிய சக்தியாக இந்தியா வளர்ந்து வரும் நிலையில், இது தனது மூலோபாய நலனை விரிவுபடுத்துவதை மிலான் பயிற்சி நடவடிக்கை முன்னுரிமைப்படுத்துகிறது. இந்திய மாக்கடல் பிராந்தியத்திலும், அதற்கப்பாலும் மிகப் பெரிய பாதுகாப்பு ஒத்துழைப்பை வழங்குவதில் இந்தியா ஆர்வமாக உள்ளது. இந்தியாவில் அதிகரித்து வரும் மென்மையான இராணுவ அதிகாரத்தை வெற்றியாக்குவதில் மிலான் பயிற்சி நடவடிக்கை மிக முக்கிய பங்களிப்பை வழங்குகிறது.

இவ்வாண்டு இடம்பெற்றுள்ள மிலான் பயிற்சி நடவடிக்கையானது, கிழக்காபிரிக்கா தொடக்கம் மேற்கு பசுபிக் வரை விரிவுபடுத்தப்பட்டமையானது இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் இந்தியா தனது செல்வாக்கை விரிவுபடுத்து கின்றது என்பதைச் சுட்டி நிற்கிறது.

தனது பிராந்தியத்தில் இந்தியா ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும், சீனாவின் ஒருதலைப் பட்சமான தலையீடுகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட முடியாது. இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் பாதுகாப்பை விட அதன் மூலோபாய பலவீனமானது அதிகமாக உள்ளது என்பதை சீனாவின் ஒருதலைப்பட்ச நகர்வு சுட்டி நிற்பதாக விமர்சிக்க முடியும்.

செச்சல்ஸின் கடல்சார் வளங்களைப் பயன்படுத்துவதற்காக செச்செல்ஸ் நீலப் பொருளாதாரம் என்கின்ற புதிய உடன்படிக்கையை எட்டியதைத் தொடர்ந்து, கடந்த மாதம் செச்செல்ஸ் தற்போது கூட்டு கடற்பாதுகாப்பு நடவடிக்கையில் பங்காளியாக மாறியுள்ளதாக இந்தியா அறிவித்தது. பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்கும் நோக்குடன் செச்செல்ஸும் மொறிசியஸும் நீலப் பொருளாதாரம் என்கின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. மிகப் பெரிய பொருளாதார வலயங்களைக் கொண்டுள்ள மொறிசியஸ் மற்றும் மாலைதீவுடன் நீலப் பெருளாதாரப் பங்காளியாக இந்தியாவும் உள்நுழையலாம்.

இந்திய மாக்கடல் பிராந்தியத்தின் ஐந்து நாடுகள் மத்தியில் தற்போது மேற்கொள்ளப்படும் புதிய கடற்பாதுகாப்பு ஏற்பாடுகள் இதன் பாதுகாப்பு முன்னெடுப்புக்களின் மிகப் பெரிய நகர்வாக நோக்கப்படுகிறது. இந்திய மாக்கடலின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் தலைமைப் பொறுப்பை முதன் முதலாக இந்தியா தற்போது ஏற்றுள்ளது. இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் வங்காள விரிகுடா நாடுகளுக்கு விரிவுபடுத்தப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படும் நிலையில், எமது பிராந்தியத்தில் இந்தியா மேலும் மேலும் புதிய பாதுகாப்பு சார் பங்களிப்பை வழங்குவதற்கான உறுதியான நிலையை எட்டியுள்ளது.

*புதினப்பலகை- நித்தியபாரதி*

# வாய்ச் சுகாதாரம் நாளும் பேணி ஆயுள் முழுவதும் ஆரோக்கியமான புன்னகையை கொண்டாடுவோம்

ஆ.ஜென்சன் றொனால்ட்,
பொது சுகாதார பரிசோதகர்




"வாயுள்ள பிள்ளை பிழைக்கும்" என்பது பழமொழி. அதாவது சிறப்பான சமயோசித பேச்சாற்றல் உள்ளவர் பல சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு தன்னை நிலை நிறுத்திக் கொள்வார் என்பதே இதன் கருத்தாகும். அதே போன்று வாய் சுகநலமாக இருந்தால் மனிதன் தனது உடல் ஆரோக்கியத்தைப் பேணி பல உபாதைகளையும், உயிராபத்துகளையும் விளைவிக்கும் நோய் களிலிருந்தும் பாதுகாப்புப்பெறுவான்.
'வாயிருந்தால் வங்காளம் போகலாம்', 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்' எனும் பல பழமொழிகள் வாயின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றன. தொடர்பாடலிலும் வாயினது பங்கே ஏனையவற்றை விட விஞ்சி நிற்கின்றது. எனவே இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த வாய்க்கென்று ஒரு தினம் வேண்டுமல்லவா? எனவேதான் வாயில் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த "உலகளாவிய வாய்ச் சுகாதார தினம்" அனைத்துலக ரீதியில் மார்ச் இருபதாம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

## ஆரோக்கியமான புன்னகை

இந்த ஆண்டுக்கான வாய்ச் சுகாதார தின தொனிப் பொருளாக "ஆரோக்கியமான புன்னகையை கொண்டாடுதல்" (Celebrating Healthy Smiles)என்பது அமையப் பெற்றுள்ளது.
அதாவது வாய்ச் சுகாதாரம் வாழ்க்கையின் முக்கியமான அங்கம் என்பதை தெரிவிப்பதற்காகவே இவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றது. உணவை உண்ணவோ, பேசுவதற்கோ, முத்தமிடுவதற்கோ ஆரோக்கியமான வாயே அவசியமாகும். அதனைப் பேண நாம் முன்வர வேண்டும்என இத்தினம் அழைப்புவிடுக்கின்றது.

## வாயின் பகுதிகள்

வாய் என்று சொல்லும்போது சிலர் உதடுகளை மட்டுமே நினைப்பதுண்டு. ஆனால் வாய் என்பது உதடுகள் முதல் தொண்டை வரையான கன்னத்தின் உட்பகுதிகள், மேலண்ணம், கீழண்ணம், பற்கள், முரசு, நாக்கு என அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியது.
உலகிலே 90 வீதமானவர்கள் வாய்ச் சுகாதாரப் பாதிப்பினால் உபாதைகளை அனுபவித்து வருவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.
எனவே வாயின் பகுதிகளை நாம் ஆரோக்கியமாகப் பேணுவதே வாய்ச் சுகாதாரத்தைப் பேணி ஆரோக்கிய புன்னகையை அள்ளித் தரும் வழியாகும்.

## பற் சுகாதாரம்

வாயின் சுகநல நிலையோடு அதிகளவில் தொடர்புறுவது பற்களேயாகும். "பல்லுப் போனால் சொல்லுப் போகும்" என்பார்கள். அந்த வகையில் தெளிவாகப் பேசவும், உணவை நன்கு அரைத்து உண்ணவும், முகத்துக்கு நல்ல அழகைக் கொடுக்கவும் இந்தப் பற்கள் பெரும் பங்காற்றுகின்றன.

## பற்சூத்தை

பற்களை நாம் சரியான முறையில் பேணாவிடில் பற் சூத்தை ஏற்படுகிறது. பற் சூத்தை ஏற்படக்காரணம் எமது வாய்க்குழியில் தேங்கிவிடும் உணவுத் துணிக்கைகளேயாகும். வாய்க்குழியிலே உள்ள பக்றீரியாக்கள் குறிப்பாக மாவு/சீனித்தன்மையான உணவுப் பொருள்களுடன் செயற்படும்போது வெளிவரும் அமிலமானது பல்லின் மிளிரியினைக் கரைத்து சிறு குழியை(Cavitic)ஏற்படுத்துகின்றது. இது நாளடைவில் பெரிதாகி அதனூடாக நுண்ணங்கிகள் பல்லின் உட்புறம், பல்வேர் வரையும் சென்று தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
பாலூட்டிகளுக்கு இரு வகையான பற்கள் காணப்படும். ஒன்று பாற்பற்கள் (20) இது ஆறு முதல் பதின்மூன்று வயதினுள் விழுந்துவிடும். மற்றையது நிரந்தரப் பற்கள் (32) இது பாதிப்படைந்து விழுந்தால் மீண்டும் முளைப்பதில்லை. சிலர் பாற்பற்கள் சூத்தையடைவதைப் பற்றி கவனமெடுப்பதில்லை. இது விழுந்து புதிய நிரந்தரப் பற்கள் முளைக்கும் தானே என்பார்கள். இது தவறு. பாற்பற்கள் சூத்தையடைந்திருக்கும் போது அதன் கீழே ஜெலி உருவில் அமைந்திருக்கும் நிரந்தரப் பற்களும் பாதிப்பிற்குள்ளாகும் வாய்ப்பு உண்டு. நிரந்தரப் பற்களைப் பாதுகாக்க வேண்டுமெனில் பாற்பற்களும் பாதுகாக்கப்படல் வேண்டும்.
உணவு உண்ட பின் ஒவ்வொரு தடவையும் பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு இரு தடவைகளாவது (காலை/இரவு) பற்தூரிகையும் பற்பசையும் கொண்டு பற்களிடையே படிந்துள்ள உணவுத் துணிக்கைகள், பக்றீரியாக்களை அகற்ற வேண்டும். இவ்வாறு செய்வதால் வாயின் அமிலத்தன்மையும் குறைக்கப்படுவதோடு நுண்ணங்கிகளின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. உணவு உண்டு இருபது நிமிடங்களுக்குள் பல் துலக்குவதே மிகச் சிறந்ததாகும்.

## பல் துலக்குதல்

இதற்காக பல்லின் எல்லா இடங்களுக்கும் சென்று சுத்தம் செய்யக் கூடிய வளைவு கழுத்துடையதும் நேரான தூரிகைகளை உடையதுமான பற்தூரிகையும் சிறிய நிலக்கடலை (கச்சான்) அளவிலான புளோரைட்டு அடங்கிய பற்பசை யும் போதுமானது.
இதனைப் பயன்படுத்தி ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரையாவது பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும். குறிப்பாக பற்களுக்கு 45 பாகைகள் சாய்வாக தூரிகை முரசை நோக்கி இருக்கக் கூடியவாறு பிடித்து பல்லின் இடுக்குகளிடையே உள்ள உணவுத் துணிக்கைகள் பக்றீரியா படிவுகள் என்பவற்றை நீக்க வேண்டும்.
ஒவ்வொரு பற்களுக்கும் உள், வெளி, கடிக்கும் பகுதி என மூன்று பக்கங்கள் காணப்படும். இந்தப் பக்கங்கள் யாவும் சுத்தம் செய்யப்பட வேண்டும்.
கீழ்ப் பற்களை கீழிருந்து மேலாகவும், மேற் பற்களை மேலிருந்து கீழாகவும் பற் தூரிகையால் சுத்தமாக்க வேண்டும். அத்துடன் கீழ் மற்றும் மேல் பற்களின் கடிக்கும் பகுதியை வட்டவடிவான அசைவுடன் தூரிகையால் தேய்த்து சுத்தப்படுத்த வேண்டும். இறுதியில் நாவை வழித்து சுத்தமாக்க வேண்டும். பின்பு வாயை சுத்தமான நீரினால் ஒரு முறை சாதாரணமாக கொப்பளித்தால் போதுமானது.

## புளோரைட்டின் பயன்பாடு

பற்பசையில் உள்ள புளோரைட்டு பற்சூத்தை உருவாக காரணமாகும் சிறு குழி (Cavitic) யை கனியமாக்குதல் மூலம் மூடிவிடுகின்றது. இதனால் நுண்ணங்கிகள் பற்களினுள் சென்று பற் சூத்தை (Dental caries) உருவாவது தடுக்கப்படுகிறது.
இந்த புளோரைட் ஆனது கரி, பற்பொடி போன்றவற்றில் இருப்பதில்லை. எனவே இவை பற்சூத்தை ஏற்படுவதைத் தடுப்பதில்லை. மாறாக பற்பொடியில் உள்ள நிறச்சாயம் அழுக்குகளை நிறமூட்டி மறைப்பதோடு; அதிலுள்ள சீனித் தன்மை பக்றீரியாக்களின் செயற்பாட்டை மேலும் அதிகரித்து பற்சூத்தை ஏற்படும் வாய்ப்பைக் கூட்டுகிறது.
பொதுவாக ஒரு லீற்றர் நீரிலே 0.5-1.0 மில்லி கிராம் புளோரைட்டு காணப்பட்டால் அது பற் சூத்தை ஏற் படுவதை ஆரம்பத்திலேயே தடுக்கக் கூடியதாக அமையும். இதற்காக குறைவான புளோ ரைட்டை கொண்ட நீருடன் புளோரைட் சேர்த் தல், புளோரைட் கொண்ட பற்பசையைப் பாவித்தல் மூலம் பற்சூத்தை ஏற்படுவது தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
ஆனாலும் நீரிலே கூடியளவு புளோரைட்டு காணப்பட்டால் அது "புளோரோசிஸ்" எனும் நோய் நிலையை ஏற்படுத்தும். இதனால் பல் வெண்கட்டி போன்ற நிறமுடையதாகி வலிமை இழந்து இலகுவில் உடைந்து விடக் கூடிய தன்மையடையும்.

## பற்காவி படிதல்

பற்களில் காவி படிதல் என்பது ஒட்டும் தன்மையான மஞ்சள் நிறப் படலமாக பக்றீரியாக்கள் மாறுவதேயாகும். இதனை ப்லாக் (Plague) என அழைப்பர். இது சரியான பல் துலக்கும் முறையைப் பயன்படுத்துவதன் மூலம் அகற்றப்பட வேண்டியதாகும்.
நீண்ட நாள்களுக்கு இந்த Plague அகற்றப்படாது விட்டால் அது tartar எனும் நிலையை அடையும் இது கடினத் தன்மையானதாக பற்களுக்கும் முரசிற்குமிடையில் படிந்திருக்கும். கறுப்பு சார் நிறமாக காணப்படும். இதில் பெரும் எண்ணிக்கையான Bacteria க்கள் காணப்பட்டு பற் சூத்தை ஏற்பட வழி செய்வதோடு அவற்றின் சுரப்புகள், செயற்பாடுகளினால் முரசிலும், பல் என்பு போன்ற பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.
முரசுகளில் வீக்கம் , சிவத்தல், வலி என்பன ஏற்படலாம். இதனை முரசழற்சி (Gingivitis) என அழைப்பார்கள். பல் என்புப் பகுதியில் ஏற்படும் தொற்றால் பல் ஆடுதல், பல் விழுதல் போன்ற நிலைகளும் ஏற்படலாம். இதனை பல் - என்பு சுற்றயல் தொற்று(Periodontits) எனவும் அழைப்பர். இவ்வாறான நிலைகள் ஏற்படக் காரணம் மாவு/சீனி யுடைய ஒட்டுந் தன்மை யான உணவுகளை உண்ட பின் பற்களைச் சுத்தம் செய்யாமையே ஆகும்.

## புகைத்தல் மதுசாரப் பாவனை

அதிகப்படியான புகைப்பொருள், மதுபானம் பாவிப்போரின் வாய்ச் சுகாதாரம் ஆபத்தானதாகவே இருக்கும். இதனால் முரசு, பல்-என்புத் தொற்றுக்கள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகமுண்டு.
புகைப்பொருள், மது பாவனை, வெற்றிலை சுண்ணாம்புப் பாவனை போன்றவை வாய்க்குழியினுள் நாவு, கன்ன உட்சுவர்களைத் தாக்கி வாய்ப்புற்றுநோய் வரும் வாய்ப்பை அதிகப்படுத்துகின்றன.
இதைவிட ஒழுங்கற்ற அல்லது உடைந்த நிலையில் கன்னம், நாவை துருத்தியபடி காணப்படும். பற்களும் புற்றுநோய் தூண்டக் கூடியனவாக அமைகின்றன.

## ஆபத்தான உணவுகள்

மாப்பொருள் அதிகமடங்கிய ஒட்டக்கூடிய உணவுகளும், சீனித் தன்மையான உணவுகளும், அதிக அமிலத்தன்மை வாய்ந்த உணவுகளும் வாய்க்குழியில் தேங்கியிருக் கை யில் வாய்ச் சுகாதாரக் கேட்டை அதிகரிக்கும்.

## பாதுகாப்பான உணவுகள்

பச்சைத் தேயிலை (Green tea) எனப்படும் தேயிலையில் காணப்படும் கூறுகள் (Poly phenol antioxidant) வாய்க்குழியில் செயற்பட்டு பற்காவி படிதல்(Plaque), பற்சூத்தையின் ஆரம்பம் (Cavitic)உருவாவதை தடுப்பதோடு முரசழற்சி , கெட்ட மணம் என்பவற்றையும் தடுத்து பற்களுக்கு உறுதியும் வழங்குகின்றது.
பாலாடைக் கட்டி (Cheese)யிலுள்ள பொஸ்பேற் ஆனது வாய்க்குழியின் PH இனை (அமில-கார தன்மை) சமநிலையில் பேணி பக்றீரி யாக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றது.
அப்பிள், நெல்லி போன்ற விற்றமின் C உடைய உணவுகள் முரசு கரைவதைத் தடுத்து முரசை பலமடையச் செய்கின்றன. பூசணிக்காய், கரட், பீற்றூட் போன்ற விற்றமின் A ஐ பெறக்கூடிய உணவுகள் பல் மிளிரியை உறுதி பெற வைத்து பற்சூத்தை ஏற்படுவதை தடுக்கின்றன.
வெங்காயமானது நுண்ணுயிர் எதிர்ப்புத் தன்மையான பதார்த்தங்களைக் கொண்டிருந்து பல்வேறு வகையான பக்ரீறியாக்களை அழிக்கின்றது. விசேடமாக வெங்காயத்தை பச்சையாக உண்பது இதனை மேலும் ஊக்குவிக்கும்.
விலங்குணவுப் பொருள்களான பால், முட்டை, மீன், இறைச்சி வகை என்பன கல்சியம், பொஸ்பரஸ் எனும் கனியங்களை அதிகம் கொண்டிருப்பதால் பல்லின் உறுதியை அதிகரித்து அவற்றில் நோய்த்தாக்கம். வராது தடுக்கின்றன.
எனவே நாம் இவ்வாறான உயிர்ச்சத்துக்கள், கனிப்பொருள்கள் அடங்கிய சமபல உணவை உண்பதன் மூலம் வாய்ச் சுகாதாரத்தையும் முழு உடல் நலனையும் மேம்படுத்த முடியும்.

## ஆபத்தான நோய்கள்


கிரமமாக வாய்ச் சுகாதாரத்தைப் பேணாமை தனியே முரசு, பல், வாய்க்குழி சார்ந்த நோய்களை மட்டுமன்றி உயிர் ஆபத்துகளை விளைவிக்கும் மாரடைப்பு, பக்றீரியாவால் ஏற்படும் நிமோனியா, நிறை குறைவான குழந்தைப் பிறப்பு, அதிகூடிய நிறையுடைய பிள்ளை பிறப்பு, நீரிழிவு நோய் நிலையில் சிக்கல்கள், என்பு மூட்டுக்கள் தேய்தல், பலவீனமடைதல் போன்றவையும் ஏற்பட வாய்ப்புண்டு.

## நாம் கடைப்பிடிக்க வேண்டியவை

தினமும் குறைந்தது இரு தடவைகளாவது (காலை, இரவு) சரியான முறையில் புளோரைட் அடங்கிய பற்பசை, தூரிகையில் பல் துலக்குதல், நாவினை பற் தூரிகை அல்லது அதற்கான மழிப்பானினால் சுத்தப்படுத்துதல், தினமும் கண்ணாடியின் உதவியுடன் வாய்க்குழியை சுயபரிசோதனை செய்தல் என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.
ஏதாவது மாறுதல்கள் தென்பட்டால் பல் வைத்தியரை நாடி உரிய தீர்வைப் பெறுதல் வேண்டும். குறிப்பாக பற்சூத்தையை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதனை அடைத்து (Filling) விடுதல் அல்லது ஆபத்தானவற்றைப் பிடுங்கி விடுதல் வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்த உதவும்.
குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையாவது பல் வைத்தியரைச் சந்தித்து பரிசோதிப்பது மிகவும் நன்மை தரும் விடயமாகும். வயது செல்ல பல் விழும் என்பது பிழையான ஒரு கருத்தாகும். நாம் வாய்ச் சுகாதாரத்தைச் சிறப்பாகப் பேணாமையினாலேயே பற்கள் உறுதி இழந்து, பற் சூத்தை ஏற்பட்டு, முரசு, பல் என்புத் தொற்றுக்கள் ஏற்பட்டு அவற்றை இழக்க நேரிடுகிறது.
எனவே ஆரோக்கியமான புன்னகையைக் கொண்டாடி எமது ஆயுள் முழுவதும் மகிழ்வோடிருக்க வாய்ச் சுகாதாரத்தின் அவசியத்தை உணர்ந்து அதைக் கடைப்பிடிக்க முன்வருவோம். குறிப்பாக குழந்தைகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் வாய்ச் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை அறிய வைப்பதோடு நாமும் அவர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்படுவோமாக.

---

**தவக்காலச் சிந்தனை**



### நம்பிக்கையே நலம் தரும்

எமது அன்றாட வாழ்வின் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வெற்றி பெற இறை நம்பிக்கையும் தொடர் முயற்சியும் துணை புரிகின்றன. யானையின் பலம் தும்பிக்கையில் தங்கியுள்ளமை போன்று மனிதரின் பலம் நம்பிக்கையிலே தங்கியுள்ளது.
எமது நாட்டினதும் வீட்டினதும் சமுதாயத்தினதும், பிரச்சினைகளுக்கு பரஸ்பர நம்பிக்கையற்ற தன்மையே அடிப்படைக் காரணியாக அமைகிறது. புரிந்துணர்வும், ஏற்புடைமையும், தியாக சிந்தையும் இதயத்தில் இருந்தால் நம்பிக்கை தானாக மிளிரும். இதனை இயேசுவின் வாழ்வுப் பாடம் எமக்கு உணர்த்தி நிற்கிறது.
"இறை தந்தை மீது இயேசு வைத்திருந்த அசையாத நம்பிக்கை மூலமே அருங்குறிகள், அற்புதங்கள் வழியாக மக்களை வழிப்படுத்தி விசுவாசமூட்ட அவரால் முடிந்தது. இறைபலத்தை நம்ப மறுத்து மனித பலத்தை நம்பி அமைதியை விடிவை நாடி மாயைகளின் பின்னே நாம் ஈர்க்கப்பட்டுச் செல்லவில் லையா?" "கடவுள் ஒருவரே; அவர் தரும் கொடையை நாடாது ஒருவர் மற்றவரிடம் இருந்து பெருமைதேடிக் கொள்கிறீர்களே (யோவா 5:44) என்று இயேசு நமக்கு அறிவுரை கூறுகிறார்.

*எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடி வந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்**: அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மிதுனம்**:பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். தாய்வழி உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.

**கடகம்**: தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**சிங்கம்**: மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப் பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**கன்னி**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**துலாம்**: அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். மற்றவர்களுக்கு நியாயம் பேசப்போய் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மன உளைச்சலை ஏற்படுத்துவார்கள்.

**விருச்சிகம்**: எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையைச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு ஏற்பட்டு விலகும்.

**தனுசு**: நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள்.

**மகரம்**: சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**கும்பம்**: துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தாயாரின் நீண்டநாள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்**: சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என்று ஆதங்கப்படுவீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

## நாளை

**பங்குனி-07 வெள்ளிக்கிழமை | 21.03.2014**

திதி: பஞ்சமி மு.இ.09.50 வரை
நட்சத்திரம்: விசாகம்
பி.ப.03.30 வரை

சுபநேரம்: 06.17-07.47 வரை
இராகுகாலம்:.10.47-12.17 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## மந்திரமும் மந்திர சைதன்யமும்

குரு சிஷ்ய பரம்பரையாக வழங்கப்பட்டு வரும் சொற்கள் சில. அவற்றை ஜெபம் செய்வதால் ஒரு வித சித்தி பெறலாம். இது மந்திர சாஸ்திரிகளின் நம்பிக்கை. மந்திர சைதன்யம் என்ற சொல் இரு வகையில் பொருள் கொள்ளப்படுகிறது. குறிப்பிட்டதொரு மந்திரத்தை ஜெபித்தால் அதன் அதிதேவதையான உங்கள் இஷ்ட தேவதையை நீங்கள் காண்பீர்கள் என்பது சிலர் கூறும் பொருள். மற்றும் சிலர் கூறும் பொருள் வருமாறு : தகுதியற்ற ஒரு குருவிடமிருந்து மீந்திரோபதேசம் பெற்று அதனை ஜெபிக்க விரும்பினால் அதற்குச் சில பரிகாரங்கள் செய்ய வேண்டும். அவ்வாறு செய்து அந்த மந்திரத்தைச் சேதனமாக்க வேண்டும். அதாவது உயிர் பெறச் செய்தல் வேண்டும். அதன் பிறகு அதனை ஜெபித்தால் பலன் தரும். இவ்வாறு ஜீவன் பெறும் வெவ்வேறு மந்திரங்கள் வெவ்வேறு குறிகளைக் காட்டும், எனினும் எல்லாவற்றுக்கும் பொதுவான குறி ஒன்றுண்டு. அது யாதெனில் சிரமம் ஏதுமின்றி நீண்ட காலம் ஜெபம் செய்ய இயலும். சீக்கிரத்தில் மனம் ஒரு முகமாகும். இது தாந்த்ரீக மந்திரம் பற்றியது. வேத காலம் முதல், மந்திரங்கள் பற்றிய இரு வகைக் கருத்துக்கள் நிலவி வருகின்றன. யாஸ்கரும் பிறரும் வேதங்கள் பொருள் உள்ளவை என்பர். ஆனால் புராதன மந்திர சாஸ்திரிகளோ "வேத மந்திரங்கள் பொருள் அற்றவை; யாக காலத்தில் பாராயணம் செய்வதற்கே தக்கவை; அப்போதைய உலக இன்பங்கள் பலவற்றைத் தர வல்லவை; ஆன்மிக அறிவு அளிக்கவல்லவை" என்பர். பின்னையது உபநிடதங்களைச் சொல்வதால் ஏற்படுவது.

# புற்றுநோய் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தது


தற்போதைய சூடான் பகுதியில் 3000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு இளைஞனின் எலும்புக் கூட்டில் புற்றுநோய்க்கான சான்றுகளைக் கண்டுபிடித்துள்ளதாக பிரிட்டனின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகில் மிக பழைமையான புற்றுநோய் பாதிப்பு என்று இதுவரை நம்பப்படும் சம்பவத்தை விட இது 2000 ஆண்டுகள் பழைமையானதாகும்.

இந்த எலும்புகளில் துளைகள் இருந்தன. அவை ஒரு வகையான புற்றுநோய்க்கான சான்று என்றும் மிகெலா பிண்டர் என்ற ஆராய்ச்சியாளர் கண்டறிந்துள்ளார்.

'பிலொஸ் ஒன்' என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வு புற்றுநோய் என்பது முற்றிலும் ஒரு நவீன கால நோய் அல்ல என்று தெரிவிக்கின்றது.

**எலும்புகளில் துளைகள் இருந்தன. அவை ஒரு வகையான புற்றுநோய்க்கான சான்று என்றும் மிகெலா பிண்டர் என்ற ஆராய்ச்சியாளர் கண்டறிந்துள்ளார்.**





மேலும் ஆயிரக்கணக்கான வருடங்களாக எவ்வாறு இந்த நோய் பரிணமித்திருக்கிறது என்பதை விஞ்ஞானிகள் கண் காணிக்கவும் இந்த ஆய்வு உதவும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | | 3 | | | 1 | 2 | |
| 3 | | | | 1 | | 9 | 7 | |
| 7 | | 1 | 4 | 2 | | | | |
| 6 | | 3 | 7 | | | | 1 | |
| | 1 | | | | | | 8 | |
| | 7 | | | | 5 | 2 | | 6 |
| | | | | 5 | 3 | 8 | | 2 |
| | 4 | 5 | | 6 | | | | 1 |
| | 3 | 2 | | | 1 | | 6 | 5 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 7 | 3 | 8 | 9 | 1 | 5 | 2 |
| 5 | 8 | 1 | 6 | 2 | 7 | 3 | 9 | 4 |
| 3 | 9 | 2 | 5 | 1 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 2 | 4 | 9 | 6 | 5 | 8 | 1 | 3 |
| 9 | 3 | 8 | 1 | 7 | 2 | 4 | 6 | 5 |
| 1 | 6 | 5 | 4 | 3 | 8 | 2 | 7 | 9 |
| 4 | 1 | 3 | 7 | 5 | 6 | 9 | 2 | 8 |
| 8 | 7 | 9 | 2 | 4 | 1 | 5 | 3 | 6 |
| 2 | 5 | 6 | 8 | 9 | 3 | 7 | 4 | 1 |

20 MAR 2014 பொது சன நூலகம்





## நட்பு

அன்னை கர்ப்பம் தாண்டி
வந்த போது நினைக்கவில்லை
நண்பியாய் உனை
அடைவேனென்று ஆனால்
இன்று நினைக்கிறேன்
அன்னை கர்ப்பம் தாண்டி வந்ததே
உன் நட்பைச் சுவாசிக்கத்
தானென்று
நொடிகளும் தவற விடாமல்
உனையே
தினமும் நினைக்கிறேன்
நீ தரும் அன்பு இறுதி வரை
அழிந்திடாதிருக்க
இறைவனையும்
வேண்டுகிறேன்
உன் நட்பொன்றே போதுமடி
நான் நலமாய் வாழ்ந்திட!
உலகில் உயர்ந்த பந்தம் நட்பு
அது உடைந்திடாமல்
வேண்டுமடி எனக்கு!

*சுதர்சினி திருநாவுக்கரசு,*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி.*

## நினைவுகள்...

ஒவ்வொரு நொடி கடக்கும்
போதும் அவன் நினைவைக்
கடக்க முடியவில்லை...
கண்களும், மனமும்
மௌனத்தின் வழியாக
அவன் நினைவைக்
கடக்க முயல்கின்றன
தொலைவுகளில் நீயிருந்தாலும்
நீண்ட தூரமாய் நீ
விலகிப் போனாலும்
உன்னோடு கரைந்து போன
ஒரு நொடி போதும்
என் காதல் கரையாமலிருக்க
அன்பே!
இரவுகளைத் தூக்கத்துக்குக்
கொடுத்தேன் - உன் நினைவுகளை
எங்கே கொடுக்க...?

*எஸ். தர்சி, சுண்டுக்குளி*



## சமூகச் சீர்கேட்டுக்கான காரணம்



# தகவல் தொழில்நுட்பமே

சமுதாய சீர்கேட்டுக்கு தகவல் தொழில்நுட்பமா அல்லது மாறி வரும் கலாசாரமா காரணம் என்று ஆராயுமிடத்து சமூக சீர்கேட்டுக்கு காரண மாக அமைவது தகவல் தொழில்நுட்பம்தான் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் சமூகச் சீர்கேட்டுக்கு தகவல் தொழில்நுட்பம் காரணமாகிறது. அபிவிருத்தி அடைந்த நாடுகள் புதிய புதிய தகவல் தொழில்நுட்ப முறைகளைக் கண்டு பிடித்து சாதனையாளர்களாகி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்கிறார்கள். ஆனால் நம்மவர்கள் தகவல் தொழில் நுட்பத்தை தவறான முறையில் பயன்படுத்தி சமுதாயத்தை சீரழிப்பதில் சாதனையாளர்கள் ஆகிறார்கள்.

வெளிநாடுகளில் பனியிலும், வெயிலிலும் கஷ்டப்பட்டு உழைத்து எமது உறவுகள் அனுப்பும் பணத்தை வீண் செலவு செய்து பணத்தின் அருமை புரியாத வர்களாகிறார்கள். வியர்வை சிந்தி உழைப்பவன் இவ்வாறு உழைக்கும் பணத்தை வீண் செலவுகளுக்கு உள்ளாக்க மாட்டான். சிறந்த முறையில் பயன்படுத்துவான்.

சமூக சீர்கேட்டுக்கு காரணமாக தகவல் தொழில்நுட்ப சாதனங்களில் மிகவும் முன்னிலை வகிப்பது தொலைபேசியே. தொலைபேசி என்பது தொலைவில் இருப்பவர்களுடன் தொடர்பு கொள்ளவே கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த தொலைபேசி இன்று பலருடைய வாழ்க்கையை கேள்விக் குறியாக்கியுள்ளது. இந்தத் தொலைபேசியினால் பலர் தவறான பாதையில் சென்று குடும்பத்தோடு சந்தோசமாக இருக்க முடியாத சூழ்நிலைக்கு உள்ளாகிறார்கள்.

மாறிவரும் உலகுக்கு தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் அவசியம் என்பது பொய்யல்ல. ஆனால் அவற்றை பயன்தரும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

தகவல் தொழில் நுட்பத்தை நல்ல வழியில் பயன்படுத்தினால் இவ்வாறானதொரு விவாதம் அவசியமாக இருக்காது. அதை இதிலிருந்தே உணர முடிகிறது. சமூக சீர்கேட்டுக்கு காரணமாக அமைவது தகவல் தொழில் நுட்பமே என்பதில் சந்தேகமே இல்லை.

*கே. சுஜி,*
*குடத்தனை.*

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**சமூகச் சீர்கேட்டுக்குக் காரணம்**

**தகவல் தொழில்நுட்பமா? மாறி வரும் கலாசாரமா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## வெற்றிக்கு தடைகள்

- ★ தான் என்ற அகந்தை
- ★ தோல்விப் பயம்
- ★ திட்டமின்மை
- ★ இலக்குகளை வகுத்துக்கொள்ளாதிருத்தல்
- ★ வாழ்க்கை மாறுதல்கள்
- ★ வேலைகளைத் தள்ளிப் போடுதல்
- ★ குடும்பப் பொறுப்புகள்
- ★ பொருளாதாரப் பாதுகாப்பு விடயங்கள்
- ★ ஒருமுகப்படுத்தாமை
- ★ குழம்பி இருத்தல்
- ★ பணத்துக்காக நோக்கத்தைக் கைவிடுதல்
- ★ அதிகமான வேலைகளைத் தனியாகவே செய்வது
- ★ அதிகப்படியான கடமைப் பொறுப்பு
- ★ கடமைப் பொறுப்பின்மை
- ★ பயிற்சியின்மை
- ★ தொடர்ந்து முயற்சி செய்யும் உறுதி இல்லாமை



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................................

முகவரி :- ......................................................

......................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# காலையில் உடற்பயிற்சி செய்தால் அதிக நன்மைகள்





உடற்பயிற்சி என்றால் அது கடினமானதாகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. தற்போதுள்ள கால கட்டத்தில் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கான வழிகளில் ஒன்றாக உடற்பயிற்சி கருதப்படுகிறது.

உடற்பயிற்சியின் மகத்துவத்தை உணர்ந்தவர்கள் மட்டுமே தினமும் உடற்பயிற்சியை மேற்கொள்கிறார்கள். ஆனால் சிலர் உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்று நினைப்பார்கள். எனினும் சோம்பேறித்தனத்தால், உடற்பயிற்சி தானே நாளை செய்து கொள்ளலாம் என்று விட்டுவிடுவார்கள். குறிப்பாக உடற்பயிற்சியை காலையில் செய்தால் அதனால் கிடைக்கும் பயன்கள் என்னவென்று பார்க்கலாம்.

பசியின்மையால் அவஸ்தைப்படுபவர்கள், காலையில் உடற்பயிற்சி செய்து வந்தால், பசி நன்கு எடுக்கும். அதனால் மூன்று வேளையும் சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் செரிமான மண்டலம் மற்றும் குடலியக்கம் சீராக வேலை செய்ய ஆரம்பிக்கும். தினமும் காலையில் உடற்பயிற்சியைச் செய்து வர, உடலின் ஆற்றல் அதிகரித்து, நாள் முழுவதும் நன்கு ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்புடனும் உங்கள் வேலைகளைத் தொடர முடியும்.

தினமும் காலையில் 20 நிமிடம் உடற்பயிற்சி செய்தால், மன அழுத்தம் மற்றும் மன இறுக்கத்தில் இருந்து விடுபடலாம். மேலும் எப்போதாவது மனம் மிகவும் கஷ்டமாக இருக்கும் போது, காலையில் சிறிது தூரம் நடந்தால், நல்ல காற்றை சுவாசிக்க நேரிடும்.

இதனால் மனம் லேசாகிவிடும். எடையைக் குறைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், காலையில் உடற்பயிற்சி செய்து வந்தால், உடலின் மெட்டபாலிசம் அதிகரித்து, கலோரிகள் விரைவில் கரைக்கப்படும். ஆய்வு ஒன்றில் மாலையில் உடற்பயிற்சி செய்பவர்களை விட, காலையில் உடற்பயிற்சி செய்வோருக்குத் தான் நல்ல நிம்மதியான தூக்கம் வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. காலையில் உடற்பயிற்சி செய்தால், உடலின் மெட்டபாலிசம் அதிகரிப்பதுடன், இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு மற்றும் தசைகளுக்குச் செல்லும் இரத்தத்தின் அளவை சீராகவும் வைத்துக் கொள்ளும். எனவே தினமும் காலையில் 30 நிமிட நேரம் உடற்பயிற்சி செய்துவந்தால் அதிக நன்மைகளை அடையலாம்.

**தவறிவிட்டது**

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த சி.கோகுலன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (930083976V)யும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரமும் (SM/JF/13/ABB1 410) நெல்லியடி பிரதான வீதியில் தவறவிடப் பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (33410) (5.3.6)

தொடர்பு:0776 103 879

**மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு**

**Veetech Golobal Company**

Car Company Workers or Manufacturing

வயது : 25-45

சம்பளம் :1800 Rm+OT

தங்குமிடம் இலவசம் மற்றும் மருத்துவம், உணவு

மலேசியாவின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. (30396)(3.6.4)

உடனடியாக அணுகவும்.

T.P: 077 663 2608, 077 582 9547

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

**விற்பனைக்குண்டு**

பஜாஜ்M 80 4STOKE NP GH xxxx மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 261 0455 (சி/12766)(3.6.4)

**இலவச ஆங்கில வகுப்பு**

ஆண்டு 11 மாணவர்களுக்கு திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில்

தொடர்பு:077 261 0455 (சி/12765)(3.6.4)

**தேவை**

உங்கள் இல்லங்களில் அலுவலகங்களில் உள்ள பழைய புத்தகங்கள், பத்திரிகைகள், கொப்பிகள், காகிதாதிகள், காட்போட் என்பவற்றை பணம் தந்து கொள்வனவு செய்கின்றோம்.

(30398)(3.6.4) தொடர்பு:077 418 0185

Rural Development Foundation

## கிராம அபிவிருத்தி நிறுவனம்
## கேள்விப்பத்திர அறிவித்தல் - ஆரம்ப பாடசாலை நிர்மாணித்தல்

கிராம அபிவிருத்தி நிறுவனத்தினால் (RDF) UNHCR நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கீழ் குறிப்பிடப்படும் விவரங்களுக்கமைவாக மன்னார், மடு கல்வி வலையத்திற்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் கிராமத்தில் ஆரம்ப பாடசாலைக் கட்டடம் நிர்மாணிக்க முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக கட்டட நிர்மாணப் பணிகளில் அனுபவமுள்ள தகுதியான குறிப்பிட்ட பிரதேச ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கட்டட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இக் கேள்விப்பத்திர அறிவித்தலுக்கான கேள்விப் பத்திரங்கள் கண்டிவீதி, தேக்கவத்தை வவுனியா. எனும் முகவரியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி நிறுவன மாவட்டக் காரியாலயத்தில் 17.03.2014 ஆம் திகதி தொடக்கம் 26.03.2014 ஆம் திகதி வரை வார நாள்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 03.00 மணிவரையான காலப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் குறித்த அலுவலகத்தில் உள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் 2014. மார்ச் மாதம் 27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும்.

**விவரங்கள்**

| இல | வேலை விவரம் | அலகு | தேவையான பதிவு வகுப்பு (Ictad) | ஒப்பந்த காலம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | 60'x25' அளவுள்ள ஆரம்ப பாடசாலைக் கட்டடம் நிர்மாணித்தல் | 01 | C-7 அல்லது அதற்கு மேல் | 04 மாதங்கள் | 05 மாதங்கள் |

கேள்விப் பத்திரம் கோருபவர் ஒருவருக்கு ஆவணங்களின் ஒரு பிரதி மாத்திரம் விநியோகிக்கப்படும். மேலதிக விடயங்களை மாவட்ட முகாமையாளரிடம் 0242222962 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் பெறுபவர்களினால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரத் தகவல்கள் நிறுவனத்தினால் பரிசீலிக்கப்படும். இனம்காணப்பட்ட தெரிவு நடைமுறை சார்ந்த ஒப்பீட்டு அளவிலான பொறுப்பு, கேள்விப்பத்திர குழுவின் தற்துணிவு அதிகாரங்களைச் சார்ந்திருக்கும்.
தாமத, முழுமைபெறாத மற்றும் தொலைநகல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

கேள்விப்பத்திரங்கள் 2014. 03. 31ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு மேற்குறிப்பிட்ட முகவரியில் இயங்கும் RDF மாவட்டக் காரியாலயத்தில் திறக்கப்படும்.

**செயலாளர்**
கவனிப்பு மாவட்ட முகாமையாளர்.
கிராம அபிவிருத்தி நிறுவனம்.
தேக்கவத்தை.
வவுனியா.

(43218) (10.6.3)

## வாய்ச் சுகாதார தின நிகழ்வுகள் இன்று முதல் ஆரம்பம்

"ஆரோக்கியமான புன்னகையை கொண்டாடுவோம்" என்னும் தொனிப்பொருளில் இன்று உலக வாய்ச் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் பொருத்தமான சுகாதார நிகழ்வுகள் மூலம் தேசிய, மாகாண, மாவட்ட, பிராந்திய மற்றும் சமூக மட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளை நடத்துமாறு சுகாதார அமைச்சு சகல சுகாதார நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளது.

நிகழ்வுக்குச் சுகாதார உத்தியோகத்தர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறுவர் அபிவிருத்திச் சமூகம், பாடசாலைச் சமூகம், நோயாளர்கள், நோயாளர்களைப் பார்வையிட வரும் உறவினர்கள் ஆகியோர் பங்குபற்றும் விதத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று தொடக்கம் ஒரு மாதத்துக்கு உலக வாய் சுகாதார தினத்தின் தொனிப் பொருளை நோக்கிய காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

### வணிக தினம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வணிக மன்றத்தினரால் இந்த ஆண்டுக்கான வணிக நாள் நிகழ்வுகள் இன்று முற்பகல் 10 மணியளவில் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவரஞ்சனி சிவாஸ்கரன் கலந்துகொள்வார். (க)

### இரத்ததானம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு மூளாய் வீதி ஸ்ரீ கணேசா வாசிக சாலையில் நடைபெறவுள்ளது. (வ-14)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




கல்வி அமைச்சினால் அகிலஇலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட நடனப் போட்டியில் (பதம்) எமது கல்லூரி மாணவி

செல்வி ஜெயபாலன் ஆதித்தியா

தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரைப் பயிற்றுவித்த நடன ஆசிரியை திருமதி பிரியதர்சினி வாகீசன் அவர்களுக்கும், பக்கவாத்திய இசை வயலின் இசைத்த ஆசிரியை திருமதி மாலினி உலகநாதன் அவர்களுக்கும், பாடல் இசைத்த மாணவிகளான லோகேஸ்வரன் சிந்துஜா, விக்னேஸ்வரன் கோபிதா அவர்களுக்கும் மிருதங்கம் இசைத்த மாணவன் செல்வன் முத்துக்குமாரசாமி கருணாலயன் அவர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/இணுவில் மத்திய கல்லூரி

(30391) (12.3.6)

**Civil Engineer தேவை**

எமது Construction நிறுவனத்துக்கு Civil Engineer இற்கான வெற்றிடம் காணப்படுகின்றது. தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Civil Engineer-BSc Minimum 3 Years Experience
- Salary பேசித்தீர்மானிக்கப்படும்.

உங்கள் CV யை agroup2003@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:024 222 4621 (43219) (3.6.4)

**யா/இணுவில் மத்திய கல்லூரி**
**பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்**

மேற்படி பாடசாலையின் பொதுக்கூட்டம்
29.03.2014 சனிக்கிழமை பி.ப.03 மணிக்கு
கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறும்.
அதில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ச.சந்திரகுமார்.
செயலாளர்.

ம.உதயகுமாரன்.
தலைவர்.

(30392)(12.3.6)

**யாழில் ஹோமியோபதி மருத்துவசிகிச்சை**

தலைவலி, தலைசுற்றல், மூட்டுவாதம், பக்கவாதம், பாரிஸவாதம், சகலவிதமான நரம்புத் தளர்ச்சி, தும்மல் (பீனிசம்), சளி, இருமல், ஆஸ்துமா(முட்டு), முகப்பரு, கொலஸ்ரோல் மூலம் அதிகபருமன், ஆண், பெண் சம்பந்த நோய்களுக்கு எந்தப்பக்க விளைவுகளுமின்றி அற்புதமான ஹோமியோபதி சிகிச்சை அளிக்கப்படும்.

தொலைபேசியில் முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு:077 022 1119, 160/1, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (30397)(3.6.4)

2020

**இதுவரை யாருமே ஆடாத அதிரடி ஆட்டம்!**

வாழ்க்கை களத்தில் சுய வலிமையால் இன்றைய நாளின் சிறந்த ஆட்ட நாயகனாக திகழத் துடிக்கும் நாட்டின் ஒவ்வொரு முயற்சியாளருக்கும் உந்துசக்தி அளிப்பதே எமது நோக்கம்.

2014 மார்ச் 20ம் திகதி 20 புதிய அமைவிடங்களை அங்குரார்ப்பணம் செய்து வைத்து, இவ்வாறான தொழில் முயற்சியாளர்களுக்காக வேண்டிய எமது அர்ப்பணிப்புமிக்க சேவைகளை பாரிய அளவில் விஸ்தரிக்க உள்ளோம். எமது இந்த அதிரடி நடவடிக்கை உங்கள் சரவெடி ஆட்டத்தை சிறப்பிக்கவே!

COMMERCIAL CREDIT

கொமர்ஷல் கிறடிட் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி (பிரதான காரியாலயம்)
106, யட்டிநுவர வீதி, கண்டி. துரித இலக்கம்: 081 2 000 000

கொமர்ஷல் கிறடிட் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி (நகர காரியாலயம்)
45, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. துரித இலக்கம்: 011 2 000 000

www.jwt.lk

அளுத்கம, மன்னார், அரலகன்வில, மதவாச்சி, அக்குரஸ்ஸ, வெலிமடை, சுன்னாகம், நாவலப்பிட்டி, தெனியாய, பொத்துவில், நெடுந்தீவு, ரிகில்லகஸ்கட, எல்பிட்டி, தெல்தெனிய, கிரிவுள்ள, தனமல்வில, ஹட்டன், உடுகம, கல்பிட்டி, வாழைச்சேனை

(சி.12478)

www.cclk.lk

WORDS OF PEACE

உண்மையான மகிழ்ச்சி உள்ளத்தில் உள்ளது.
நீங்கள் அமைதியில் ,இருக்கும் பொழுது
அழகாகத் தோற்றமளிப்பீர்கள்.

*7 billion reasons for peace*



சர்வதேச மகிழ்ச்சி தினம்


INTERNATIONAL DAY OF HAPPINESS
20 March 2014

Call : 011 7250001

(45854)

www.wopg.org

# நான்காவது வாரப் பரிசு மழையில் நேற்று நனைந்த வெற்றியாளர்கள்





உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், ஞா.இம்மனுவேல், செ.விஜித்தா, ரி.அஜந்தனா ஆகியோருக்கு பரிசுக் கூப்பன்களை வழங்கிய போது...



உதயன் பணிமனையின் பொதுத் தொடர்பு முகாமையாளர் திருமதி. என்.தங்கராசா, இ.பகீரதனுக்கு பரிசுக் கூப்பனை வழங்கியபோது..



நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் அலுவலர் என்.லோகசபேசன், சி.ஜெரிமயாவுக்கு பரிசுக் கூப்பனை வழங்கிய போது..






நிறுவனத்தின் கணக்காளர் எ.கனகசபை, ஆர்.இராஜசந்திரன், கோ.கிருபாகரன் ,சி.அசோக்கமாலா ஆகியோருக்கு பரிசுக் கூப்பன்களை வழங்கியபோது..



நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் அலுவலர் தி.மயில்வாகனம் ப.வனிதாவுக்கு பரிசுக் கூப்பனை வழங்கிய போது...

கிறின்கிறாஸ் ஹோட்டல் சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி பி.தயாளன் வெற்றியாளர்களான ம.டெனிஸ்ரா,வ.தர்சனா ஆகியோருக்கு பரிசுக் கூப்பன்களை வழங்கிய போது...

யாழ்ப்பாணம், மார்ச் 20

சூரியகாந்தியின் 'கொண்டாடுங்கள் குதூகலியுங்கள் பரிசு மழையில்' 09.03.2014 ஆம் திகதிய வெற்றியாளர்களுக்கான பரிசுக் கூப்பன்கள் வழங்கும் நிகழ்வு நேற்று புதன் கிழமை உதயன் பணிமனையில் நடைபெற்றது. உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 50 வெற்றியாளர்களுக்கு பரிசுக்கூப்பன்கள் வழங்கப்பட்டன.

அவர்களுக்கான பரிசுக் கூப்பன்களை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டல் 7,500 ரூபா பெறுமதியான ஒரு பரிசுக் கூப்பனையும், யாழ்ப்பாணம் சாம்ஸன் லாங்குவேஜ் ஸ்கூல் 5,550 ரூபா பெறுமதியான ஒரு பரிசுக் கூப்பனையும், யாழ்ப்பாணம் ராசி கலெக்ஷன் தலா 1000 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும், யாழ்ப்பாணம் லலிதா ஜுவலறி தலா 1000 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும், விசுவமடு உதயா ஸ்ரோர்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான 4 பரிசுக் கூப்பன்களையும், கொழும்பு யுனிலங் காஸ் ப்பளிகேஷன் தலா 500 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும், சுன்னாகம் அபான்ஸ் காட்சி அறை தலா 500 ரூபா பெறுமதியான 2 பரிசுக்கூப்பன்களையும், யாழ்ப்பாணம் நளின் இன்போமேஷன் ரெக்னோலொஜி தலா 500 ரூபா பெறுமதியான 2 பரிசுக் கூப்பன்களையும், கிளிநொச்சி பொன்னம்பலம் ஸ்ரோர்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களையும், யாழ்ப்பாணம் கணேசன் ஸ்ரோர்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களையும் , யாழ்ப்பாணம் வனிகா சேர்ஜிகல்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களை யும், நெல்லியடி கோகில்ஸ் பேபி நீட்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களையும், புதுக்குடியி ருப்பு ஜெயா புத்தகசாலை தலா 200 ரூபா பெறுமதியான ஐந்து பரிசுக் கூப்பன்களையும், பளை மோகன் ஸ்ரோர்ஸ் தலா 200 ரூபா பெறுமதியான ஐந்து பரிசுக் கூப்பன்களையும், நெல்லியடிஅருண் ரெக்ஸ் தலா 200 ரூபா பெறுமதியான ஐந்து பரிசுக் கூப்பன்களையும், முல்லைத்தீவு அறிவொளி புத்தகசாலை தலா 200 ரூபா பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்களையும் வழங்கியிருந்தனர்.

பரிசுக் கூப்பன்களைப் பயன்படுத்தி பரிசுக்கூப்பனில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பொருள்களை கொள்வனவு செய்ய முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10-21)

## அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

வலி. வடக்கு, மார்ச் 20

முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கான கிராமங்களின் அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் கரைதுரைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களின் கீழ் வரும் அனைத்துக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளையும் இதில்கலந்து கொள்ளும் படி மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் தெரிவித்துள்ளார். (வ-86)

# மனித உரிமை செயற்பாட்டாளர்களின் நியாயமற்ற கைதுக்கு கடும் கண்டனம்

### தேசிய சமாதான சபை அறிக்கை

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி வெளிப்படைத்தன்மை போன்ற செயற்பாடுகளை முன்னெடுங்கள் என்று தேசிய சமாதான சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ருக்கி பெர்னாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை. தொடர்பாகக் கவலை தெரிவித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இவர்கள் இருவரும் மனித உரிமை செயற்பாட்டில் முன்னின்று உழைத்தவரும் முக்கிய பிரமுகர்களாவர். தேசிய சமாதான சபையில் அவர்கள் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். நிலையான அமைதிக்கும் மீள் நல்லிணக்கத்துக்கும் மனித உரிமை மேம்பாட்டுக்கும் அவர்கள் வழங்கியுள்ள பங்களிப்புக்கள் கேள்விக்கு உரியவையன்று. அவர்கள் இருவரும் கிளிநொச்சியில் காணாமற்போனவர்கள் குடும்பங்களின் நலன்கள் தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காணாமற்போனவர்களின் உறவினரும்சபையின் உறுப்பினர்களில் ஒருவருமானபாலேந்திரன் ஜெயகுமாரி கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில்வைக் கப்பட்டுள்ளார். அவருடைய இளைய மகன் போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமற்போனவர். திருமதி ஜெயகுமாரி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாதம் மற்றும் போர் தொடர்பான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பான இச்சட்டத்துக்கு போருக்கு பின்னரான காலத்தில் இடம்கிடையாது.

மனித உரிமை செயற்பாட்டாளர்களான ருக்ஷி மற்றும் தந்தை பிரவீன் ஆகியவர்கள் நம்பிக்கை இழந்துள்ளவர்களுக்கு நம்பிக்கை அளிப்பதிலும், தீவிரவாதத்தை இல்லாமல் செய்வதிலும் ஈடுபட்டிருந்தவர்கள். இவர்களுக்கு எதிரான நடவடிக்கையானது நாட்டில் இன்னமும் நியாயமற்ற கைதுகளும், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தடுத்து வைக்கப்படுவதும் தொடர்ந்து இருந்து வருவதாக மனித உரிமைகள் சபை யும், ஜனநாயக உலகமும் எண்ணும்படியான நிலைமையை ஏற்படுத்தும். இவை சர்வதேச மேடைகளில் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வெளிவரவே செய்யும்.

இலங்கை அரசு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும், அரச, சாரா அமைப்புக்களும் ஐ.நா. சாசனத்தின் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

சிவில்நிறுவனங்களான பொலிஸ் அமைப்பு போன்றவை, தமது மனச்சாட்சிக்கு ஏற்ற வகையிலும் நாட்டின் சாதாரண சட்டங்களின்படியும் செயற்பட முடியாமல் இருப்பது குறித்து நாம் கவலையடைகின்றோம்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கடுமையான பிரிவுகளின் படியல்லாமல் விசாரணைகளின் போது நாட்டின் சாதாரண சட்டங்களின்படி சிவில் அதிகாரிகளைச் செயற்பட அனுமதிக்கும் படி அரசைக் கேட்டுக்கொள்கின்றோம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வடக்கில் சிங்களவர்கள், முஸ்லிம்களை மீள குடியமர்த்தாவிட்டால் அமைதி வராதாம்

## இப்படிக் கூறுகிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு,மார்ச் 20
சிங்களவர்கள், முஸ்லிம்களை வடக்கில் மீளவும் குடியமர்த்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அமைதியை உருவாக்க முடியாது. தமது உயிர்களை போரில் இழந்த இராணுவத்தினரின் மிக நெருங்கிய உறவினர்களுக்கும் மற்றும் தம் உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கும் அங்கே காணிகளைப் பெறுவதற்கு உரிமை வழங்க வேண்டும். பாரம்பரிய சொந்த காணி என்பது கொழும்பில் செயற்படுத்த பொருந்தாது என்றால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அது செயற்படுத்தப்படக் கூடாது. தமிழர்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழமுடியும் என்ற கொள்கை சிங்களவர், முஸ்லிம்களுக்கும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு கூறுகிறது ஜாதிக ஹெல உறுமய. மேல் மாகாண சபை தேர்தலையொட்டி ஹெல உறுமய ஊடக பேச்சாளரும் மாகாண சபை பதவிக்கு போட்டியிடுபவருமான நிஷாந்த வர்ணசிங்க எழுதியுள்ள 15 பக்கங்களைக் கொண்ட கைநூலில் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கை நூல் பிரதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது. ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைப் பிரகடனமாக வெளியிடப்பட்டுள்ள இந்தக் கைநூலின் சில பகுதிகள் ஆங்கில பத்திரிகையொன்றில் வெளிவந்துள்ளன.

அவை வருமாறு :-


1960 -70 களில் கடைப்பிடிக்கப்பட்ட வெளி நாட்டுக் கொள்கை மேற்குலக சார்பாகவோ, இந்தியா சார்பாகவோ, சீனா சார்பாகவோ இருக்கவில்லை. அந்தக் கொள்கை இப்பொழுதும் பின்பற்றப்பட வேண்டும். ஆசிய வல்லரசுகளான இந்தியா, சீனா, பாகிஸ்தான் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் சம உறவுகளைப் பேணுவதுடன், வளர்ந்து வரும் தாய்லாந்து, இந்தோனேசியா மற்றும் கொரியா ஆகியவற்றுடனும் நட்பு உறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

ரஷ்யா மீண்டும் மேற்குலகுக்கு எதிராக எழுந்துள்ளது. எனவே பாதுகாப்பு, தொழில் நுட்பம் மற்றும் ராஜதந்திர உறவுகளை ரஷ்யாவுடனும், மத்திய ஆசிய நாடுகளுடனும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் காங்கிரஸ் மற்றும் பி.ஜே.பி. கட்சிகள் இரண்டும் அண்டை நாடுகள் தங்களுக்குக் கீழேயே இருக்க வேண்டும் என்று கருதுகின்றன. இந்தியா, நேருவின் பஞ்ச சீலக் கொள்கையை கைவிட்டு விட்டது. நாம் இந்தியாவின் நேச நாடாகவும் இருக்கவேண்டாம்; பகை நாடாகவும் இருக்க வேண்டாம். எனவே அதன் சில தவறான செயல்களுக்கு எதிராக முனைப்புடன் செயற்பட வேண்டும்.

உதாரணமாக, இலங்கையருக்கு ஒன்லைன் வீசா வழங்கல், வர்த்தகத்தில் முதன்மை அளிப்பது, மீன்பிடிப் பிரச்சினைகளை மற்றும் எமது குடி மக்களுக்கு இடையூறு விளைவித்தல் போன்றவையே அவையாகும்.

இந்தியா அரசியல் ரீதியில் கேரளா, மகராஷ்ட்ரா, உத்தர பிரதேசம், காஷ்மீர் மற்றும் மேற்கு வங்காளம் என்று வேறுபட்டு நிற்கின்றது. நாம் வெளிப்படையாக இந்த மாநில அரசியல் சக்திகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் - இவ்வாறு தெரிவிக்கின்றது அச் செய்தி. (ப)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் இடம்பெறவுள்ள துடுப்பாட்டப் போட்டிக்கான பாடலை இந்துக் கல்லூரி மாணவர்களின் இந்துவின் இளசுகள் குழு நேற்று புதன்கிழமை வெளியிட்டு வைத்தது. பாடல் இறுவட்டை இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா பெற்றுக் கொள்கிறார். 2005 ஆம் ஆண்டின் கல்லூரியின் பழைய மாணவர் ஏற்பாட்டில் பாடல் வெளியீடு இடம்பெற்றது. (வ-10)


## மரண அறிவித்தல்

### யோசப் வேதநாயகம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)



யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும், இல.52/1, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் வேதநாயகம் நேற்று (19.03.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மெக்ரலின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், யோண்சனின் பாசமிகு தந்தையும், பிரியதர்சினி (ஆசிரியை, யா/இளவாலை கன்னியர்மடம் மகாவித் தியாலயம்) அவர்களின் அன்பு மாமனாரும், ஆன்இவோன் சியா, ஆன் ஜெவ்றின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப.03.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு, பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோண்சன் (மகன்).
077 656 9661

52/1, கொழும்புத்துறை வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (30399) (12)(3.6)



## மரண அறிவித்தல்



திருமதி
### பவளரத்தினம் நாகேஸ்வரன்
(இளைப்பாறிய ஆசிரியை)

யாழ். நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி பவளரத்தினம் நாகேஸ்வரன் 17-03-2014 திங்கட்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாபிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், வல்லிபுரம் நாகேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நேசமலர், குணசிங்கம் சொர்ணமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குமரேசன் (லண்டன்), விசாகன்(அவுஸ்திரேலியா- Melbourne), தபேசன் (அவுஸ்திரேலியா- Melbourne) ஆகியோரின் அன்புத் தாயும், பிரபோதினி, பிரமிளா, ஆனந்தி, யசிந்தா கவிதாங்கனி ஆகியோரின் அன்பு மாமியும், திவ்வியா, தர்சன், அக்சனா, அஸ்மிதா, அன்ரனி யோன், அனிசியா யூலி ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20-03-2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 03:00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C12477)(2.3.6) தகவல் : விசாகன் – 075 5573489


### மெய்வன்மைப் போட்டி

வலி.வடக்கு, மார்ச் 20
அளவெட்டி தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்றுவியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் ப.வாமதேவன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வட மாகாண சபையின் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம்கல்விவலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலசிங்கம் கோசலை, அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் ந.உமாகாந்தன்ஆகியோரும்கலந்து கொள்வர். (வ-86)

### பொதுக்கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 20
மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என்று அதிபர் சு.ரேின்பநாதன் அறிவித்துள்ளார். (வ-9)


## பாஷாண உத்வாசன சபிண்டீகரண கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் இந்திராணி தாமோதரம்பிள்ளை
(ஓய்வுநிலை ஆசிரியை - காரைநகர்)

தோற்றம் 28 . 01 . 1940 — மறைவு 07 . 03 . 2014



எமது குடும்ப விளக்கு "இந்திராணி"தாமோதரம்பிள்ளை"அவர்கள் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற போதும் இறுதி நேரத்திலும் மிகுந்த அன்புடன் பணிபுரிந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கும், அன்னார் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து துயரில் பங்கு கொண்டு உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்கள் மற்றும் ஊரவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரது பாஷாண உத்வாசனம் நாளை (21.03.2014) வெள்ளிக்கிழமை காலையிலும் சபிண்டீகரணமும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் நாளை மறுதினம்(22.03.2014) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவிலும் நடைபெறும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தவறுதலாக தனிப்பட்ட அழைப்பில் தங்களை தவறவிட்டிருப்பின்
எம்மை மன்னித்து இதனையே தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தா.குகனேசன்,
மடத்தடி, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை. (30359)(12.3.6)

குடும்பத்தினர்.
T.P.No: 021 300 8209



## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 03 . 03 . 1942 — மறைவு 05 . 02 . 2014



அமரர்
### பொன்னம்பலம் தங்கராசா

கடந்த 05.02.2014 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின்
அந்தியேட்டிக் கிரியைகள்
இன்று (20.03.2014) வியாழக்கிழமை அதிகாலை
கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று,
நாளை (21.03.2014) வெள்ளிக்கிழமை
சபிண்டீகரண நிகழ்வும் மதியபோசன நிகழ்வும்
எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள்
குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

கோணாண்டியா வளவு,
வதிரி, கரவெட்டி. (சி12690) (12.6.3)

மனைவி, பிள்ளைகள்.

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தை உரியமுறையில் பயன்படுத்துங்கள்

## கோப்பாய் பிரதேச செயலக கணக்காளர் கூறுகிறார்

அச்சுவேலி, மார்ச் 20

"அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற மூத்த பிரசைகளின் நலனையும் வாழ்வியல் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளசட்டரீதியிலானஅமைப்பே அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம். அதனை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு ஓய்வூதியம் பெறுவோர் முன்வரவேண்டும்"

இவ்வாறு கூறினார் கோப்பாய் பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி கலைச்செல்வி ரமணன்.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் வை.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கணக்காளர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

"ஓய்வூதியம் பெறுவோரில் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மட்டும் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினராக இணைந்து கொள்கின்றனர். பெரும்பாலானோர் இணைந்து கொள்ளவில்லை. இது தவறான நிலைப்பாடாகும். இதற்கு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நன்மை தொடர்பாக தெரிந்து கொள்ளத் தவறியமையே காரணமாகும்.

ஓய்வூதியம் பெறுவோரின் நலன்களையும், வாழ்வியல் மேம்பாட்டையும்கருத்தில் கொண்டு நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் இந்த நிதியம் நிறுவப்பட்டுள்ளது. சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் அதன் கிளைச் சங்கங்கள் செயற்படுகின்றன. நிதி மோசடிகள் தவறுகள் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. அரச சேவை ஓய்வூதியம் பெறுவோர்நம்பிக்கையோடு உறுப்பினர்களாக இணைந்து அதன் பயன்களைப் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு சங்கத்தின் செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் முன்னணியில் இருப்பது பாராட்டுக்குரியது. அதன் செயற்பாடுகளுக்கு என்னால் முடிந்தவரை உதவ முடியும். ஓய்வு பெற்ற பின்னர் உளவியல் ரீதியில் மனம் தளர்ந்து விடுவதும் உதவி செய்ய யாரும் இல்லையே என்று கவலைப்படுவதும் எமது சமூகத்தில் மேலோங்கிக் காணப்படுகின்றது. இத்தகைய அமைப்புக்களில் சுயவிருப்பின்பேரில் இணைந்து கொள்வதன் மூலம் பல்வேறு விதமான நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். ஒத்த வயதுப் பருவத்தினரோடு கருத்துக்களை பரிமாறிக் கொள்ள முடியும்" - என்றார். (வ-11)

### வாய் சுகாதார தின நிகழ்வு

உலக வாய் சுகாதார தினத்தை யொட்டி கொடிகாமம் பிரதேச மருத்துவமனையினர் கொடிகாமம் அன்னை திரேசா முன்பள்ளியில் இன்று வாய்ச் சுகாதார தின நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட 500 இற்கு மேற்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு 25ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பற்பசைகளையும் தூரிகைகளையும் வழங்கவுள்ளதாக கழகத் தலைவர் லயன் த.இரவீந்திரன் தெரிவித்தார். (வ-9)

---

## மரண அறிவித்தல்

### திருமதி இரஞ்சிதமலர் குலராசசிங்கம்



அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சிதமலர் குலராசசிங்கம் 18.03.2014 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் மயில்வாகனம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் குலராசசிங்கம் (முன்னாள் DOA, நில அளவைத் திணைக்களம், திருகோணமலை) அவர்களின் அன்புமனைவியும், பத்மபிரியதர்ஷினி (ஆஸ்திரேலியா), சத்தியதேவி(ஆசிரியை, யா/அல்வாய் அம் பாள் வித்தியாலயம்), கருணேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர், கொழும்பு/பிலியந்தலை கல்வி வலயம்), பாஸ்கரன் (பிரதி அதிபர், தி/கிண்ணியா மத்திய கல்லூரி [தே.பா] திருகோணமலை), சுபாங்கினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகதாசன் (ஆஸ்திரேலியா), மனோகரன் (கனடா), உஷா (ஆசிரியை, கொ/அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயம்), சுபோதினி (பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் குமரன், கிருஷிகன், திவ்வியன், பிரஷாந்தி, பாணு, கிஷாம், குல்பூஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2014) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு, அல்வாய்.
தொ.பே: 021 226 4528

தகவல் :
குடும்பத்தினர்.

(சி/12771)(7.ஆ.3)

---

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை தங்கராசா

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர் காங்கேசன்துறை)



கேசரி வீதி தையிட்டியைப் பிறப்பிடமாகவும், நெட்டிலிப்பாய் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை தங்கராசா நேற்று (19.03.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான காசிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்ற சிவராசா - நாகேஸ் வரியின் மருமகனும் சுசிலாதேவியின் அன்புக்கணவரும் நித்தியாவின் பாசமிகு தந்தையும் செல்வராசா, சிவராசா காலஞ்சென்ற கங்காதேவி மற்றும் யமுனாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.03.2014) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 4419549, 021 2053406, 077 1292306

தகவல்
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி ரதி மனோகரன்



சங்கானையைப் பிறப்பிடமாகவும், வரியப்புலம் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ரதி மனோகரன் நேற்று முன்தினம் (18.03.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-மீனாட்சி தம்பதியரின் அன்பு புதல்வியும், பொன்னுத்துரை- காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், மனோகரனின் (நாதன்) (தெல்லிப்பழை ப.நோ.கூ.ச.கிளை முகாமை யாளர்) அன்பு மனைவியும், சேயன் (லண்டன்), சிறீசன் (யா/யூனியன் கல்லூரி), துஷாந்தி (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், சத்தியபாமா, காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் சந்திரா, இந்திரா, ஸ்ரீதரன், சிவலிங்கம் (சுவிஸ்), சிவராஜா, கெங்கா, ஸ்ரீகாந்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற மனமோகன் மற்றும் மல்லிகாதேவி, மகாதேவன், மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2014) வியாழக் கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி, இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரியப்புலம்,
சுன்னாகம்.


(45863) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## நீங்காத நினைவுகள்

திதி:சதுர்த்தி
20.03.2014



அமரர் கந்தசாமி தர்மராசா
6 ம் ஆண்டு நினைவு தினம்
வைபத்துள்:09.01.1934
தெய்வத்துள்:26.03.2008





அமரர் தர்மராசா கனகாம்பிகை
16 ம் ஆண்டு நினைவு தினம்
வைபத்துள்:13.04.1935
தெய்வத்துள்:02.11.1997

வாழ்வாங்கு வாழ உயிர் தந்தாய்...உறவென்னும் உடல் தந்தாய்...
கல்வியெனும் சிறகு தந்தாய்..பண்பெனும் மாலை தந்தாய்...
அன்பெனும் ஆடை தந்தாய்...ஏற்றம் எனும் ஏணி தந்தாய்...
உருவத்தெய்வமாய் எம்முடன் இருந்தாய்...அருவத் தெய்வமாய் சடுதியில் வானுறைந்தாய்...
மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் ...ஏழேழு ஜென்மங்களிற்கும் உம்...
மக்களாய் தோன்றும் வரம் தருவாய்...

பிளாக் வீதி
சங்கானை

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
Computer World

# பாதையை விட்டு விலகியது பஸ்

மூன்று பேர் படுகாயம்



பஸ் பாதையை விட்டுவிலகி, அருகிலிருந்த மதிலுடன் மோதியுள்ளது.

*திருகோணமலை,மார்ச் 20*
*திருகோணமலை, மட்கோ சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.*
*மட்கோ சந்தியில் வேகமாக வந்த பஸ் பாதையை விட்டுவிலகி, அருகிலிருந்த மதிலுடன் மோதி, விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.*
*இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள் ளனர்.*
*இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-10)*

## பெற்றோல் குண்டுகளுடன் தம்பதியர் கைது

கொழும்பு,மார்ச் 20
கம்பஹா, மீகஹவத்தை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பெற்றோல் குண்டுகள் உட்பட பல ஆயுதங்களுடன் தம்பதியர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.
8 பெற்றோல் குண்டுகள், கத்திகள், வாள் மற்றும் இரும்பு ஆயுதங்கள் என்பன குறித்த வீட்டிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
கைதான சந்தேகநபர்கள் நாரங்வல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

## கல்வி சாரா ஊழியர்கள் நியமனம்

திருக்கோணமலை, மார்ச் 20
கிழக்கு மாகாண பாடசாலைகளில் கல்வி சாரா சிற்றூழியர்களாக 300 பேர் நியமிக்கப்படவுள்ளனர்.
இந்தவிடயம்தொடர்பாககிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல வீர திஸாநாயக்கவினால் மாகாண அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் பட்ட அமைச்சரவை பத்திரம் தொடர்பாக ஆராய்ந்து இதற்கான அங் கீகாரத்தை அமைச்சரவை வழாங் கியுள்ளது.
கிழக்கு மாகாணத்தில் 618 கல்வி சாரா சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்ற போதிலும், இந்த முறை 300சிற்றூழியர் களுக்கான நியமனம் வழாங்கவே அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. திருகோணமலை, மட் டக்களப்பு, அம்பாறைஆகிய மூன்று மாவட்டங்களுக்கு தலா 100 பேர்என்ற விகிதத்தில் இந்த நியமனங் களை வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ச-40)

## பிரயாணக் கொடுப்பனவை அதிகரிக்க அனுமதி

திருகோணமலை,மார்ச் 20
கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் கடமை புரியும் ஆசிரிய ஆலோசகர்களின் மாதாந்த பிரயாணக் கொடுப்பனவை அதிகரித்து வழங்க கிழக்கு மாகாண சபை அனுமதி வழங்கியுள்ளது.
இந்தத்தகவலைகிழக்குமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டுஉரையாற்றிய போதேஅவர் இவ்வாறு கூறினார்.
மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிப்பதில் பங்களிப்பை செய்து வரும் ஆசிரிய ஆலோசகரின் பிரயாணக் கொடுப்பனவு அதிகரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## தப்பிச்சென்ற இரு சிறுமிகள் காப்பகத்தில் ஒப்படைப்பு

சிறுவர் இல்லம் ஒன்றிலிருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படும் இரு சிறுமிகளை மதுரங்குளி யிலுள்ள சிறுவர் காப்பகத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவி டப்பட்டுள்ளது. இந்தச் சிறுமி கள் இருவரும் கற்பிட்டி வீதி யில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.
அதனையடுத்து புத்தளம் நீதிமன்றத்தில் அவர்களை முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது.
மொறட்டுவ பகுதியிலுள்ள சிறுவர் இல்லத்தில் இருந்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் தப்பிச்சென்றமைக்கான சரியான காரணத்தை பொலிஸாரிடம் தெரிவிக்க வில்லை என்று நீதிமன்றத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஜெனிவா மாநாட்டைக் காட்டி மக்களை ஏமாற்றுகிறது அரசு

*தேர்தல் வெற்றியால் எவ்வித அழுத்தங்களையும் சர்வதேசத்துக்கு வழங்க முடியாது என்கிறார் ஐ.தே.க. செயலர் திஸ்ஸ அத்தநாயக்க*

கொழும்பு,மார்ச் 20
ஜெனிவா மாநாட்டைக் காட்டி அரசு மக்களை ஏமாற்றி வருகி றது. ஜெனிவா மனித உரிமை சபை கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேர ணையை ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே அச்ச மின்றி எதிர் கொள்ள முடியும்.
இவ்வாறு கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
நாராங்வல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மக்கள் தேர்தல் ஒன்றை நடத்துமாறு கோரவில்லை. ஆனால் அரசு பதவிக் காலம் முடியும் முன் மாகாண சபைகளைக் கலைத்து தேர்தலை நடத்துகிறது.
அரசு அத்தியாவசிய பொருள்களுக்கு அதிகளவில் வரிகளை அறவிட்டு வருகிறது. அரசு, தான் மக்களுக்கு வழங் கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை.
போஷாக்குப் பொதி, பாடசாலை மாணவர்களுக்குப் பால், மதிய உணவு, பாதணி போன்ற வற்றை இலவசமாக வழங்கு வதாக அரசு வாக்குறுதி வழங்கியது. எனினும் இது பற்றித் தற்போது பேசுவதில்லை.
இலங்கைக்கு எதிரான ஜெனிவா பிரேரணையைக் காட்டி அரசு மக்களை ஏமாற்றி வருகிறது.
ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே அந் தப் பிரேர ணைக்கு எதிராக அச்சமின்றி முகம் கொடுக்க முடியும்.
அரசு வீண் பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருக்கின்றது. தேர்தல் வெற்றிகளால் ஜெனிவா பிரேரணைக்கு எந்த அழுத் தங்களையும் கொடுக்க முடி யாது.
அரசு மேற்கொண்டு வரும் மின்சார நாற்காலி என்பது பொய்யான கதை. மின்சார நாற்காலிக்கு கொண்டு செல் லும் போர்க் குற்றம் தொடர்பான நீதிமன்றம் என்று எதுவு மில்லை - என்றார். (ச)

# சிவன் ஆலய உடைப்பு; பிரேரணை சமர்ப்பிப்பு

*முன் வைத்தார் எதிர்க்கட்சித் தலைவர்*

மூதூர்,மார்ச் 20
மூதூர், கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன சிவன் ஆலய களஞ் சியசாலைக் கதவுகள் பௌத்த பிக்கு ஒருவரது தலைமையி லான குழுவினால் உடைக் கப்பட்டு, அங்கிருந்த பொருள் கள் சூறையாடப் பட்டன.
இந்த விடயம் குறித்து கிழக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலை வர் எஸ்.தண்டாயுதபாணி அவசர பிரேரணை யொன்றை முன் வைத்துள்ளார்.
இந்தப் பிரேரணையில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப் பதாவது:-
மூதூர் பிரதேசத்திலுள்ள கங்குவேலி கிராமத்தின் புராதன பெருமை வாய்ந்த அகத்தியர் ஸ்தாபன சிவன் ஆலயத்தின் களஞ்சியசாலை அண்மையில் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் வந்த ஒரு குழு வினரால் உடைத்து பல பெறுமதியான பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.
போரால்அழிந்துபோன இந்த ஆலயத்தைப் புனரமைக்கும் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.
இந்த சூழ்நிலையில் புனர மைப்பு பணிகளை குழப்பும் நோக்குடன் இந்த அநாகரிக மான செயற்பாடு இடம்பெற்றுள்ளது.
கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் இதேபோன்ற ஒரு செயற்பாடு திருகோணமலை திரியாய்க் கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத் திலும் நடைபெற்றுள்ளது.
இந்த ஆலயப் புன ரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் அங்கி ருந்த தூண்கள் எடுத் துச் செல்லப்பட்டிருந்தன.
இந்தச் சம்பவங்கள் இந்து மக் களின் மனங்களைப் பெரிதும் புண்படச் செய்துள்ளன. - என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ச-40)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசபூபதி திருநாவுக்கரசு



சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராசபூபதி நேற்று (19.03.2014) புதன் கிழமை காலமானார்.
அன்னார் கந்தையா திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் றஞ்சன், ஜெயா, சசி, சறோ, சாந்தினி காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 20.03.2014) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளாத்தியடி ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராதேவி (தேவி) பரமராசா



சாவகச்சேரி பெரிய மாவடியைப் பிறப்பிடமாகவும், தட்டாதெரு சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி (தேவி) நேற்று (19.03.2014) புதன்கிழமை காலமானார்.
அன்னார் பெரியமாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற இ.போ.ச. சாரதி கணபதிப்பிள்ளை- மகேஸ்வரி (கனடா) தம்பதியரின் அன்புமகளும் பரமராசர் (சின்னத்தம்பி) பிரபல கட்டட ஒப்பந்தகாரர் அவர்களின் அன்புமனைவியும் திருமதி கல்பனா கண்ணன் (லண்டன்), செல்வி கலைச்செல்வி (செல்வி), ராஜ்மோகன் (ராசா - லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான நடராசா (மருந்தாளர்), திருமதி வசந்தாதேவி சபாநாதன், மகேந்திரன், சிவனேந்திரன் மற்றும் திருமதி ராதாதேவி சுரேந்திரன், இராசேந்திரன் (சோதி கனடா), தெய்வேந்திரன் (அப்பன் - லண்டன்), செல்வேந்திரன் (செவ்வன் கனடா), ரவீந்திரன் (பிரதேச செயலகம் தென்மராட்சி), குலேந்திரன் (பொறியியலாளர் கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தியாகராசா (லண்டன்) காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் குணராசா ( ஜேர்மனி), திருமதி த. தேவரத்தினம், திருமதி க. சந்திராதேவி, திருமதி பா.இந்திரேஸ்வரி ஆகியோரின் அன்புமைத்துனியும் கு.கண்ணன் (லண்டன்) அவர்களின் அன்புமாமியும் காந்திரன், காவிகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் வைத்திலிங்கம் மார்க்கண்டுவின் மருமகளும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2014) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சங்கத்தானை, சாவகச்சேரி
க. பரமராசா (சின்னத்தம்பி) கணவர்

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 2014.02.19
புதன்கிழமை இறைபதம்
எய்திய எமது
குடும்பத்தலைவர்

### அமரர் பொன். அப்பையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 20.03.2014 வியாழக்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் பண்டாரி வைரவர் ஆலய முன்றலில் நடைபெற்று அன்னாரது இல்லத்தில் நாளை 21.03.2014 வெள்ளிக்கிழமை 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

அம்பிகை வாசா
புலோலி தென்மேற்கு, புலோலி.

குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அஞ்சமாட்டோம்

30 வருடகால போரின் பின்னர் கடந்த நான்கு வருடங்களில் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நாம் வரவேற்கின்றோம். உலகிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கை ஒரு சிறப்பான நிலையில் உள்ளது. இருப்பி னும் அமெரிக்காவால் முன்வைக்கப்படும் பிரேரணையை நாம் எவ்வாறு நிராகரிப்பது? அமெரிக்கா எமக்கு முக்கியத்துவமான நாடு. அது கொண்டு வரும் பிரேரணையை எம்மால் நிராகரிக்க முடியாது' என்று தெரிவித்தன.

இந்த நாடுகள், அமெரிக்காவுடன் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த நாடுகளுக்கு பிரச்சினை ஏற்படும்போது, அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான கடப்பாடு அமெரிக்காவுக்கு இருக்கின்றது. அதனால் அமெரிக்கப் பிரேரணையை நிராகரிக்க முடியாத நிலையில் அந்த நாடுகள் இருக்கின்றன.

இந்த நாடுகள் உட்பட இன்னும் பல நாடுகள், அமெரிக்கா விடமிருந்து பொருளாதார மற்றும் நிதியுதவிகளைப் பெறுகின்றன. அதனால் அந்த நாடுகள் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளன.

எவருக்கும் அஞ்சமாட்டோம்

இலங்கையில் இன்னுமொரு அரசை நிறுவுவதற்கான நடவடிக்கையே ஜெனிவாவில் முன்னெடுக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில், அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும், அதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. பிரேரணையில் விதந்துரைக்கப்பட்டுள்ள விடயதானங்களுக்கமைய இலங்கை அரசின் செயற்பாடுகளை வெளிநாட்டுக்கு கையளிக்க வேண்டும். இது எமது அரசமைப்புக்கு முரணானது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இறைமையுள்ள அரசின் உரிமையை வெளிநாட்டுக்கு வழங்க முடியாது.

எவர் எவ்வாறான அழுத்தங்களைப் பிரயோகித்தாலும், நாம் அஞ்சமாட்டோம். அரசு என்ற வகையில் எமது செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்போம்.

எமது நடவடிக்கைகளை நாம் சிறப்பாக முன்னெடுப்பதற்கு மக்கள் எமக்கு உறுதுணையாக இருக்கின்றனர். நடைபெறவிருக்கும் மேல் மற்றும் தென்மாகாணசபை மக்கள் அரசுக்கு வாக்களித்து அதிசிறந்த வெற்றியைப் பதிவுசெய்து, மக்கள் எப்போதும் அரசுடனேயே இருக்கின்றனர் என்ற செய்தியை சர்வதேசத்துக்கு வழங்க வேண் டும்" - என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

### வடமாகாண

டுள்ளது. இந்த மாநாட்டுக் கான அனுமதியை மத்திய கல்வி அமைச்சர் பந்துல குண வர்த்தன மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் வழங்கியுள்ளனர்.

"மாநாட்டுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ள போதும், வெளிநாட்டு கல்விப் புலமையாளர்களை இந்த மாநாட்டுக்கு அழைக்கக் கூடாது என்ற நிபந்தனையுடனேயே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள கல்விப் புலமையாளர்களை ஒன்றிணைத்துச் செய்வதற்கே வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளார்" - என்று தெரிவித்துள்ளார் மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.

இந்த மாநாட்டை பிரமாண்டமானதொரு கல்விப்புலம் சார்ந்த மாநாடாக நடத்த திட்டமிட்டிருந்தது. அதற்கான நிதி வளங்கள் தற்போது பிரச்சினையாக இருக்கின்றது. இருப்பினும் எமது அமைச்சின் நிதியிலிருந்தாவது அடுத்த மாதம் மாநாடு நடத்தப்பட்டே தீரும் என்றும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ற-5)

### முதலமைச்சரை

துள்ளது. விரைவுத் தபால் மூலம் இந்த அறிவித்தலை பிரதிவாதிகளுக்கு அனுப்பிவைக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் கடந்த ஜனவரி மாதம் இரண்டாவது தடவையாகத் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தவிசாளர் பதவியிலிருந்து அன்னலிங்கம் உதயகுமார் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தார். கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு சட்டத்துக்கு முரணானது. ஏனெனில் வரவு- செலவுத் திட்டம் கடந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

அதன் பிரகாரம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடத்திய வரவு-செலவுத் திட்டக் கூட்டம் சரியானதென்று ஏற்றுக் கொண்டு, அதில் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதை அங்கீகரிக்க வேண்டும். மேலும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சபையில் கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பொழுது, அதில் சில முன்மொழிவுகள் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் அன்றைய தினம் வரவு-செலவுத் திட்டத்தை வாக்கெடுப்புக் விட முடியாத நிலையிலும், செயலாளர் வாக்கெடுப்புக்கு விட்டமை தவறு.

டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டம், தவறானது என்று முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையம் தெரிவித்துள்ளது. குறித்த கூட்டத்துக்கு உரிய முறையில் கடிதங்கள் அனுப்பியே கூட்டம் சட்டப்படி நடத்தப்பட்டது. எனவே அன்றைய கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் நிறை வேற்றப்பட்டமையை நீதிமன்றம் அங்கீகரிக்க வேண்டும் முன்னாள் தவிசாளர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு ஆராய்வு

நேற்றையதினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, முதல் முறையாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்ததாக மனுதாரர் சார்பாக நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன சுட்டிக்காட்டினார். ஆயினும், இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதேச சபையின் உறுப்பினர்கள் சிலர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையின் கீழ், 2014 ஆம் ஆண்டிற்கான பிரதேச சபையின் வரவு- செலவுத்திட்டம் சட்டரீதியாக நிறைவேற்றப்பட்டதா என்பது குறித்து ஆராயும் பொருட்டு மூவரைக் கொண்ட குழுவொன்று நியமிக் கப்பட்டிருகின்றது என்று முதல மைச்சரினால் மனுதாரருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட் டிருந்தது. சட்டத்துக்குமுரணான அந்தகுழு முன்னிலையில் பிரசன்னமாகியதன் பின்னர், வரவு - செலவுத் திட்டம் மீது வாக்கெடுப்பினை நடத்துமாறு முதலமைச்சர் பிரதேச சபைத் தலைவருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததாக மனுதாரர் கூறியுள்ளார். இரண்டாம் முறையாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வரவு- செலவுத் திட்டம் மூன்று மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டதாகவும், அதனையடுத்து, பிரதேச சபைத் தலைவர் பதவிநீக்கப்பட்டு, அந்த பதவியின் பொறுப்புகள் பிரதேச சபை செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் மனுதாரர் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தினார்.

இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என்பதால், வட மாகாண முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை செல்லுபடியற்றதாக்கி, தம்மை மீண்டும் பிரதேச சபைத் தலைவராக நியமிக்குமாறு மனுவில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 4 ஆம் திகதி பிரதிவாதிகளான வடக்கு மாகாண முதலமைச்சர், வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச சபையின் செயலாளர், பிரதேச சபை, முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவினர் ஆகியோரை அன்றையதினம் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-5)

### வடக்கில்

ஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினரான கஜீபன் என்பவரே இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் இருக்கின்றார் என்று தெரிவித்து அவரைத் தேடப்படுபவராக பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் அறிவித்தனர்.

குறித்த கஜீபன் என்று அழைக்கப்படும் கோபி தலைமையில் வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதாகவும், இது தொடர்பில் நடத்தப்பட்ட தேடுதலில் மோட்டார் எறிகணை, ஆர்.பி.ஜி, 3 கை எறி குண்டுகள், 2.5 கிலோ கிராம் கிளைமோர், ரி-56 ரக துப்பாக்கிகள் என்பவற்றை பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் கைப்பற்றினர் என்று இலங்கை அரசு ஜெனிவாவில் தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து குழு வருகை குறித்த சந்தேகநபரைத் தேடிச் சென்றபோதே, கிளிநொச்சி தருமபுரத்தில் ஜெயகுமாரி வீட்டிலிருந்து பொலிஸார் மீது சந்தேகநபர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து ஜெயகுமாரி கைது செய்யப்பட்டார்.

மேலும் இது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள கொழும்பிலிருந்து வடபகுதிக்கு வந்துள்ள பயங்கரவாத தடுப்பு பொலிஸ் பிரிவு பல்வேறு பகுதிகளும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தக் குழுவே மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் கைது செய்திருந்தது.

தொடர் கைதுகள்இதனிடையே கஜீபனுடன் தொடர்பு வைத்திருந்ததாகத் தெரிவித்து, கொக்குவிலைச் சொந்த இடமாகக் கொண்டு தற்போது தெஹிவளையில் வர்த்தக நிலையம் நடத்தி வரும் இருவரை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக ஏழாலையில் இருவர், சுன்னாகத்தில் ஒருவர், விசுவமடுவில் ஒரு பெண், புதுக்குடியிருப்பில் ஒருவர், திருகோணமலையில் தேடப்படும் சந்தேக நபரின் மனைவி, வவுனியாவில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை விட முல்லைத்தீவு மூங்கிலாறில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி ஒருவர் குடும்பத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார். முன்னாள் போராளி அவரது மனைவி மற்றும் 6, 10 வயதான அவரது பிள்ளைகளுடன் குடும்பமாகக் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் அவர்கள் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பது தொடர்பில் எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. (ற-5)

### திருத்தப்பட்ட

வாறு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்கத் தீர்மான வரைவை எதிர்கொள்வதற்காக இலங்கை புது வியூகம் அமைத்து செயற் பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கின்ற நாடுகளை அவர்களின் பிராந்திய ரீதியாகச் சந்தித்து தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது.

இதனடிப்படையிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பை நடத்தியிருந்தனர் இலங்கைப் பிரதிநிதிகள். இந்தச் சந்திப்பில் இலங்கையின் அமைச்சர்கள் மஹிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி சில்வா, மற்றும் ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஆகியோர் கலந்து கொண்டு தமது தரப்பு நியாயங்களை எடுத்து விளக்கியிருந்தனர்.

நிராகரிக்கின்றோம். அந்தக் கலந்துரையாடலின்போதே திருத்தப்பட்ட தீர்மான வரைவையும் இலங்கை நிராகரிக்கின்றது என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

"ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணை என்ற போர்வையில், சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதி இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்க முனைகிறது. அமெரிக்க தீர்மான வரைவின் திருத்தப் பட்ட வடிவமும் கூட ஏற்றுக் கொள்ள முடியாதது. இந்த நகர்வு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிறுவக கோட்பாட்டை மீறுகிறது. தீர்மானத்தை எதிர்த்த போதிலும், மோதல்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு உள்நாட்டு செயல்முறைகளின் மூலம், தீர்வு காண இலங்கை உத்தரவாதம் அளித்திருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வின் போதும், அதற்குப் பின்னரும் ஆபிரிக்க வலய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும். இலங்கைக்கு இன்று ஏற்பட்ட கதி, நாளை இன்னொரு நாட்டுக்கு ஏற்படும் என்பதை மறந்து விடக் கூடாது" என்று அந்தக் கலந்துரையாடலின்போது குறிப்பிட்டுள்ளார மஹிந்த சமரசிங்க. (ற-5)

### அமைதியையும்

தாலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்திப் பொலிஸார் மக்களை அடக்கி ஆள்வதை அவர் வன்மையாகக் கண்டித்தார். தமிழர்கள் இலங்கைப் பொலிஸாரால் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுத்தப்படுகின்றனர் என்பதனையும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தனது உரையில் வெளிப்படுத்தினார்.

அண்மையில் விசுவமடுவில் வைத்து ஜெயகுமாரி மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்ட நடவடிக்கையின்போது பொலிஸார் செயற்பட்ட விதம் தமக்குப் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் அங்கு கூறினார்.

வடக்கில் நீதியை நிலை நிறுத்துவதில் பொலிஸார் பக்கச் சார்புடன் நடந்து கொள்கின்றனர் என்பதையும் அவர் தனது உரையில் குறிப்பிடத் தவறவில்லை. பொலிஸாரின் இந்தப் போக்கினாலேயே நாடு இன்று ஜெனிவா வரை விசாரணையை எதிர்கொண்டு நிற்கின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தனது உரையின்போது சுட்டிக் காட்டினார்.

எனவே இந்த நாட்டில் நிரந்தர அமைதியும் நீடித்த சட்ட ஆட்சியும் நிலை நிறுத்தப் படுவதற்கு ஐக்கிய நாடுகள் அமைதிப் படை இங்கே வரவழைக்கப்பட வேண்டும் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். (த-ற)

### விக்னேஸ்வரனு

தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதிகளாக வடக்கு மாகாண முதலமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், தேசிய பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வழங்கும் நிகழ்வு நேற்று வட மாகாண சபை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போது முதலமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தன்னுடைய அதிகாரங்களை வட மாகாண முதலமைச்சர் குறைத்து விட்டார் . அதிகாரங்கள் குறைக்கப்பட்டதால் மாகாண சபையில் தனது உரிமைகளை இழந்துள்ளார் எனவும் பிரதம செயலாளர் வழக்கு பதிவுசெய்துள்ளார். அவ்வாறு அவர் வழக்கு பதிவு செய்துள்ளது எனக்கு ஒரு வகையில் நன்மைதான். பிரதம செயலாளரைப் போன்று எனக்கு எதிராக செயற்படுபவர்களால் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. இந்த வழக்கு 13 ஆவது திருத்தத்தில் ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் எவை என்பதை நீதிமன்றத்தின் ஊடாக அனைவரும் அறிந்து கொள்ள வாய்ப்பளித்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக வட்டாரங்கள், வடக்கு மாகாணசபையினால் தொடர்ச்சியாக பிரதம செயலாளர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியான தொந்தரவுகள் தொடர்பிலும், பிரதம செயலாளர் தனது கடமைகளைச் சரிவரச் செய்தே இருக்கின்றார் என்பதை நிரூபிப்பதற்குதே குறித்த வழக்குத் தொடரப் பட்டுள்ளது. வடக்கு முதலமைச்சருக்கு எதிராக குறித்த வழக்குத் தொடரப்படவில்லை - என்று தெரிவித்தார். (ற-5)

### துன்னாலை

28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

ஏனைய இரண்டு சந்தேக நபர்களையும் நெல்லியடிப் பொலிஸார் இதுவரை கைது செய்யவில்லை. அதற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. சந்தேக நபர்கள் தலைமறை வாகியிருப்பதனாலேயே கைது செய்ய முடியவில்லை என்று பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.

யுவதியை வன்புணர்வுக் குட்படுத்தியவர்களில் ஒருவர் மந்திகை புலோலியைச் சேர்ந்த ஸ்ரீ கணேசன் சுதாகரன் என்றும் மற்றையவர் துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த பொம்மை என்று அழைக்கப்படும் சண்முகராஜா றஜீவன் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த இருவருமே தற்போது தலைமறைவாகியுள்ளதனால் தேடப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி அரசடியில் கடந்த வருட இறுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த ஹன்ரர்- ஓட்டோ விபத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார். அந்த ஹன்ரர் வாகன சாரதியான கிளவிதோட்டம் துன்னாலை கரவெட்டியில் வசிக்கும் பாலேந்திரன் பிரபாகரன் என்பவரே தற்போது குறித்த வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி வரணியைச் சேர்ந்தவர். அவரது காதலன் அல்வாயைச் சேர்ந்த ஓட்டோ சாரதி. வீதியோரம் ஓட்டோவை நிறுத்தி விட்டுக் இருவரும் கதைத்துக் கொண்டிருந்த போது அவ்வ ளியே மோட்டார் சைக்கிளில் சென்ற மூவர் ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டு குறித்த இளைஞனைத் தாக்கி இருவரையும் பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்றுகூறி பற்றைக்குள் கொண்டு சென்று காதலன் முன்பாகவே யுவதியை மூவரும் வன்புணர்வுக்குட்படுத்தினர் என்று அவர்களால் கூறப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

### தொடர்கிறது

கைகள் மற்றும் வீடுகளுக்கு சென்று விசாரணைகள் மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இங்கு மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. காரணமற்ற இந்த தேடுதல் சுற்றி வளைப்புக்களால் மக்கள் பணியிடங்களுக்கு செல்வது மற்றும் வெளியிடங்களுக்கான பயணங்களை தவிர்த்து வருவதாகவும் தெரிய வருகின்றது. (ஐ-55,426)

### இராணுவத்துக்கு

தெரியவருகின்றது.

இலங்கை இராணுவத்துக்கு தமிழ் பெண்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் வடக்கில் கடந்த சில வாரங்களாகவே மும்முரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தின் இந்த நடவடிக்கைகள் தீவிரம் பெற்றிருந்தன. இராணுவத்தினரால் பெரும் எடுப்பில் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 29 தமிழ் யுவதிகளே இராணுவத்தில் இணைந்துள்ளனர்.

அவர்களுக்கான பயிற்சியை முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஆரம்பித்து வைத்துள்ளார். புதிதாக இராணுவத்தில் இணைத்துப் கொள்ளப்பட்ட 29 தமிழ்ப் பெண்களுக்கும் 16 வாரகால அடிப்படைப் பயிற்சி வழங்கப்படும். அதன் பின்னர் அவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு 109 தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

அதுபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்தும் பெருமளவு தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொள்ள இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. இருப்பினும் அவர்களது முயற்சி பெருமளவில் வெற்றியளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இதேவேளை தற்போது யாழ். மாவட்டத்திலும், தமிழ் இளைஞர் - யுவதிகளைஇராணுவத்தில் இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ற-5)

# துஷ்யந்தன் கோல் மழை; வென்றது ஆதிசக்தி





ஆட்டத்தின் முக்கிய காட்சிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று இடம் பெற்ற ஆட்டத்தில் துஷ்யந்தன் கோல் மழை பொழிய 10:3 என்ற கோல் கணக்கில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றது.

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி திக்கமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை ஆதி சக்தி விளையாட்டுக் கழகமும் உதயதாரகை விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய சில நிமிடம் வரை இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டிருந்தனர்.

நேரம் செல்லச் செல்ல ஆதி சக்தி விளையாட்டுக் கழக அணி வீரர்களின் பந்துப் பரிமாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் உதய தாரகை அணியினர் திணறினர்.

இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்படும் போது 5:2 என்ற கோல் கணக்கில் ஆதி சக்தி விளையாட்டுக் கழகம் முன்னிலையில் இருந்தது.

இதில் ஆதி சக்தி விளையாட்டுக் கழகம் சார்பாக துஷ்யந்தன் 3 கோல்களையும் பிரசாந், குகராசா ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர்.


உதயதாரகை அணி சார்பாக விவேகன், வாகீசன் தலா ஒரு கோலையும் பெற்றனர்.

இடைவேளையின் பின் ஆதி சக்தியின் கையே மேலோங்கி இருந்தது. இதில் ஆதி சக்தி அணியினர் 5 கோல்களையும், உதயதாரகை அணியினர் ஒரு கோலையும் போட்டனர். ஆதி சக்தி அணி சார்பாக துஷ்யந்தன், குகராஜன் தலா இரண்டு கோல்களையும், சுதாகரன் ஒரு கோலையும் போட்டனர். உதயதரரகை அணி சார்பாக யோசவ் சந்திரன் ஒரு கோலையும் போட்டார்.


இறுதியில் 10:3 என்ற கோல் கணக்கில் ஆதி சக்தி விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றது.

(த-400)

# நவீல்ட்-டிறிபேர்க் இன்று மோதல்



கைதடி நவீல்ட்



சாவகச்சேரி டிறிபேர்க் கல் லூரி

யாழ்ப்பாணம்,மார்ச் 20

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணிக்கும் கைதடி நவீல்ட் பாடசாலை அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கடினப் பந்துக் கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலியா அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் கலாநிதி பிலிப் பிறைரரின் வருகையை முன்னிட்டு இன்று காலை 8.30 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகப் பேராயர் கலாநிதி பிலிப் பிறைரர் கலந்து சிறப் பிக்கவுள்ளதுடன் போட்டிகளையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தென்மராட்சி மண்ணின் வரலாற்றில் முதல் முறையாக நவீல்ட் பாடசாலை மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# நெடியகாடு, கரவைச்சுடர் உதைபந்தாட்டத்தில் வெற்றி



யாழ்ப்பாணம், மார்ச் 20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் நெடியகாடு, கரவைச் சுடர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேரம் முடிவில் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் நெடியகாடு விளையாட்டுக்கழக 'பி' அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதிக்கொண்டது.

இதில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து கரவைச் செஞ்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *


யாழ்ப்பாணம், மார்ச் 20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கம் முனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# 20/20 கிரிக்கெட் போட்டி இன்று



தென்மராட்சி, மார்ச் 20

சாவகச்சேரி டிறிபேர்க் தாரகை விளையாட்டுக்கழக ஆரம்ப நிகழ்வினையொட்டி 20/20 கிரிக்கெட் போட்டிஇன்று மதியம் 12 மணிக்கு டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து டிறிபேர்க் தாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவர்களால் டிறிபேர்க் தாரகை விளையாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# ஆசிய இளைஞர் மெய்வன்மைக்கு தயார்படுத்தும் நடவடிக்கைகள்

இதனடிப்படையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான கலந்துரையாடல் கடந்த புதன் கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி, மார்ச் 20

அம்பாந்தோட்டையில் 2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய இளைஞர் மெய்வன்மைப் போட்டிகளில் நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வீர வீராங்கனைகளைப் பங்குபற்றச் செய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மாவட்ட ரீதியில் இது தொடர்பான கருத் தரங்குகளை நடத்தி வருகின்றார்.

இதனடிப்படையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான கலந்துரையாடல் கடந்த புதன் கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சினி ஜெயக் கொடி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-9)

## மன்செஸ்ரர் தத்தெடுத்த இளம் வீரர்கள்

இங்கிலாந்தைச் சேர்ந்த மன்செஸ்ரர் யுனைடெட் உதைபந்து அணியின் பயிற்சி முகாமுக்குப் பாலியல் தொழில் நடத்தும் பெண்ணின் மகன், நொறுக்குத் தீனி விற்பவரின் மகன் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய உதைபந்து அணிகளில் பிரசித்தி பெற்ற மன்செஸ்ரர் யுனைடெட் அணி உலகெங்கிலும் உள்ள வளர் இளம்பருவ மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. பாரதி எயார்டெல் நிறுவனத்தின் உதவியுடன், இந்தியாவில் கடந்த பெப்ரவரியில் மன்செஸ்ரர் யுனைடெட் அணி வீரர்களைத் தேர்வு செய்யும் முயற்சியில் இறங்கியது.

உதைபந்தில் ஆதிக்கம் செலுத்தும் கோவாவில் உள்ள கழகங்கள் மற்றும் பயிற்சிமையங்களில் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ரஞ்சிப் பாய் மற்றும் ஆர்கா தே இருவரும் இங்கிலாந்து சென்று பயிற்சி பெறுவதற்குத் தகுதி பெற்றனர். அவர்கள் இருவரும் வறுமையின் பிடியில் சிக்கியவர்கள்.


ரஞ்சிப்பின் தாய் பாலியல் தொழிலாளி. ஆர்கா தேவின் தந்தை தெருவோரமாக நொறுக்குத் தீனி விற்கும் கடை நடத்தி வருகிறார். தெரிவானது குறித்து ரஞ்சிப்பாய் கூறுகையில்;

**பாலியல் தொழிலாளியின் மகன் என்பதற்காக வெட்கப்படவில்லை. என் தாய்தான் எனக்கு ஊக்க சக்தி, கூடிய விரைவில் இந்தச் சிவப்பு விளக்கு பகுதியில் இருந்து என் தாயாரை மீட்டு விடுவேன் என நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.**

பாலியல் தொழிலாளியின் மகன் என்பதற்காக வெட்கப்படவில்லை. என் தாய்தான் எனக்கு ஊக்க சக்தி. கூடிய விரைவில் இந்தச் சிவப்பு விளக்குப் பகுதியில் இருந்து என் தாயாரை மீட்டு விடுவேன் என நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.

ஆர்கா தே கூறுகையில்; இங்கிலாந்து செல் லும் அணியில் நானும் இடம் பெற்றிருப்பதை இப்போதும் கூட என்னால் நம்பமுடியவில்லை. என் தந்தை பிரேஸில் முன்னாள் வீரர், பீலேயின் ரசிகன். அவர் தான் என் முதல் பயிற்சியாளர். 3 ஆண்டுகளுக்கு முன் புற்றுநோயால் இறந்த என் தந்தையின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்பதே என் இலக்கு என தெரிவித்துள்ளார். (கு)

## வென்றது பங்களாதேஷ்



உலக 20/20 கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் பங்களாதேஷ் அணி 8 இலக்குகளினால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாள அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பராஸ் கட்கா 41 ஓட்டங்களையும், ஷரட் வெசாவ்கர் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அல் அமின் ஹுசைன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலளித்த பங்களாதேஷ் அணி 15.3 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அனாமல் ஹக் 42 ஓட்டங்களையும், ஷகிப் அல் ஹசன் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றனர். (கு)

## வெற்றிக்கு வித்திட்ட கிளார்க்



மைக்கல் கிளார்க்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கேப்டவுனில் நடந்த டெஸ்ட் போட்டியில், ஆஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க் தோள்பட்டைக் காயத்துடன் விளையாடியது தெரியவந்துள்ளது.

சமீபத்தில் தென்னாபிரிக்கா சென்ற ஆஸ்திரேலிய அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1எனக் கைப்பற்றிக் கிண்ணத்தைக் வென்றது.

கேப்டவுனில் நடந்த மூன்றாவது டெஸ்டில் தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர் மோர்னி மோர்கல் வீசிய 'பவுன்சர்' மற்றும் 'ஷோர்ட் பிட்ச்' பந்துகள், ஆஸ்திரேலிய அணியின் அணித் தலைவர் மைக்கல் கிளார்க்கின் முழங்கை, தோள்பட்டை, ஹெல்மட்டை தாக்கியது. இதனைப் பொருட்படுத்தாமல் விளையாடிய கிளார்க், 161 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். தாயகம் திரும்பிய இவர், காயத்தினால் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதைக் கண்டறிய 'ஸ்கான்' எடுக்கப்பட்டது. இதில் இவரது இடது தோள்பட்டை மூட்டுப் பகுதியில் லேசான எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து ஆஸ்திரேலிய அணியின் பிஸியோதெரபிஸ்ட் அலெக்ஸ் கோன்டூரிஸ், மைக்கல் கிளார்க்கின் இடது தோள்பட்டை மூட்டுப் பகுதியில் லேசான எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது 'ஸ்கான்' எடுத்துப் பார்த்ததில் தெரியவந்தது, காயம் குணமடைய ஓய்வு தேவைப்படுகிறது.இவர் விரைவில் குணமடைவார் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார். (கு)

## பஞ்சாப் அணிக்கு பெய்லி தலைவர்

7 ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ள கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு ஆஸ்திரேலிய வீரர் ஜோர்ஜ் பெய்லி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆஸ்திரேலிய அணியின் 20/20 தலைவராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜோர்ஜ் பெய்லி

ஐ.பி.எல் போட்டியில் பஞ்சாப் அணிக்குத் தலைமை வகிக்கவுள்ள 2ஆவது ஆஸ்திரேலிய அணித்தலைவர் பெய்லி ஆவார். முன்னதாக கடந்த இரு பருவ காலங்களில் பஞ்சாப் அணியின் தலைவராக இருந்த ஆஸ்திரேலிய வீரர் கில்கிறிஸ்ட், கடந்த பருவகாலத்தோடு ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாகப் பஞ்சாப் அணியின் பயிற்சியாளர் சஞ்சய் பங்கர் கூறுகையில்; ஜோர்ஜ் பெய்லியைத் தலைவராகத் தேர்வு செய்தது பஞ்சாப் அணியின் ஒருமித்த முடிவு. அவர் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ஷெப்பீல்ட் ஷீல்ட் போன்ற போட்டிகளில் தலைவராக இருந்து சாதித்தவர் என்றார். (கு)



குமார் சங்கக்காரா

“அடுத்த உலகக் கிண்ணத்தின் போது 41 வயதாகிருக்கும். அப்போதும் விளையாடிக் கொண்டிருப்பேன் என நான் நம்பவில்லை.”

## 2015 உலகக் கிண்ணத்தோடு ஓய்வு பெறுகிறார் சங்கா?

2015 இல் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியே நான் விளையாடவுள்ள கடைசி உலகக் கிண்ணப் போட்டி என இலங்கையின் மூத்த வீரரான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். இதனால் அவர் உலகக் கிண்ணப் போட்டியோடு ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலிருந்து விடைபெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

20/20 உலகக் கிண்ணத்தோடு சர்வதேச 20/20 போட்டிகளிலிருந்து விடைபெறவுள்ள சங்கக்கார கூறியிருப்பதாவது:-

ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியைப் பொறுத்தவரையில் நேரத்தை ஒதுக்குவது கடினமானது. இப்போது எனக்கு 36 வயதாகிறது. 2015 உலகக் கிண்ணத்தின் போது 37 வயதை எட்டிவிடுவேன். அடுத்த உலகக் கிண்ணத்தின்போது 41 வயதாகியிருக்கும். அப்போதும் விளையாடிக் கொண்டிருப்பேன் என நான் நம்பவில்லை. 2015 உலகக் கிண்ணமே நான் விளையாடும் கடைசி உலகக் கிண்ணப் போட்டி.

டெஸ்ட் கிரிக்கெட் பொறுத்தவரையில் நல்ல நிலையில், உடற்தகுதி இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து விளையாடலாம். எனது கிரிக்கெட் வாழ்க்கை இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

திரிமன்னே, சந்திமால் ஆகியோர் எனது இடத்தையும், ஜெயவர்த்தனவின் இடத்தையும் நிரப்புவார்கள் என நினைக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (கு)

## 20/20 உலகக் கிண்ணத்தில் நிச்சயம் சதம் அடிப்பேன்




கிறிஸ் கெய்ல்


மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் 20/20 உலகக் கிண்ணத்தில் சதம் அடிப்பேன் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது: என்னால் எந்தச் சூழ்நிலையிலும் சதம் அடிக்க முடியும். சிறப்பாகப் பந்து வீசவும் முடியும். இந்த உலகக் கிண்ணத்தில் சதம் அடிப்பேன் என்று நம்புகிறேன். அணிக்கு நான் நல்ல தொடக்கத்தை கொடுக்க வேண்டும். அது சதமாக இருந்தால் மகிழ்ச்சி அடைவேன்.

ரசிகர்கள் நான் அதிரடியாக விளையாட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் செலவழிப்பதே அதிரடி ஆட்டத்தைப் பார்க்கத்தான். ஆனால் அது எல்லா நேரமும் நடப்பதில்லை. நான் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்துவே முயற்சி செய்வேன்.

நடப்புச் சம்பியனான நாங்கள் கிண்ணத்தைத் தக்க வைத்து கொள்ளவே இங்கு வந்து இருக்கிறோம். ஆனால் அது எளிதானது கிடையாது. அதற்கான சவாலை சந்திக்கத் தயாராக இருக்கிறோம்-இவ்வாறு அவர் கூறினார். (கு)

# ஐ.பி.எல் போட்டிகளின் அட்டவணை வெளியீடு




7ஆவது ஐ.பி.எல். போட்டி அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. மக்களவை தேர்தலையொட்டி பெரும்பாலான போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பங்களாதேஷில் நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிக்கான அதிகார பூர்வ அட்டவணை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.


ஏப்ரல் 16ஆம் திகதி அபுதாபியில் தொடங்கும் முதல் போட்டியில் நடப்புச் சம்பியன் மும்பையும் கொல்கத்தாவும் பலப்பரீட்சை நடத்துகின்றன. சார்ஜாவில் 17ஆம் திகதி நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூர் அணியும் டெல்லி அணியும் மோதுகின்றன.

18 ஆம் திகதி அபுதாபியில் நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணியும் பஞ்சாப் அணியும் மோதவுள்ளன.

போட்டிக்கான அட்டவணை பின்வருமாறு:

ஏப்.18. சன்ரைசர்ஸ் ஹைதராபாத் -றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் (அபுதாபி)
ஏப்.19. றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் -மும்பை இந்தியன்ஸ் ,கொல்கத்தா நைட்ரைடர்ஸ் -டெல்லி டேர்வில்ஸ் (டுபாய்)
ஏப்.20. ராஜஸ்தான் றோயல்ஸ்- கிங்ஸ் லெவன் பஞ்சாப்(ஷார்ஜா)
ஏப்.21. சென்னை சுப்பர் கிங்ஸ் -டெல்லி டேர்டெவில்ஸ் (அபுதாபி)
ஏப்.22. கிங்ஸ் லெவன் பஞ்சாப் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் (ஷார்ஜா)
ஏப்.23. ராஜஸ்தான் றோயல்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் (டுபாய்)
ஏப்.24. றோயல்சலஞ்சர்ஸ் பெங்களூர்- கொல்கத்தா நைட்ரைடர்ஸ்(ஷார்ஜா)
ஏப்.25. சன்ரைசர்ஸ் ஹைதராபாத் -டெல்லி டேர்வில்ஸ் (டுபாய்) ,சென்னை சுப்பர்கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் (டுபாய்)
ஏப்.26. ராஜஸ்தான் றோயல்ஸ் - றோயல்சலஞ்சர்ஸ் பெங்களூர் (அபுதாபி) ,கிங்ஸ் லெவன் பஞ்சாப் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் (அபுதாபி)
ஏப்.27. டெல்லி டேர்வில்ஸ்- மும்பை இந்தியன்ஸ் (ஷார்ஜா) ,சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - சென்னை சுப்பர்கிங்ஸ் (ஷார்ஜா)
ஏப்.28. றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் (டுபாய்)
ஏப்.29. கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் (அபுதாபி)
ஏப்.30. மும்பை இந்தியன்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் (டுபாய்) (த)

# சிம்பாப்வே அதிரடி



நெதர்லாந்து அணிக்கு எதிரான தகுதிச் சுற்று ஆட்டத்தில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் சிம்பாப்வே அணி வெற்றி பெற்றது.

பங்களாதேஷில் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் நெதர்லாந்து சிம்பாப்வே அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இதனை அடுத்துத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நெதர்லாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மட்டும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக அதிரடியாக விளையாடி கூப்பர் 72 ஓட்டங்களை மட்டுமே அதிக பட்சமாக பெற்றார்.

சிம்பாப்வே அணியினர் பந்து வீச்சை பொறுத்தவரை உட்சய 2 இலக்குகளையும் பன்யங்ரே, முஷங்கவே ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிம்பாப்வே அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.

அந்த அணி சார்பாக மஷகட்ஸா 43 ஓட்டங்களையும், ரெய்லர் 49 ஓட்டங்களையும் வில்லியம்ஸ் 26 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் ஷெலார் 2 இலக்குகளையும் வன்டேர், ஹக்ரன், கமீல் ஆகியோர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (த-400)

Architectural CAD Centre
Mathavady lane-Kondavil
Contact No:071 8617972
Civil Mech.
Auto CAD
Lecturer By: K N Muguntharan(D.A)
2D-Drawing and 3D-Modeling
Cert.Auto CAD 2D-Drawing
Cert.Advanced 3D-Modelling in Auto CAD
University of Peratheniya + University of Moratuwa

Architectural CAD Centre
[Drawing and Rafting Unit]
Mathavady lane-Kondavil
படவரைஞர் தேவை(பெண்)
Contact No:071 8617972 mugunth1971@gmall.com

வீடு வாடகைக்குத் தேவை
திருநெல்வேலி, கோண்டாவிலை அண்டிய பகுதியில் வீடு ஒன்று 2 வருடத்துக்கு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 078 615 5929, 021 205 7705
(30393)(3.6.4)

டுபாய் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு
டுபாய் நாட்டில் உள்ள முன்னணி Juice company இல் Helpers 20 பேர் உடன் தேவை.
(Global Shipping Logistics in Dubai)
அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
ஒரு மாதத்துக்குள் பயணம். வயது 18 - 30
நாளை 21.03.2014 ஆம் திகதி டுபாய் நாட்டவர்களால் மு.ப.09.00 மணி - பி.ப.02.00 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகொள்ள: LANKA VOICE 077 792 9475
யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ள - பீற்றர் 077 666 0250
(43217)(12.3.6)

# பயிற்சி ஆட்டத்தில் இலங்கை தோல்வி




மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 20/20 பயிற்சி ஆட்டத்தில் இலங்கை அணி 33 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது. மிர்பூரில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத் தடுப்பைத் தெரிவு செய்தது. இதனை அடுத்த முதலில் துடுப்பெடுத்தாடிக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சிமித்தின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சிமித் 60 ஓட்டங்களையும் சமி 30 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் ஹெரத் 2 இலக்குகளையும், மெண்டிஸ் மற்றும் லக்மல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 173 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்று 33 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது. அந்த அணி சார்பாக டில்சான் 43 ஓட்டங்களையும், குமார் சங்கரார 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக நரைன் 4 இலக்குகளையும், பிராவோ 3 இலக்குகளையும் பட்றி, ரம்பெல் மற்றும் ரூசெல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (த-400)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
After O/L
What Next?
BCHS

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 – 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.

Diploma In English (2Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A1 Exam-Sponsor Visa/ Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை.
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
எமது கல்லூரியிலேயே மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்
சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை.
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system
We gurantee minimum 6.0 band and above
Duration 2 1/2 Months

B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Batch - 01 22.03.2014
Batch - 02 24.03.2014
Batch - 03 29.03.2014
Batch - 04 31.03.2014
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Hotlines : 0777585913 0777222422 0714299935 0777730074
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287
(C/12392)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
தமிழ்க்குழந்தைகளோ அல்லது ஆங்கிலக் குழந்தைகளோ மற்றவர்கள் பேசுவதை அவதானித்தே தத்தம் மொழியைப்பேசப்பழகுகின்றன. மாறாக இலக்கணம் கற்றுவிட்டல்ல!
SAAMSON இல் ஆங்கிலப்பயிற்சியானது இதுபோன்றே உரையாடற் பயிற்சி மூலம் வழங்கப்படுவதால் நீங்கள் யாராக இருந்தாலும் 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 22.03.2014 சனிக்கிழமை
பிரிவு: 4 03.00-05.00
அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், தொழில் தேடுவோர் வெளிநாடு செல்வோர், இளைஞர், யுவதிகள் இணையமுடியும்.
குறிப்பு: வாரநாள் வகுப்புகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

northern PC PARK வடக்கின் கணினிப் பூங்கா
Hot line- 0777 570 124, TP - 021-222 2050, 021-222 0388
HP Pavilion 15 i3 3rd 500/4GB/15.6"/ BT/WIFI/CAM-
Laptop mega offer 66,000/=
Dell 3521 i3 3rd 500/4GB/15.6"/ BT/WIFI/CAM
Windows 8 original
Laptop Bag, Mouse, Headphone Free
MAIN SHOW ROOM - 269E, PALALY ROAD, KANTHARMADAM, JAFFNA, TOWN SHOW ROOM - 10-14, STANLY ROAD, JAFFNA

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.